உ

கடவுள் துணை.

# பப்ராவாகன் சண்டை

## நாடகம்.

இஃது. ம-ள-ள-ஸ்ரீ,

திண்டிவனம் புஸ்தகவியாபாரம்.

தணிகாசல முதலியாரால்.

கொடுக்கப்பட்ட இந்நாடகத்தை

ஷை கறையாங்குட்டை

முனிசாமிமுதலியாரால்

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

ரிஜிஸ்டர்செய்து.

சென்னை ஷை

தனலக்ஷ்மி நர்த்தன அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

[illegible]]    [அணா-8.

ரிஜிஸ்டர்காபிரைட்

[illegible] விக்கினேஸ்வரர்கோவில் வீதி. ஷை.

0-,2MJM7[illegible]
M12
12584

# சண்டை நாடகம்

## விநாயகர் துதி-கவி.

ர்வளருமணிபுரமென் றரசுசெய்யும்
திருமால்ரன்பட்டத்தைமறவாதசீலன்
பார்வளரும்பப்ரவாகன் சரித்திரத்தை
படிமிசையில்நாடகமாய் பாடியாட
யேர்வளருந்தமிழிசையால் கவிகளாக
யெடுத்துரைக்கவன்புடனே மனமகிழ்ந்து
தார்வளரும்மலர்மாது மைந்தனான
தந்திமுகன் திருவடிதன்காப்புதானே.

## சுப்பிரமணியர் துதி கவி.

திருமணி புனையும்மார்பன்
தேவன்மா யவன்பொற்பாதம்
கருதியவிஜயனீன்ற கனமுள்ளபப்ரவாகன்
பெருகிய சண்டைதன்னை
யேர்பெற நாடகமதாக
அருளினல்பாடுதற்கு
அறுமுகன் துணைசெய்வாயே.

## சரஸ்வதி துதி கவி.

மந்திரிசுமதிக்கூட மன்னவன்பப்ரவாகன்
விந்தையாய்சண்டையாட விஜயனுக்குதவுமாயன்
உந்தியிலுதித்தபிர்மன் உயிர்மனையாளாம்வெண்மை
சந்திரவாணியம்மை துணையடிபோற்றிபோற்றி.

சந்தரூப்சொக்கநாதர் கடவு
மதுரைமீனாக்ஷியம்மன்பலாடிமன உ
பதிகுலத்தரசனை மணிபுரபப்பிரவாசன்
அதிசெயக்கதையைத்தானே அருளினால்பாடலுற

## விஷ்ணுதுதி கவி

மந்திரகிரியைத்தானும் மத்தாககாட்டிவானோர்
விந்தையாய்சேஷன்தன்னை வீருடன்கயிறாய்பூட்டி
அந்தவாருதியில்தேவர் அமுர்தமேகடையும்போது
யெந்தையேகூர்மமாநாய் யிணையடிபோற்றிபோற்றி

## இலக்ஷிமிதுதி-கவி.

திரமுள்ளவேதம்நான்கும் திருஷ்ட்டியாயாழிதன்னில்
மறைவாகவைத்தரக்கன் மாளவேமகஷமான
முராஹரிமுகுந்தன்மார்பில் முயன்றிடுமென்னுவுன்னை
வரமருள்மாதுபாதம்வணங்கியே துதிசெய்வோமே.

## ஆசாரியர்வணக்கும் கவி,

யென்னிருள் தன்னைப்போக்கியெழில்மறைமுடிவதாக்கி
உன்னிதசமிஞைப்பூட்டி முயர்வீரன்சைவான
துன்னியசங்கரய்யர் துய்யபாதத்தையானும்
சென்னியின்மீதுவைத்து சிருவநான்பாடலுற்றேன்.

## அவையடிக்கம் விருத்தம்.

முற்றமிழ்நூல்கவியோர்கள் நாடகந்தன்னில்
முன்மலர்ச்ச்தாமரையின் புஷ்பம்தன்னை
பத்தியொருமாலையதாய் தொடுத்தவர்க்கு
விற்கின்றேன்ஆசையானல் ஐந்தாம்வேதம்

வெத்தியபஞ்சபாண்டவ ரஸ்வயாகந்தன்னில்
விளங்கும்பப்பிரவாகன்சண்டை வினவினேனே.

## ஆக்கியோன் பெருமை தரு.

அம்பிகைசிவதருள்மகனே-யெந்தன் ஐங்கரத்தே[illegible]
நம்பின அடியவர்பொருளே-இந்த [illegible]
சூரசம்மாரவடிவேலா-உன்னை [illegible]டகந்த[illegible]
நாரணன்திருமருகோனே-யெ[illegible] சுந்திரஉ[illegible]
கங்கைமதியணிந்தனுதா[illegible] ரஷ்ஷிக்கவேணும்சண்முகனே
சங்கரசம்புவே அ[illegible]யா[illegible]-யென்மேல் சருணைவந்தாளுப்விநோதா
அரக்கரைவ[illegible]-யென்மேல் தயவுபுரிந்தருளுமென் துய்யா
சிறக்க[illegible]தசெய்தமாலே-உந்தன் அன்புகள்வைத்தருளாலே
[illegible]வஉன்னைமறவேன்-உந்தன் திருவடிகெதினுளும் பெருவேன்
[illegible]னே அரிமுகுந்தா-இந்த ரஷ்ஷைகனேவைகுந்தா
[illegible]தவஸ்ரீகளைப்புணர்ந்தாய்-நந்தா அசோதைவளர்த்திடுமைந்தா



## விக்கினேஸ்பரர் கவி.

திருவருள்புகழுங்கோர புரமதில்செழித்துஓங்கும்
அரமதுதழைத்தேயோங்கும் அம்பிகைசொக்கரீன்ற
மறைமுதலமர்ந்தமூர்த்தி மங்குசபாசமேந்தும்
கரமதுவுடையோருன கணபதிவருகின்றாரே.

## விக்கினேஸ்பரர் தரு.

தும்பிமான்முகனிதோ வந்தார் உமையாள்பாலன்
தும்பிமான்முகனிதோ வந்தார்

...ன்முகனுவந்தார்
...ச்சொந்த

அம்பிகையளித்துகந்த
துன்பம்விட்டோடிசிந்த (தும்)

...ாமுமேந்தி
சிந்தித்தப்பேர்க்குசந்தி

கந்தர்வேலர்க்குமுந்தி
கணபதிவயிர்தொந்தி (தும்)

வந்தனமடியவர்க்கும்
சந்தேகமில்லாமல்காந்தும்

...துயரைத்தீர்க்கும்
சிந்தனை... ...தரிக்கும் (தும்)
வந்துவந்தா...

விமலருக்கனுகூலர்
கமலபாதனேசீலர்

வெத்திவேதாந்த... ...லர்
காரணியுமையாள்பாலர் (...ம்)

### பொது வசனம்.

இந்தப்பிரகாரம் விக்கினேஸ்பரர் யாவருக்கும் தெரிசினம்தந்து யெழுந்தருளியிருக்கும்போது அஸ்தினபுரிபட்டணம் பரிபாலினஞ் செய்து வருனின்ற தருமராஜன் தம்பியாகிய அர்ச்சுனமகாராஜனுடைய மணிபுரிபட்டணம் பரிபாலினம்செய்யும் பப்பரவாகமகாராசன் வாசல்கார்த்து வருநின்ற கெட்டியக்காரன் சபைக்குவருகிறவிதங்காண்க.



...வருகின்ற...

...டடியன் தரு.

...வ வாசலதிகாரி
...டியக்காரன் வருகுறான்

...ரபாரமுடன் காருபாருகள் செய்யும்
...வீரனென்றேமிக பாரில்புகழும் மெய்யன் - தீரன்

சிரத்திற்பாகை துலங்க கரத்தில்செங்கோலிலங்க
சிரித்தநடையுடனே உரத்தவிசையுடனே - தீரன்

மீசைமுறுக்கிக்கொண்டு பேசும்மனதைக்கண்டு
ஆசைபாசங்களாகி வாசாகோசரமாக - தீரன்

தாண்டிக்குதிக்கும்நடை வேண்டிக்குலுங்குஞ்சாயல்
நீண்டகைகளைவீசி தாண்டாவிகடம்பேசி - தீரன்

## பொது வசனம்.

அகோதெப்படியென்றால் மணிபுரிப்பட்டணம் பரிபாலினஞ்செய்துவாரநின்றபப்பரவாகன மகாராசன் மந்திரிப்பிரதானிகள் சூழ கொலுவுக்குவருகிற விதங்காண்க.

## பப்பரவாகன் கவி.

மணிபுரமதனிற்செங்கோல் வகுத்திடும்மதிகுலத்தோன்
றணமுகவீரசூரன் நிபுணனாம் பப்பரவாகன்
கணிபுயமாலைபூண்டு சதுரங்கசேனையோடும்
அணிபணியாகச்சூழ அரசனும் வருகின்றானே



பப்பரவாகன் தரு.

செயம்புகழ்மணிநகர் அரசுநெறிசெலுத்தும்
தீரன்பப்பரவாகனனே வெகுபுஜபெலசவுரிய
உதாரகெம்பீரன் னனே
நயம்பெரும்மந்திரிமார்கள் யிருபக்கம்நெருங்கவே
நாகரீகமாதர்கள் சாமரைபோடவே
நாட்டியமாடசிலமாதர்கள் கூட்டமாய்பாட
தூதவர்கள்யெல்லாம் ஓட்டமாய்ஓட
அரசைக்காண வேட்டகர்தேட-சுரு

நித்தியவேந்தர்கள் பத்தியாய்சூழவும்
வித்தகர்பாடிய நற்றமிழாசையும்
வீரசூரனென ஆரபாரமென
சிரசில்மகுடந்தரித்து வெகுஆயுதசரவணை
முரசுபேரிகை யடித்து
சரசகுண உல்லாசன் தர்மப்பரிபாலகன்
தத்துவமுரமைநெரி சதுர்விததந்திரசீலன்
அரசுக்கெதிர்த்தபேர்கள் வருமுயிர்க்குகாலன்
அடுத்துவந்தவருக்கு அருளிய அனுகூலன்

ணர்கள்
தொடுத்து
வீரலக்ஷிமிநேசன்
கு வேடிக்கையானபாசன்
மெச்சுங்கற்பூரவாசன்
சரிகைவேஷ்ட்டி உடுத்தும்வல்லப்பிரகாசன்
குடைபிடிக்கபுல்லர்கள் செயமதுபடிக்க
சங்கோல்நெரி பயமதுதுடிக்க
நடனப்பெண்கள் நயமதுநடிக்க- சரு

உத்தமராசர்கள் ரத்தினமுடிதாழ
வெத்திவிருதுகளை பத்தியாய்ப்பிடித்துசூழ
பகலவ்நென்னவெத்தி மிகவுமேஅரிபத்தி-செய்

இந்திரபோகமதாகவே வெகுபுசபெலசவுரியன்
தந்திரகெம்பீர நாகவே
மந்திரிசுமத்திகூட வாரவேடிக்கையென்ன
வச்சிரசிம்மாதனத்தில் உச்சிதமாகவும்துன்ன
சுந்திரக்கொலுமண்டபம் சோதிப்பிரகாசந்துன்ன
துரைவருங்கப்பணம் திரைவரயெழிதிப்பன்ன
துரைத்தனமனுநீதி செலுத்தியரத்தினசோதி
அதிகமானகீர்த்தி மிகுதியில்அரிபக்தி (சரு)

துரைகள் அனேகர்கள் முறைமுறையாகவும்
விரைவுடன்வருகவே மரையுணராகவும்
வேதகோஷ்ட்டமுடன் ஞாநகீதமுடன (செப)

பப்பராவாகன் கவி.

தருமமென்னுளும்வாழ்க தாரணிதழைத்துவோங்க
கருமங்களணுகிடாமல் கடவுள்தன்தாளேபோற்றி
கிரமமாயெனதுசெங்கோல் கீர்த்தியாயிருக்கவேண்டும்
வறமெனும்ஆதிமூலம்உன்மலர் பாதம்போற்றிபோற்றி.

அகோவாருங்கள் மந்திரி...
மாரிபெய்ந்து விளைவுவெள்ளாண்மை மி...
தா அன்றியும் சிவாலயம்விஷ்ணுவாலயம் பி...
லான ஆலயங்களுக்கு ஆருகாலம்பூசையும் நெய்வேத்...
தும் நடந்துவருகின்றதா சகலசெனங்களும் சுபேக்ஷமு...
ரூர்களா சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி கவி.

மனுநீதிதவரிடாமல் மாதமும்மாரிபெய்ந்து
வினையில்லைதீங்குமில்லை விளைவுமேமிகுதியுண்டு
தனமதுபெருத்துநல்லோர் தருமமும்சிவாலயங்கள்
அனைவரும்சுபேக்ஷந்தானே அரசனேயறிந்திடீரே.

வசனம்.

கேளும்மகாராசனே தேவரீருடைய அரசாக்ஷியில்மாதமும்மாரிபெய்ந்து விளவுவெள்ளாண்மை மிகுதியாகவும் தானதருமங்களும் நடந்து சிவலாயம் விஷ்ணுவாலயம் பிர்ம்மாலயம் பூசைநெய்வேத்தியங்கள் முதலானதும் நடந்துசகலஜெனங்களும் சுபக்ஷமாக யிருக்குறூர்களய்யாசுவாமி.

பப்பரவாகன் திபிதை.

அந்தணர்மூன்றுகாலம் அனுஷ்ட்டானம்சிவயோகங்கள்
முந்தியேவேழ்விவேதம் முரமைகள்தவரிடாமல்
பந்தமாய்நடக்குதோதான் பலஜனுங்குரைவில்லாமல்
சிந்தனையுண்டோமந்திரி செப்புவீரறியத்தானே.

வசனம்.

அகோகேளும் மந்திரிமார்களேபிராமணாள்மூன்றுகாலமுமஸ்த்தானபானங்கள் சந்தியாவந்தனம்காயகயத்திரீயாகாதிகர்மங்கள்யாவ...ரும் தவருமல்நடந்துவருகின்றதா சொல்லுங்கள்மந்திரிமார்களே.

...டைய அரசாக்ஷியில் அந்தணர்க

...ளம் காயேஸ்திரிசெபதபம் வேழ்வி

...வதுரைவில்லாமல்நடந்துவருகுதையாசுவாமி

பொது கவி.

...ரசாளுங்கொலுவிருக்க அஸ்த்திணபுரத்தில்தர்மர்
விரைவுடன்யாகம்செய்ய விட்டதோர்அஸ்வந்தானும்
நிரமதுசிகப்புவெள்ளை நீண்டவால்கருப்புமஞ்சள்
மரகதவடிவமாக மணிபுரம்வருகுதன்றோ.

வசனம்.

அகோதெப்படி யென்றால் பப்பரவாகன மகாராசன் கொலுவாகயிருக்கும் சமையத்தில் அஸ்த்திணபுரத்தில் தருமஜாவானவர்யாகஞ்செய்ய யெத்தனப்பட்டு சுழிசுத்தமுள்ள குதிரைசீரமுழுதும் வெள்ளை வால் கருப்புகழுத்துமயிர் குங்குமவர்ணம் யெடது கால் பச்சைவலதுகால் மஞ்சள் ஒருபவழம்போலும் இவ்விதபஞ்சவர்ண்ணமுள்ளகுதிரையானது வருகிறவிதங்காண்க.

அஸ்வம் தரு.

தருமர்யாகஞ்செய்ய விட்டக்குதிரைதானும்
தாரணிதன்னில் வருகுதே
கருமங்கள்போக்கி வருமங்கள்நீக்கி
கண்ணன்திருவடி யெண்ணும்சிரசில்வைத்து - தரு

பஞ்சவர்ண்ணங்களாக பகரும்சுழிசுத்தமும்
கொஞ்சும்முகத்தினில் தங்கவாருபட்டயந்தொங்க - தரு

நெத்தியில்பட்டமும் நீண்டமுத்துசரமும்
சத்ததண்டைக்கொலுசும் தாவடமணிபூண்டு - தரும

பாகை.

கழிகேன் சுமத்திமந்தி

வசனம்.

இவ்விதமாக அஸ்வமேதக்குதிரையானது
ன்பின்னுல்வரப்பட்ட அர்ச்சுனமகாருசன் அடிவைத்த
லாம் வேழ்விசெய்து அஸ்வம்வசித்தயிடங்களெல்லாம் ஆ
ட்டிதானதருமம் செய்துபின்னுல்வர அந்தகுதிரையானது பாக
யதேசத்தின் கோட்டை ஓரமாய்புல்மேய்ந்துக்கொண்டிருக்க அதை
சுமத்திமந்திரிகண்டு பிடித்துக்கொண்டுபோய் பப்பரவாகனமகாருச
னுடனேசொல்லுகிற விதங்காண்க.



மந்திரி கவி.

மகுடமுந்தரித்துயிர்ந்த மணிநகரசேகேளாய்
அகல்கரைகோட்டைவாசல் அழகிபுல்கள்தன்னை
வகையுள்ள அஸ்வமேய்ந்து வந்ததைப்பிடித்துவந்தேன்
மிகவுமேநெத்திபட்டம் வீரத்தைப்படித்திடீரே

வாரும்மந்திரி இந்தக்குதிரையின் நெத்தியி[illegible]
தை வாசித்துப்பார்க்கும்போது அஸ்தினாபுரத்தில் யெனது பெரியதகப்பனாகியதருமராசன் சத்துருக்களைசெயம் செய்து அஸ்வயாகம் செய்ய அனுப்பினதாகவும் அதின்பின்னாலே வருகிறவர்யென்தகப்பனாகிய அர்ச்சுனமகாராஜன் வருகிறதாகவும் அவனுடனேயெதுத்து செயம்பண்ணப்பட்டவர் முகத்தில்மீசையுள்ள ஆண்பிள்ளையானாலும் இந்தக்குதிரையைப் பிடித்துக்கட்டலாமென்றும் யிந்தப்பட்டயத்தில் யெழுதியிருக்கின்றபடியால் அவர்யின்னம் சற்றுநேரத்தில் வருவார் ஆகையால் யிந்தக்குதிரையை நம்மிடலாயத்தில் கட்டிவையும் மந்திரியாகிய சுமத்தனே.

அர்ச்சுனன் கவி.

இப்படிபப்பரவாகன் யிருக்கின்றவேளைதன்னில்
செப்பியமாத்திமன்னன் செயங்கொள்ளும்விஸ்வகேது
ஒப்பில்லாமேகவர்ன்னன் உயிரனுசாளுவன்தான்
தப்பிலாத்தருமர்தம்பி தனஞ்செயன்வருகின்றானே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் பப்பரவாகன்ன்குதிரையைப்பிடித்து கட்டினமாத்திரத்தில் குதிரையின்பின்னால் விஸ்வகேதுபிரத்திமன்



அர்ச்சுனன் தரு.

ராஜவிசையப்பூபன்வந்தான் அஸ்வத்தின்பின்னே
ராஜவிசையப்பூபன் வந்தான்

பேசும்விஸ்வகேது பிரத்திமன்னன்மேகவர்னன்
வாசவனுசாருவன் யெவர்ஞசுவனுங்கூட (சுரு)

மன்னவரனைவரும் உன்னிதமுடன்வெகு
நன்னயமாகவே யின்னகர்தன்னிலே (ராஜ)

கின்னரிதப்புறவீணை கன்னியர்கள்பாடிவர
மன்னவன்தனஞ்செயனும் பருடவர்த்தனர்சூழ (சுரு)

மண்டலமெங்குமே சண்டுபுகழ்ந்திட
அகண்டிதவீரபராக்கிரம சாலியும் (ராஜ)

அந்தாதுந்துமியோசை அனுமக்கொடிபறக்க
மந்திரிராஜுவத்தோடும் மகிபதிதனஞ்செயன் (சுரு)

அண்டரண்டசாரசரமனைத்தையும் கெர்ப்பத்தில்வைத்துசத்துசகல சீவராசிகளையும் இரக்ஷித்து மெய்ஞானமாக விளங்காநின்ற ஸ்ரீமன்னாராயணரேயென்றைக்கும் மறவாமல் உன்பாதார விந்தகமலங்களுக்குவந்தனம் வந்தனமையா சுவாமி.

அர்ச்சுனன் கவி.

செயம்பெரும்அஸ்வம்பின்னே திரிந்துனும்வந்தோமிப்போ
நயம்பெரும்பட்டணம்போல் நாட்டிலுங்கண்டதில்லை
இயலுள்ளயின்னகற்கு யிரையவனாரோகீர்த்தி
தயவுடன்அம்சத்துவச ராசனேசொல்லுவாயே.

வசனம்.

அகோவாரும் அம்சத்துவச மகாராசனே அஸ்வமேதக் குதிரையின்பின்வந்து அநேகம் ராசாக்களையும் அனேகம் தேசங்களெல்லாம்பார்த்துவந்தோம் யிந்தபட்டணத்தைப்போலே னாங்கண்டதில்லை இந்தப்பட்டணத்தின்னாமதேய மென்ன அவ்வரசன் பெயரென்ன அவன்யெவ்வளவுசாமர்த்தியமுள்ளவன் அதையெனக்குத்தெரியும்படி சொல்லவேண்டும் மகாராசனே.

மக்குப்பிரந்த உன்பிள்ளையாகிய பப்பரவாகனமகாராசனுகும் மகாராசனே.

தூதுவர் கவி.

பாண்டுவின்புத்திரனுன பார்த்தீபாசருணமையா
வேண்டியதேசஞ்சென்றுவெத்திலும் பெற்ரேமந்த
ஆண்டிடுமணிபுரத்துக் கரசனும்பப்பரவாகன்
தூண்டியேகுதிரைதன்னை துணிவுடன்பிடித்தானையா

வசனம்.

வாருமையா அர்ச்சுனமகாராசனே தங்கள்பாதத்திர்க்குவந்தனம் னும் அனேகதேசமெல்லாம் அஸ்வமேதக் குதிரையைவிட்டு திக்குவிஜையஞ்செய்து வந்தோம் யிந்தமணிபுரத்தைப்பரிபாலினம் செய்துவருனின்றபப்பரவாகனமகாருசன்குதிரையைப்பிடித்துக்கட்டிகொண்டானையா சுவாமி.

அர்ச்சுனன் தரு.

நம்மிடக்குதிரையைப்பிடித்தவனாடா அவனை
நாசம்செய்குரேன்ராசர்களே
வம்முசங்களெல்லாம் வகையாய்மாய்க்குரேன்
மதபுசவலுமையை பாணத்தாலழிக்குரேன்-நம்மி

பரமசிவனுநகூட
தயவுடன் அயன்விண்ணோர் உதவியையவேண்டினால்
சகல அஸ்த்திரங்கள் தந்தாலும்
செயஞ்செயமென்றுசொல்லி தீஷ்ஷண்ணியபாணத்தால்
தீய்க்குரேன்னொடியினில் மாய்க்குரேன் அவனைனான்-நம்மிட

அமுசத்துவசன் கவி.

பொரும்பொரும்விசையபூபா புத்திரன் அஸ்வத்தோடு
வரும்வருமென்றுசேனை மணிமுடித்தலைவர்சொல்ல
சரிசரிபார்ப்போமென்குதனஞ்சயன் கோபமார
விரைவுடன்பப்பரவாகன் விநோதமாய்வருகின்றானே

வசனம்.

அகோகேளும் அர்ச்சுனமகாருசனே பொரும் பொரும் பதறு தே உம்மிடகோபத்தைநிறுத்தும் உன்குமாரகனாகியபப்ரவாகனன் மகாவிநோதமாய் சத்துநேறத்தில் குதிரையைக் கொண்டுவருவான் கோபத்தைதணியுமென்குசொல்ல ஆனால் யின்னம் சற்றுநேரம் பார்ப்போம் நீங்கள்சொல்லுகிறது சரிதானென்று அர்ச்சுனமகாருசன்சொல்ல அந்தச்சமையத்தில் பப்பரவாகனன்குதிரயைக் கொண்டு வருகிற விதங்காண்க.

...வாரும மகா
ராசனே.

## பப்பரவர்கனன் தரு.

தந்தையைக்கண்டுசேவிப்போம் மந்திரிகளேயெந்தன் தந்திரிகளே
தந்தையைக்கண்டு சேவிப்போம்
முந்தினான்செய்தவினை யெந்தவினைவிட்டகல- சுரு

மூற்கனே அருள்சிவ னருள்பெரும்மகிபனை
திருவடிபணியவே யிருவருமேவியே- தந்தை

முன்னாள்செய்தவப்பயனோ தந்தையைக்காண
யென்னுகிருபை செய்தேனோ
சொன்னசொல்தவறாமல் மன்னன்யாத்திரையாகி- சுரு

சொற்பொருள்மடமயில் நற்பொருள்னாயகனை
தப்பில்லாமணம்செய்ய யிப்புவிவருகவும்- தந்தை

மன்னவன்பெரியதந்தை யாகங்கள்செய்ய
உன்னித அஸ்வ மதை
வர்ணக்குதிரையுடன் பொன்னகர்க்கதிசுதனும்- சுரு

வாசமுடனேவெகு பாசமதாகவே
நேசமாய்ராசர்கள் பூசுரர்புடைசூழ (தந்தை)

த்துயிந்தபட்டணத்தை தாங்களே அரசாக்ஷக்ஷிச்செய்துக்கொண்டு அடியேனைரக்ஷிக்க வேண்டுமையாசுவாமி.

### அர்ச்சுனன் கவி.

துடியுடனஸ்வந்தன்னை துஷ்ட்டனேபிடித்துக்கட்டி
கெடியுள்ளசேனைவார கீர்த்தியைக்கண்ணால்கண்டு
சடுதியிலஸ்வந்தன்னை சகசியமாய்க்கொண்டுவந்தாய்
வடிவுள்ளதாயாருன்னை வசியற்குப்பெத்தாளோதான்

### வசனம்.

அடாவாடா பப்பரவாகனை நம்மிடகுதிரையைப்பதட்டமாகப்பிடித்துக்கட்டிப்போட்டு என்பின்னால்வந்தசேனைத்திரள்களைப்பார்த்து பயந்து சருணமடையவந்தாய்நீயோஒருக்ஷத்திரியன் உன்னை உன்தாயாரனவள்வசியனுக்குப் பெத்திருப்பாள் நீ யெனக்குப்பிரந்தவனல்ல அப்புரம் போடாவென்று உதைத்துதள்ளினமாத்திரத்தில்பப்பரவாகனன்சொல்லுகிற விதங்காண்க

### பப்பரவாகனன் கவி.

தாதயர்சொன்னவார்த்தை தனையனும்பப்பிரவாகன்
காதினில்லுருசத்ஜைதக் காச்சியேசுருக்கினைப்போல்

[illegible]

வசனம்.

வாரும் சுமத்திமந்திரி அர்ச்சுனருசன்பேரில்சண்டைசெய்யவேண்டும் நமது ரதகசதுரகபதாதிகளெல்லாம் உயித்தியத்துக்குதயாருக பெச்சரிக்கை செய்யுமப்பாமந்திரி.

மந்திரி சொல் வசனம்.

அப்படியே செய்குறேன் மகாராசனே.

பப்பரவாகனன் வசனம்.

நமது யிஷ்ட்டதேவதையாகிய சொக்கநாதரையும் மீனாக்ஷியம்மனையுந்தோத்திரம் செய்வோம் வாருமப்பரமந்திரி.

மந்திரி வசனம்

அப்படியே செய்வோம் வாரும் மகாராசனே.

பப்பரவாகனன் தோத்திரம்.

ஐயனேமதுரையமரந்திடும்பரனே
அடியவர்க்கன்புவைத்தருளும்
துய்யனேசோதிசுடரொளிவிளக்கே
துன்பமில்லாமல்வைத்தென்னை

மைவிழி உமையாள் மனோகராயெந்தன்
மனதினிற்கவலையைத்தீர்த்து
கைவல்யமாகக்கடாக்ஷம்வைத்தருளும்
கடவுளே சொக்கநாயகனே.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 12 MAR 1913 MADRAS.

வசனம்.

அரகரா சிவசிவா மகாதேவா சொக்கநாயகா மீனாக்ஷியம்மாநாள் சண்டைக்குப் போகிறபடியினாலே அடியேன் முன்னாகவந்து தெரிசனந்தரவேண்டுமம்மாள் தாயே.

பப்பரவாகனன் தரு.

ஐயனே மீனாக்ஷியன்புக்குகந்திடும் சொக்கநாதா
மெய்யனே உன்னருள்விளங்கவரந்தாரும் சொக்கநாதா
தந்தைசொன்னவார்த்தையெண்ணிக்குன்னுதே மனம் சொக்கநாதா
அந்தவிசையன் மீதுலடுத்துசண்டைகள் செய்ய சொக்கநாதா
தொண்டனுவருந்தவும் துணைவந்தெனக்கருளும் சொக்கநாதா
அண்டினேன் அடியேனை ஆதரிக்கவேண்டும் சொக்கநாதா
வேல்லையின் றவிமலிசர்வேஸ்வரி அன்னையே
பாலன்வருந்தவும்பார்த்துக்கிருபைசெய்வாய் அன்னையே
அந்தரிசுந்தரிவிந்தைமீனாக்ஷியென் அன்னையே
மைந்தன்வருந்தவும்வந்திடவேணுமென் அன்னையே
வீராதிவீரனைவென்றுசெயங்கொள்ள அன்னையே
வாராயென் கண்முன்னேமைந்தன்தெரிசிக்க அன்னையே

பப்பரவாசனன் கலித்துறை.

மலையிற்பிறந்தசிவஞானமான மாதங்கியே
அலையில்துரும்பதுபோலேயுழன்று அலைகின்றனன்யான்
சிலைபெற்றதீரன் தனஞ்செயன்சேனையை செயிக்கவருள்
நலம்பெற்றதேவியே உன்னிடபாதத்தைநாடினனே.

வசனம்.

அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகிகோடிகோடி சூரியப்பிரகாசசர்வதயாபரி அடியேன் சண்டைக்குப் போகிறபடியினாலே யென்கண்முன்பாகவந்து தெரிசனங்கொடுத்து ரட்க்ஷிக்கவேண்டுமம்மாள் தாயே.

பொது வசனம்.

அப்போது மதுரை மீனாக்ஷியம்மன் சபைக்கு வருகிறவிதங் காண்க



### மீனாக்ஷியம்மன் கவி.

மைந்தனும்பப்பிரவாகன் வருந்திட அந்தவேளை
சுந்திரமீனாக்ஷியம்மன் சோதிபோல்வடிவமாகி
அந்தமாமலர்கள் தூவ அமரர்கள்தோத்தரிக்க
விந்தையாயரசன்முன்னே விமலியும்வருகின்றாளே.

வசனம்.

அகோ ஏதெப்படியென்றால் பப்பரவாகனன் அம்மனைத்தோத்திரம் செய்தபோது மதுரை மீனாக்ஷியம்மன் வருகிறவிதங்காண்க.

மீனாக்ஷி தரு.

மதுரைமீனாக்ஷியம்மன்வாறாள் யிந்த
வையகத்தோர் துதிக்க கோராய்
கதிரொளிபோல்வீச கமகமவெனவாசம்
கதியளித்திடும்நேச கருணைமிகவிலாச

காரணியேபரி பூரணியேதன
வாரணியேயெங்கும் நாரணியே-சரு

கனககவமணிகள் மூடிகள்பளபளென
பொழியும்மலர்மழைகள் சொரியுஞ்சலசலென-மது

உலகத்தையளித்திடுந்தாயாள் உச்சிதபரிமளவாயாள்
பலவிதசேலைகள் பளபளவெளமின்ன
நலமுள்ளமயிலன்னம் நடையில்சிங்காரியென்ன
நற்புதமேமலர்க் கற்பகமே
யெனதற்புதமேபுவி விற்பதமே-சரு

நாரணன்சோதரி யானதயாபரி
வாரணமுகவனை யீன்றபரூபரி-மதுரை

வானவர்பூமழையாலேயிதோ வருஷித்தார்தேவிதன்மேலே
ஞானியர்கண்டிட ஒண்முகன்னின்றிட
கோனும்மகிழ்ந்திட குவலயம்விளங்கிட
கோகிலமேயென் மோகனமேசிவ
பாசமுமே யிடமாகவுமே-சரு

கோமளமிருசெவி ஓலையுமிளனிமதி
வாமனசோதரி மாமுனிவர்களதிபதி-மதுரை

பப்பிரவாகன்துதிக்க அருளாவிதோ
தப்பாமலடியவர் சருணம்சருணமென்பார்
அப்படியேமுனிவர் அஞ்சலியேசெய்வார்
அந்தரியேவெகு சுந்தரியே
மந்தரியேசிவ தந்தரியே-சரு

அரநிடபாகம் அமர்ந்தயீஸ்வரி
வரமதுவந்திட வந்தருளந்தரி-மதுரை

பப்பிரவாகனன் கொச்சகம்.

மாயவன்சகோதரியே மதுரைசொக்கனுயகியே
தூயவனுன்சண்டைசெய்து தோர்வையில்லாவெத்திபெற
சேயனுக்குமுன்னிருந்து திருவடியைத்தந்தருளும்
தாயேபராபரியே சங்கரிமீனாக்ஷியரே.

வசனம்.

அகோகேளுமம்மாள் செகதீஸ்பரி சொக்கனுதரிடபாகம் அமர்ந்திருனின்ற ஒரு ராஜராஜேஜஸ்பறி உன்பாசத்திற்குவந்தனம் நான் சண்டைக்குப் போகிறபடியினாலே அடியேன் வெத்திப்பெரும்படியாக யென்னுடன் கூடயிருந்து ரக்ஷிக்கவேண்டும்மம்மாள் தாயே.

மீனாக்ஷி கவி.

மைந்தனேபப்பிறவாகா மனதினிலச்சம்வேண்டாம்
சிந்தனையில்லாமல்தான் சீருடன்பரிமேலேறி
வந்துனுன்முன்னே நின்று மடிக்குரேன்சேனையெல்லாம்
பந்தமாய்சண்டைசெய்யப் படையுடன்வாருமப்பா

வசனம்.

அகோவாரும் பப்பிறவாகனு நீ யாதொன்னுக்கும் பயப்படவேண்டாம் யென்னுடையமாயக்குதிரையின்பேரில் யேரிக்கொண்டு உன்சண்டைமுனையில் நின்று யெதிரியைவென்று நீவெத்திப்பெரும்படியாகநான்வருகுரேன் நீ சேனாசமுத்திரத்துடனே சண்டைக்கிப் புரப்படும் அப்பாபப்பிரவாகனனே.

பப்பரவாகனன் கவி.

யேரினான் அஸ்வம்பூண்ட றதத்தினிப்பப்பிறவாகன்
சிறியேநடந்தபோது சேனைகள்வீரர்சூழ
பேரிகைடமாரம்மேளம் பெரியவாளிடிகள்போல
பாரினிலதிரயெங்கும் படர்ந்ததுசேனையெல்லாம்

பப்பிரவாகனன் தரு.

ரணறங்கசூரரேவாரும் நவரத்தினமயமானரதத்தின்மேலேரும்
பணிஒத்தகேடயந்தாங்கும் பருத்தபிண்டிபாலம்கைபினிலோங்கும
எனையொத்தஅஸ்திரம்வில்லும் எங்குநிரைந்துமேகவ்வியேகொல்லும்
துணைபெற்றசக்காம்வாளும் தோமாமுதலானஆயுதவகைகள்
முனையொத்தவளைதடியீட்டி முழங்குமந்திரங்கள்முஸ்திப்புசெய்து
அணிவகுத்தேவரும்சூரன் ஆங்காரியாகியதனஞ்செயன்படையை
கெதையம்புவாளுடன்நீண்ட கண்டகோடாலியுமிண்டுடன்கொண்டு
செதைத்துப்போர்செயக்கொடிநாட்டி க்ஷணமதில்கிரும்புவேன்

[தேவர்கள்மகிழ-றணரங்

### பொது கவி.

இவ்விதமாகபப்பரவாகனன் யிடியைப்போலேகொக்கரித்து
விற்பிடித்தரசன்தானும் வெகுண்டதோர்சேனைதன்னை
அற்புதஅஸ்திரத்தன்னால் அகாருதம்செய்யும்போது
நற்பெருஞ்சேனைதன்னில் அனுசாலுவன்யெதிர்த்துநின்ருன்

### வசனம்.

அகேசநெப்படியென்ரு ‍பப்பிரவாகனன் சேனைகளைக்கூட்டிக் கொண்டு அர்ச்சுனமகாருஜனுடைய சேனைகளின்பேரில யெதிர்த்து பாணப்பிரயோகம்செய்கிறபோது அர்ச்சுனனுடைய படையிலிருந் து அனுசாலுவன் யெதிர்க்கிரவிதங்காண்க.



### அனுசாலுவன் தரு நொண்டிச்சிந்து.

வாடாநீபப்பரவாகனுஉன்னிட மதபுஜவலிமையைவாட்டுகிறேன்
ஓடாமலெதிர்த்துநில்லடாநீயிப்போ ஒருகணையால்விழமருகணையில்
பாடாகச்சாய்த்திடுவேன்சேனைகள் பரிகளுங்கரிகளும்மடிந்திடவே
கோடானுகோடியஸ்திரம்பலமுள்ளகொடியபாணத்தையானெடுத்து
[விட்டேன்-வாடா

### பப்பரவாகனன் தரு சிந்து.

விடுத்தபாணத்தைத்தடுத்தேன் அனுசாலுவன்
வேகமாய்நூறுபத்துபாணந் தொடுத்தேன்

அடித்தக்கவசந்தொடுத்தேன் அழிந்திட
அலங்கோலமாய்ச்சேனையை கலங்கவைத்தேன்
திடத்துள்ளமாருகரத்தை வெள்ளம்
சிதரமேவபூமியில் சிவந்திடவே
படுத்துவிழவேமடித்தேன் பார்த்தனும்
பயந்துநடுநடுங்கிப் பார்த்திடவே-விடு

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் பப்பிரவாகனன் அனுசாளுவன்பேரில் பாணப்பிரயோகம் செய்தமாத்திரத்தில் அனுசாளுவன் நிர்வாகிக்கமாட்டாமல் மூர்ச்சையாய் பூமியில் விழுந்தான் அப்போது பிரத்திமன்னன் யெதுத்துச் சொல்லுகிறவிதங்காண்க.

## பிரத்திமன்னன் கவி.

ஐம்புலன்ஒடிங்கித்தேரில் அனுசாளுவன்மூர்ச்சையானுன்
பன்பொடுபிரத்திமன்னன் பெருமூச்சுயெரிந்துசீரி
துன்பமாய்துவக்கும்பாணம்துடித்துடன்யெதிர்த்துகொண்டு
வம்பனைக்கொல்லவென்று மார்தட்டிவருகின்றானே.

வசனம்.

அடாவாடாபப்பிரவாகனு அனுசாளுவமகாராஜன் மூர்ச்சிக்கச் செய்தாயல்லவா யிதோயென்னிட குரூரபாணத்தினுலே உன்னைக் கொன்றுப்போடுவேன் பாரடாபப்பிரவாகனனே.

பிரத்திமன்னன் தரு.

பப்பிரவாகனுஉந்தன்பெருமையாய் யெந்தன்
பாணத்தினுல்கொல்வேன் சிருமையால்
யிப்புவிநடுநடுங்கவே யீசனுமொடுங்கவே
யிந்தக்ஷணத்திலே யெந்தன்பாணத்தால்கொல்வேன் சுரு
யீடாகவே சாடிவிடும்
யினியெனக்குநீ யெதிருவயோ-பப்பர

பப்ப்ரவாகன் தரு.

பிரத்திமன்னனென்றமுடனே உன்னைப்
பெண்கேள்மெச்சிடக் கொண்டனே

அரைச்செஷனக்கன்னிலே ரதத்தின்மேலுன்னேயே
கரும்புவில்லும்பாணமும் இருதுண்டாய்செய்குவேன் - கரு

கத்தரதடா பித்தரீயும்
யித்தாலேநீ செத்துப்போவாய் - பிரத்திம

பிரத்திமன்னன் தரு.

பெண்டுகள்மெச்சுவதென ரியாயேஉலகில்
பேதைசிறுபையில் கண்டியோ
துண்டந்துண்டமாகக் கண்டனைசெய்குரேன்
இன்றயப்பொழுதினில யெமலோகம்செற்குரேன் - கரு

இப்போதுனே தப்பாமலே
மெய்ப்பாகவே வில்பூட்டினேன் - பெண்

பப்பி வாகனன் தரு.

பேதைசிறுபையல்வல்லமைக்ஷணப் பொழுதினில்கொல்
[லுகிரேன்உண்மையாய்
வாதுசெய்யவந்த வல்லமையென்னடா
சேர்திபோல்பணத்தால் துண்டுதுண்டாக்குரேன் - கரு

துஷ்டடாஉன்னே விட்டுவிடும்
முட்டாளேநீ யெட்டேபோடா - பேதை

பிரத்திமன்னன் கந்தார்த்தம்.

விந்தைகளாகநீதான் வெருவிதகுரோனுக
இந்திரசபைகள் தன்னில் யியம்பினரிந்தவார்த்தை
உந்தநற்தந்தையப்போ ஒருநொடிதன்னிலேதான்
யெந்தன்கைப் பாணந்தன்னால்

தரு.

இருதுண்டாய்ச்செய்தேனே மார்புக்கவசம்
அருதுண்டா யெய்தேனே
வருமுடாஉன்னயே அறதுண்டமாக்கவே
யெரிகின்றபாணத்தால் கரிமூடமாக்கவே - இருது

பப்பிரவாகனன் கந்தார்த்தம்.

யுத்தத்தில்நின்றமேதேரும் ஒடிந்துமேசிதறிப்போக
மைக்கொருதேரிலயேறி மன்னவன்பப்பிரவாகன்
யுத்தசன்னுந்தாக ஒருதிவ்வியபாணந்தன்னால்
அஸ்த்திரந்தொடுக்கபிரத்தி

தரு.

மன்னன்தேரழித்தேன் பப்பிரவாகனன்
சின்னமாய்க் 'கிழித்தேன்
சின்னபின்னமதாக வர்ணன்பாணத்தினாலே
உன்னிடரதத்தைநான் மண்ணில்மறைத்தேனே-மன்

பொது கவி.

இருவருமுயித்தியம்செய்து யிடிகள்போல்கொக்கரித்து
வருமந்தரதங்கள்னாரும் வகையரமுரிந்துபோக
எரிகின்ற அக்கினிபோல யெழிலுள்ளபப்ரவாகன்
பெரியபாணந்தன்னால் பிரத்திமன்னனும்மூர்ச்சையானான்

வசனம்.

ஆகோமதப்படி யென்றால் பபபிரவாகனனும் பிரத்திமன்னனும் அனேகநேரம் உயித்தியம் செய்துயிருவருடையரதம் னாருவரையிலும் முரிந்து போக பப்பிரவாகனன்மற்றொருதேரில் யேரிக்கொண்டு பாணப்பிரயோகம் செய்துபிரத்திமன்னனைமூர்ச்சித்துவிழும்படிதள்ளினமாத்திரத்தில் அம்சத்துவசன் யெதுத்துயேதென்றுச்சொல்லுகிற விதங்காண்க.

அம்சத்துவசன் கவி.

ஆரடாபப்பிரவாகா அசட்டியே சேனைதன்னை
போறடாசெய்யவந்த புசபெலந்தன்னையிப்போ
பாரடாயென துகையில் பாணமும்உன்மேல்விட்டு
கூறடாசெய்துஉன்னைக் கூத்தனுக்கிரைசெய்வேனே

வசனம்.

அடாவாடா பப்பிரவாகனு உன்னுடையபுசபெலவல்லமையினலேசேனைகளெல்லாம் அதாகுதம் பண்ணிப்போடுகிருய் அம்சத்துவசமகாருசனென்கிற கீர்த்திவல்லமையைக் கேட்டீரியாயோ யிதோயென்பாணத்துக்கு உன்னை இரை கொடுக்குரேன்பாரடா பப்பிரவாகனு.

அம்சத்துவசன் தரு.

என்னடாபுசபெலவலுமை யென்பாணம்வந்தாலும்
சின்னபின்னமாக்கி விடுமே
உன்னையும்உன்ரதத்தையும் ஒருநொடிதன்னிலே
என்னிடபாணந்தன்னுல் யெமபுரம்சேர்க்குரேன்-யென்

பப்பிரவாகனன் தரு.

யெமபுரிக்கனுப்புவேனென்ருய் யென்பாணந்தன்னுல்
இக்ஷ்கக்ஷணமேஉன்னை யனுப்புவண்டா
அமையும்யென்பாணத்தினுல் அரைக்ஷ்கக்ஷணந்தன்னிலே
இமையவர்நடுங்கவே இதோகொண்டுபோகுதுபார்-யெம

அமுசத்துவசன் தரு.

இதோகொண்டுபோகுதென்ருயே பென்பாணந்தன்னுல்
ரதமுந்துண்டாய் யழிந்தாயே
அதம்பண்ணிஉந்தனிட அக்கிறமந்தன்னையிப்போ
ரதம்பூண்டகுதிரயை நானே அறுத்துவிட்டேன்-இதோ

பப்பரவாகனன் தரு.

நானென்றஆணுவந்தன்னுமே யென்அஸ்த்திரசந்திர
பாணம்தகைத்து விட்டுதே
வீணனவனேயுன்னை காணுமல்மறைக்கும்படி
வானமும்பூமிக்குமொன்ருய் பாணம்தொடுத்துவிட்டேன்-நானெ

பொது கவி.

தொடுத்தபாணங்களெல்லாம் தூதரைப்போலேயேகி
விடுத்திட அமுசத்துவசனும் மூற்சையானுன்
சடுத்தமாயெவர்ன்ஞசுவன் தனையனும்சுவேதனின்ருன்
யெடுத்துவில்சோருமன்னன் யெநுத்துவந்தேதுசொல்வான்

வசனம்.

அகோ தெப்படியென்றால் பப்பிரவாகனன்விட்ட பாணத்தினால் அம்சத்துவசன் மூர்ச்சையாகவிழுந்தபோது யெவர்னுசுவன்குமாரனுகிய சுவேத னென்பவன்யெதுத்து சொல்லுகிர விதம்காண்க.

சுவேதன் கந்தார்த்தம்.

நீயோபப்பிரவாகன் னென்பவன் றணமுக சூரன்முன்னே
நீயேகைக்கனில்பாணமுமேந்திய நின்றமர்புரிகுவதும்
நீயே துணிவுடன்ரதமதிலேரியே நின்றுசரந்தொடுதாய்
நீயோபலமுடன்பாணந் தொடுப்பவன்

தரு.

நெறித்திடுவேனேஉந்தனைனான் தரித்திடுவேனே
அர்த்தசந்திரபாணமென்று விருத்தமாகயிப்போ
தரித்துநாணிதன்னை யருத்துவிட்டேன்பாரீர்-நெரி

பப்பிரவாகனன் கந்தார்த்தம்.

அருத்தனுனென்றுசொன்ன ஆக்கிற்மசுவேதன்தன்னை
விடுத்துனைன்நோகவைய வீரியபாணந்தன்னால்
ரதத்தின்மேல்பப்பிரவாகன் நாணியில்பாணம்பூட்டி
சரத்துடன்சுவேதன்மீதில்

தரு.

சறமாரியெய்தான்திரேகமுழுதும் உருகவேசெய்தான்
கரியமால்முனிவோரும் கண்டுநடுங்கவே
பெரியபாணந்தன்னால் பீரிட்டோடுங்கவே

பொது வசனம்.

அகோதெப்படி யென்றால் பப்பிரவாகனன்விட்டபாணங்களினால் சுவேதன்நிர்வகிக்கமாட்டாமல் பூமியில் மூர்ச்சித்து விழுந்தமாத்திரத்தில் யெவர்னுசுவன்யெதிர்த்து சொல்லுகிர விதங்காண்க.

யெவர்னுசுவன் கவி.

மூர்ச்சையாய்சுவேகன்போக முன்னைபெரும்யெவர்னுசுவன்
துர்ச்சனனென்றுசொல்லி துடிப்புடன்கோபங்கொண்டு

கொச்சிசமுடனேபாணம் கிருகிருவென்றுபூட்டி
அச்சமில்லாமல்நின்று அதிரவேதொடுக்கின்றனே.

வசனம்.

அகோதெப்படியென்றால் சுவேகன்விழுந்தமாத்திரம் எவர்ணசுவன் முன்னின்று மகாஉக்கிரகாறமாக பாணப்பிறயோகஞ் செய்கிறவிதங்காண்க.

பெவர்ணசுவன் தரு.

சண்டைக்கிவாடாபப்பரவாகா சரியோநீபோடா
துண்டனேன்உன்தலைக் கண்ட துண்டமாக
இன்றையப்பொழுதினில் யெமபுரம்சேற்குரேன் (சண்)

பப்பரவாகனன் தரு.

எவர்ணசுவனே அஞ்சாமலே யெதிர்நிற்குமவனே
றிவ்வுறிவ்வுமென்று யெடுக்கும்பாணத்தாலே
கவ்வும்ரதமுரிந்து கலங்கும்படிசெய்தேனே (எவர்)

யெவர்ணசுவன் தரு.

குருகுலத்தானேஎன்பாணத்தால் கொடுமைசெய்தேனே
கெற்வங்கொண்டவுன்னைக் கேவலமாக்குரேன்
திருகல்போல்ரதமதை திகைக்கும்படிசெய்குறேன் ( குரு

பப்பரவாகனன் தரு

களைப்பட்டுவிழ்ந்தாய்யெங்கன் கணையினுல்மாய்ந்தாய்
தொளைப்பட்டுஉன்னிட தோளுஞ்சரியவே
கிளையுடன்சேனைகள் கேடுகெட்டோடவே (களைப்)

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் பப்பரவாகனன் மூர்ச்சைபட அடித்தமாத்திரத்தில் மேகவர்ன்னன் யெதிர்த்து சண்டைசெய்கிறவிதங்காண்க.

மேகவர்ன்னன் கவி.

அறக்கனும்மேகவர்ன்னன் அரசனுமிருக்கும்போது
பெறக்கமில்லாமல்பப்பர வாகனுபெருத்தாயிப்போ

சிறக்கயென் கணைபினாலே க்ஷணத்தினில்பூமிதன்னில்
உலுக்கமாய்மடியச்சேனை ஓடவும்செய்குவேனே.

வசனம்.

அடாவாடாபப்பரவாகனா இருக்ஷதகுலத்திற் பிறந்தகடோர்க் கஜனின் குமாரனாகிய மேகவர்ன்னன் யிநக்குரேனென்று பயமில் லாமல் நம்மிட சேனாசயனியத்தின் பேரில் யெதுத்துசண்டை செய் தாயல்லவா இதோயென்னுடைய ராக்ஷதமாய்கையினாலே உன்னை த்திகைக்கும்படி செய்குரேன் பாணத்தினாலே உன்னையும்உன்சேனை அடங்கலும் மடித்துப்போடுவேன் சண்டைக்குவாடாபப்பரவாகனா.

மேகவர்ன்னன் தரு.

| | |
|---|---|
| மேதினிதன்னிலே | மேகவர்ன்னனென்றால் |
| விண்ணுலகங்களும் | நடுங்குமே |
| அண்ணலுங்கண்டு | ஒடுங்குமே |
| பாதகனேபப்பர | வாகனாஉன்னிட |
| பாணசரங்களினால் | ஆணுவங்கொண்டாய் |
| காதகமாயிப்போ | கானிருமாய்கையால் |
| கண்டிக்குரேன்உன்னைத் | தெண்டிக்குரேன்-மேதினி |

பப்பரவாகனன் தரு.

| | |
|---|---|
| இருக்ஷதமாய்கைக்குநான் | பயப்படுவேனோ |
| னொடியேபாணத்தால் | கொல்லுவேன் |
| உன்னைஓட்ஓட்டாமல்நான் | வெல்லுவேன் |
| தாக்ஷண்ணியமில்லாமல் | சரமாரியாகவே |
| சாடிநேன்வாய்வாஸ்த்திரம் | ஓடாமல்நில்லடா |
| தீக்ஷண்ணியத்தாலுந்தன் | தேரும்பரிகள்போச்சு |
| திகைத்திடவேமனம் | நகைத்திடவேசேனை (ருக்ஷ) |

மேகவர்னன் தரு

| | |
|---|---|
| மலையைப்பிடிங்கியிதோவாரி | யெடுத்துவிட்டேன் |
| வானவர்களெல்லாம் | ஓடவே |
| காணும்உன்மீதினில் | சாடவே |
| பிலமுன்ளசேனைகள் | ரதமும்பொடிபடவே |
| யின்னையுந்தோமரம் | முன்னேயெடுத்தெறிந்தேன் |

துலைதூரம்ஓடினாலும் சும்மாவிடுவதில்லை
தோளுமல்கொல்லுவேன் நோகவெல்லுவேன் - மலை

பப்பிரவாகனன் தரு.

கானக்கூட்டம்போலேகடுக பாணமெடுத்தேன்
காலன்லுலகமதி லேகவே
சாலமில்லாமலே போகவே
தூளுதூளாக்கவும்மலையை யெடுத்துவிட்டேன்
தடாந்துபடாந்துபின்னே அடங்காக்கணையேசாட
மாளவேபூமியில மலைபோல்முரிந்துசாய
வையகமதிக்கவே மெய்யுங்களிக்கவே - கானக்

பப்பிரவாகனன் கவி.

சாடியேபப்பிரவாகன் சாத்தகிநீலத்துவசன்
மோடியால்நிலவுரமான முனைபெரும்மேகவர்ன்னன்
வாடியபயிரைப்போலே வதைத்துமூர்ச்சையாக்கி
தேடியேதனஞ்செயன்மேல் தேரையுந்திருப்பினானே.

வசனம்.

அகோதெப்படி யென்றால் பப்பிரவாகனன்விட்ட பாணங்களுக்கு நிற்வகிக்கமாட்டாமல் மேகவர்ன்னன் யெவர்ன்னசுவன் சாத்தகிமுதலான சேனைசையினியங்களெல்லாம் மூர்ச்சையாகவிழத்தள்ளின மாத்திரத்தில் காலாந்தருத்திரனைப்போலே சீறிவிழுந்து அர்ச்சுனராசன்பேரில் முனைந்துபோகும்போது விஸ்வகேதுவைப்பார்த்து யேதென்றுச் சொல்லுகிற விருத்தாந்த.

அர்ச்சுனன் கவி.

திறமையாய்ப்பப்பிரவாகன் தேரையும்நடத்திக்கொண்டு
வருகிறவுக்கிரந்தன்னை வண்மையைக்கண்ணால்க்கண்டு
அருமையென்விஸ்வகேதா ஆர்பங்கில்தெய்வமுண்டோ
இருவரும்தனிக்கலானோம் யிதற்கென்னசெய்வோமப்பா.

வசனம்.

அகோவாருமப்பா விஸ்வகேதா பப்பிரவாகனனுடைய பராக்கிரமத்தைப்பார்த்தாயோ நாம்யிரண்டுபேர்மாத்திரம் தப்பித்து யிரு

க்குரோரம்மறறவர்கள் யெல்லாம் ரெணகளத்தில் மடிந்துவிட்டார்கள் நாமும்மடிந்துபோக வேளைசம்பவித்தது தற்மபுத்திரர்யாகமும் நிரைவேராமல் விக்கினமாயிருக்கின்றது யிதுவரையில் சமுத்திரமெல்லாந்தாண்டி யிப்போதுசிறியகாலவாயில் முழுகலாச்சுதேயிதற்கு நாம் யென்னசெய்வோம் குமாரகா.

அர்ச்சுனன் தரு

என்னசெய்குவேன்யென்னசெய்குவேன் அடாவிஸ்வகேதா
யிருவரும்நாம்தனிக்கலானோமே அடாவிஸ்வகேதா
மன்னமன்னவர்யெல்லோரும்மாண்டாரே அடாவிஸ்வகேதா
வைகுந்தபதவிசேர்ந்தாரே அடாவிஸ்வகேதா
தருமர்யாகம்முடியாதடா அடாவிஸ்வகேதா
தவரிப்போவதுமெய்யடா அடாவிஸ்வகேதா
கற்மகாலம்வந்துநேர்ந்துதே அடாவிஸ்வகேதா
காலமிப்படியாச்சுதே அடாவிஸ்வகேதா
பப்பிரவாகனனபேர்சொல்லவே அடாவிஸ்வகேதா
பாரில்நடுக்கங்கொள்ளுதே அடாவிஸ்வகேதா
தப்பிப்பிழைத்துநில்லடா அடாவிஸ்வகேதா
தருமரிடத்திற்சொல்லடா அடாவிஸ்வகேதா
ஒருவனும்சண்டைசெய்குரேன் அடாவிஸ்வகேதா
வருவீர்சொற்கமேயேகுமோன் அடாவிஸ்வகேதா
தாம்மமும்தலைக்கார்க்குமோ அடாவிஸ்வகேதா
சுவாமியென்னிடம்நிற்குமோ அடாவிஸ்வகேதா

அர்ச்சுனன் கவி.

மைந்தனேவிஸ்வகேதா வந்தேதோர்சேனைதன்னை
சிந்துசிந்தாகவேதான் சிதரியேமடிந்துப்போச்சி
இந்ததேரர்ரணக்களத்தில் யிருவரும்தனிக்கலானோம்
கந்தனையளித்தனுதன் கருத்ததையரிகிலேனே.

வசனம்.

அகோவாரும் விஸ்வகேதா நம்மிட படையெல்லாம் பரிகொடுத்து விட்டோம்யிரண்டுபேர்மாத்திரம் தனித்திருக்கிரோம் தருமறுசனுக்கு நீ பிரியமுள்ள குமாரகனுகையால் அவரிடம்சென்று நீசுகமாகயிரு நான் ஒருவனும் சண்டைசெய்து குதிரையைக்கொண்டு

வந்து சேற்நேறன் றணகளத்திலாவது மடிந்துவீரசொற்கம சேருகுரேன்யென்று அர்ச்சுனமகாருஜன் சொன்னமாத்திரத்தில் விஸ்வகேது சொல்லுகிரவிதங்காண்க.

விஸ்வகேது தரு.

யென்னயோசனைபண்ணி அய்யனே
மன்னன்பப்பரவாகனன் யென்க்கீடோ-சுரு

உன்னிதப்பட யென்னிடக்கணை
சின்னபின்னமாய் பின்னிவிடுகுரேன்-யென்

துஷ்டனும்சிறு பயலைக் கண்டுநீர்
கஷ்டகாலங்கள்வந்ததென்றே சொன்னீர்-சுரு

யிஷ்டமுடனே நான் அஷ்டதிசையிலும்
விட்டுபோணமே றொஷ்டுசெய்குரேன்-யென்

பஞ்சையாம்சேனையைக் கண்டுநீரய்யனே
தஞ்சமென்றுமேசாற்றுநீர் மெய்யனே-சுரு

அஞ்சலென்றுமே அடுத்துவருகவும்
யென்சிலைக்கணை யேவவிடுகுரேன்-யென்

பார்த்திடும்யெந்தன் பறுக்கிறமவித்தயை
நாற்றிசைபுவியுள்ளோர் புகழவே-சுரு

நடுநடுங்கவே பூமியெங்குமே
யிடிகள் துந்துமி யார்ப்பரிக்கவே-யென்

விஸ்வகேது கவி.

என்னமாசொன்னீரையா யிந்ததோர் அசட்டுவார்த்தை
மன்னவன் விஸ்வகேது உன்வசத்தினிலிருக்கும்போது
சின்னமாயிந்தவார்த்தை தீரமாய்ச்சொல்லொண்ணாது
யென்னிடபறுக்கிறமத்தை இக்ஷணம்கண்ணால்பாராய்.

வசனம்.

அகோவாருமையாசுவாமி அடியேன் இருக்கும்போது உமக்குஎன்னகுறை யிருக்கின்றது இப்பொழுதே யெனக்கு சிலவுகொடுத்

தனுப்பும் னுன்போய் ஒருநிமிஷத்திற்குள் அந்தசாமர்த்தியனைக்க ண்டித்து வருகுரேன் பாருமையாசுவாமி.

அர்ச்சுனன் கொச்சகம்.

அப்பனேயென்கண்மணியே அமர்களத்தில்நீயெனி
கைப்பிடியாய்மன்னர்களை கதரக்கணைதொடுத்து
இப்புவியில்கீர்த்திபெற யென்தமையன்யாகஞ்செய்ய
சொர்ப்ப்முடன்நீயேகி செயம்பெருவாய்மன்னவனே.

வசனம்.

வாருமப்பா குமாரகனுன விஸ்வகேதா நீ உயித்தியத்துக்குச் சென்று யெதிருளியைவென்று தருமருசன்யாகம் நிரைவேரும்படி செயம்பெத்து வருவாய்குமாரகா.

விஸ்வகேது கவி.

வாடாநீபப்பரவாகா உன்வலிவுள்ளசேனையெல்லாம்
பாடாகச்சாய்க்கவந்தேன் பலமுள்ளவிஸ்வகேது
சாடவும்ஒருபாணத்தால் சாடித்துஉந்தன்தேரை
கேடாகச்செயித்துஉந்தன் கெற்வத்தையடக்குவேனே.

வசனம்.

அடாவாடா பப்பறவாகா உன்னுடைய கெற்வத்தினுலேயெ ன்னுடையசேனைகள் யெல்லாம் அதஞ்செய்தாயல்லவா உன்னையிந் தக்ஷக்ஷணத்திலே யெனது பாணத்தினுல் தும்சப்படுத்துகுரேன்வா ரும் பிள்ளாய் பப்பிறவாகனனே.

விஸ்வகேது தரு.

நீயோபப்பரவாகனனென்றிடுங் தீரனே
நெறித்திடுவேனுந்தன்ரதத்தைனுன்கொடியினில் சூரனே
வாடாயென்னுடன்யெதுத்துரணகளத்தில் வீரனே
வாட்டிடுவேன்யினிபூட்டிடுவேன்கணை மாரனே-சுரு

வையகத்திலெந்தனுடன் யெய்யும்பாணத்தினுலே
மெய்யிலுரிகிடவே னையவேகணை
னுட்டிவிட்டேன்மீதில் பூட்டிவிட்டேன்
தேரையோட்டிவிட்டேன்தலை வாட்டிவிட்டேன்யிதோ

தனபதிசதுரங்கம் மயங்கியேோம்படிக்கி
மகிபதிமன்னர்மனங் கலங்கிவாட-நீயோ

பப்பிரவாகன் தரு.

விஸ்வகேதநொன்றும்சிறுபயல் மூடனே
வீறனேவுன்னிடசேனைத்தளங்களைக் கொண்டனே
அர்த்தசந்திரபாணந்தன்னால் வென்றனே
அதோகெதியாகவேஉன்னிடசேனையைக் கொன்றனே-சுரு

அர்த்தசந்திரபாணத்தினால் யுத்தகளந்தன்னிலிப்போ
சத்துருந்தன்மீதில்விட்டு முட்டமடிந்திடவே
சாட்டாதடாரதத்தை ஓட்டாதடா
அகத்தைக்காட்டாதடா மதத்தைமூட்டாதடா
படபடவென்று கீழேவீழுந்தாய்-விஸ்.

பப்பரவாகனன் கவி

தமையனேவிஸ்வகேதா சரீரமும்முழுதும்நோக
இமையினில்உதிரமாக்கி நீண்டவில்லயுமுரித்தேன்
அமையுந்தேர்குதிரைதன்னை அருந்துசாரதியுங்கொன்று
துமசமேசெய்தேனிப்போ தோத்துயோடிப்போவாய்.

வசனம்.

அகோகேளும் தமையனாகியவிஸ்வகேதா யென்னுடைய குரூர பாணத்தினாலேசரீரமுழுதும் றத்தமயமாக்கிகுதிரையைக் கொன்று தேரையும் அழித்துஉன்மனம் நோகச்செய்தேன்யினிமேல் சண்டை செய்யவுன்னாலாகாதுஓடிப்போவதே உத்தமமாகயிருக்கின்றது அண்ணாவே.

விஸ்வகேது தரு.

ஓடிபோவென்றபப்புரவாகனா ஒருநொடிதன்னிலேபாரடா
சாடினேன்ஒருதீக்ஷண்ணியபாணத்தால் சல்லடைக்கண்களாய்து
[ளைத்துஓடவும்
சோடுகுதிரைகள்மடிந்துசாரதிதுலைந்துபோகத்தலையுருண்டுபோகவும்

பப்பரவாகன் தரு.

களைத்திடசெய்விஸ்வகேதா கலங்கவாய்வாஸ்திரம்தொடுக்குறேன்
வளைத்துதேருடன்யெதுத்துவானத்தில்வந்தபம்பரம்போல்சுழலுவும்
இளைத்துகதிரவன்ஒடிங்கிபோறனும் யெரந்துபோனனேவென்றுஅழு
[கவும்-களைத்திட

விஸ்வகேது தரு.

சரியோயெனக்குபப்ரவாகா சடுதியில்பாணம்தொடுக்குறேன்
திருக்குகள்போலவே அருணனும்மண்டலம்
தெரிந்தாரதமது யெரிந்துபோகவும்
வாரிகுதித்தவன் பூமிதன்னிலே
வந்துமூர்ச்சையாய் அசைந்துனேகவும்-சரி

பப்பரவாகனன் தரு.

மன்னனேவிஸ்வகேதாஉன்னுடன் வருகும்பாணத்தைப்பாரடா
முன்னேமார்பினில் உரிகிப்பாய்ந்திட
உதிரமெங்குமே பரவிவருகவும்
பின்னயும்னாருரதங்களழிந்திட பிரண்டுறத்தங்கள்ஆராய்போகவும்

பொது கவி.

ஐந்துனாளிரவுபகல்விஸ்வகேது
அமர்களத்தில்பப்பரவாகனன்உயித்தியம்செய்ய
முந்தியேறுகவனும்றுவணனும்
மூறக்கழுள்ளகுமரேசன்தாருகன்போல்
இந்திரனும்விறுத்திறுசூரன்போலே
யெதுத்திருவர்போறுடிபின்வாங்காமல்
சிந்தைமிகனொந்திடவேவிஸ்வகேது
தொழுதுமனங்கலங்கிமிகத்திகைத்திட்டானே.

வசனம்.

அகோதெப்படி யென்றால் விஸ்வகேதும் பப்பரவாகனனும் ஐந்துனாள் இரவுபகலாய் றுகவனும் றுவணனும் யெதுத்தாப் போலும் குமாரஸ்வாமியும் தாருகனும் யெதுத்தாப்போலவும் தேவேந்திரனும் விருத்திராசூரனும் யெதுத்தாப்போலவும் ஒருவருக்கொருவர் பின்வாங்காமல் உயித்தியம் செய்து விஸ்வகேதுவினுடைய ரதம்சார

தி குதிரையுடன் அழிந்துதிரேகமெங்கும் சல்லடைக்கண்களாகது ளைத்துநிற்கும்போது பப்பரவாகனன் சொல்லுகிறவிதங்காண்க.

பப்பரவாகனன் கவி.

யென்னண்ணுவிஸ்வகேதா யேங்கியேமனந்தளர்ந்தாய்
னுனுன்னைக்கொல்லப்போரேன் நாரணன் தன்னையிப்போ
ஞானமாய்த்துதித்துக்கொள்ளும்கானம்புதொடுக்கப்போரேன்
தானமாயஸ்த்திரங்கள் தருகுரோ வாங்கிக்கொள்ளும்.

வசனம்.

கேளும்அண்ணு விஸ்வகேதா நீ மகாவீரதீர னுகையால் ஐந்து நாள்மட்டும்போருடி யிளைத்துபோய்விட்டீர் உன்னைநான் கண்டிக்குரேன் உன் யிஷ்ட்ட தேவதையான ஸ்ரீ கிருஷ்ணபகவானை தியானம்பண்ணிக் கொள்ளும் உனக்குவேண்டிய அஸ்திரங்கொடுக்கிரேன் அதைவாங்கிக்கொண்டு யென்னுடன் சண்டைசெய்யும் அண்ணுவாகிய விஸ்வகேதா.

விஸ்வகேது தரு.

யேளிதம்சொல்லவசமோ பப்பரவாகா
உன்னைவாளினுல் கொல்வதுநிசமே
காளையேவுன்னிட தோளையருத்துமே
மாளவதைக்கவே வேளையிருக்குது (யேளி)

பப்பரவாகனன் தரு.

அண்ணுவிஸ்வகேதாஉன்னை யிந்தபாணந்தன்னுல்
யுண்ணுகசெய்வேன் பாராய்
யெண்ணுமனுன்சிரசை மண்ணில்தபோதனர்
குண்ணியமுகும்படி பண்ணுவேனிதோபாரய் (அண்ணு)

விஸ்வகேது தரு.

அஸ்திரம்கையிலெடுத்தேன் பப்பரவாகனனே
கெற்சித்துக்கணைகள் தொடுத்தேன்
அச்சமில்லாமலே மெச்சிடுமரசர்கள்
உச்சிதமுடன்வெகு அச்சமாசெய்திட (அஸ்திர)

பப்பரவாகனன் தரு.

அக்கினிஆஸ்திரந்தொடுத்தேன் அண்ணுவுன்மீதில்
மிக்கவேபிரசிவ் விடுத்தேன்

சுக்கிட அக்கினி உக்கிரமுடனேவெகு
மிக்கவேசிரசது திக்கெங்கெரிந்திட (அக்கி)

பொது கவி.

விடுத்திடும்பாணந்தானும் வேகமாய்ப்பாந்துயேகி
திடத்துடன்விஸ்வகேது சிரந்தனையரிந்துக்கொண்டு
மடித்திட அஸ்த்திரந்தானும் வானத்திலேகும்போது
திடுக்கிடதேவரெல்லாம் திகிலடைந்தேகினரே.

வசனம்.

எப்படியென்றால் பப்பரவாகனன் விட்டபாணமது விஸ்வகேது வினுடையசிரசை அரிந்துக்கொண்டு ஆகாயமார்க்கத்தில் யெழும்பிக்கொண்டுபோகிறபோது அரிகரிகோவிந்தா கிருஷ்ணவாசுதேவாபக்தவச்சலாபரமபுருஷோத்தமா வென்று அனேகவிதமாகத் தோத்திரம் செய்துக்கொண்டு அர்ச்சுனனுடைய பாதத்தில் விழுந்தபோது அர்ச்சுனராஜன் மூர்ச்சையடைந்துதெளிந்து யெழுந்திருந்து சொல்லுகிறவிதங்காண்க.

அர்ச்சுனன் கவி.

விழுந்ததோர்சிரசைக்கண்டு விசையனும்நடுநடுங்கி
எழுந்திருந்தடித்துமோதி யிடிவிழுந்ததுபோல்வாடி
அழுந்தியேமூர்ச்சையாகி அய்யய்யோமகனேயென்று
யிழந்தகண்பசுவைப்போலே யேங்கியேபுலம்புவானே

அர்ச்சுனன் தரு.

அருமைமகனேயிந்தவிதிக்காளாய்வந்தாயோ அடாவிஸ்வகேதா
அரசர்தங்களைமுரியச்செய்துநீ அழிந்தாயோ அடாவிஸ்வகேதா
தர்மர்வீமர்மகனெங்கேயென்றால்யென்னசெய்குவேன் அடாவிஸ்வ
தாயார்குந்தியம்மன்கோவென்றழுவாளே தயங்கினேன்யென்செய் [வேன் அடாவிஸ்வகேதா
உன்னைப்பிரிந்துநான்நொந்துவாடிஒண்டியானனே அடாவிஸ்வகேதா
உரிமைமகனைநான்பரிகொடுத்துநான்ஒண்டியானனே அடாவிஸ்வகே
என்னைப்போலேஉலகில்துரோகியெங்குங்காணனே அடாவிஸ்வகே

இனிமேல்பூமியில்பாவியிருந்துனென்றுந்தோணனே அடாவிஸ்வ
குதிரையைப்பிடித்த அரசரெல்லாம்கொள்ளைகொண்டாயோ அடாவி
கொடியப்பாணம்முடியைக்கொய்திட துள்ளிமாண்டாயோ அடாவி
பதியில்தருமர்யாகமுடியாமல்பகைகளாச்சுதே அடாவிஸ்வகேதா
பாண்டவரென்றகீர்த்தியெல்லாம்பாழாய்ப்போச்சுதே அடாவிஸ்வ
வேதமெழுத்து உனக்கிந்தமட்டும்விதித்துவிட்டானோஅடாவிஸ்வகே
வீரசூரனைமடிக்கவும்பரிகொடுத்துகொன்றேனே அடாவிஸ்வகேதா
ஆதரவும்இனியாருக்குணைக்கானேன் ஆதிநாராயணா அரிமாதவனே
அநாதியைப்போலவேஒண்டியானனே ஆதியேஅரி நாரணாசோதியே

அர்ச்சுனன் கவி.

அப்பனேமகனேயெந்தன் அருமையினவிஸ்வகேதா
செப்பமாய்அஸ்வம்பின்னே செயமதுபடைத்துவந்தாய்
இப்புவிதன்னிலேதான்யென்னையும் ஒண்டியாக்கி
கற்பனைபடியேநீயும் களத்தினில்மடிந்திட்டாயோ.

வசனம்.

ஆ ஆ குமாரகனுனவிஸ்வகேதா இதுவரையிலும் அஸ்வத்தின்பி
ன்புவந்து யெதுத்த ராசாக்களையெல்லாம் செயம்செய்து யென்னை
அநாதியாக்கிவிட்டு வீரசொர்க்கத்தை அடைந்தாயோ தருமராசா
வானவர் குமாரன் யெங்கேயென்றுகேட்டால் நான் யென்னசொல்
வேன் மகனே விஸ்வகேதா.

பப்பரவாகனன் கவி.

அழுவதுமெய்தானையா? ஆண்பிள்ளைசௌரியத்தை
முழுதுமேபார்த்தாலிப்போ உமக்குமேனன்றாய்த்தோணும்
இழிவதாயெந்தன்தாயை யெகழ்ந்தவுன்னாவு வந்து
பழுதுகளாகச்செய்வேன் பாணத்தையெடுத்திடாயே.

வசனம்.

ஆ! ஆ!! வாரும் யெனதுதந்தையே நீ அழுகிறதைப்பார்த்தா
ல் யெனக்கு ஆச்சரியமாகயிருக்கின்றது ஆ! ஆ!! வைசியனுக்குப்பிர
ந்த பிள்ளையினுடைய சமர்த்தைமுழுதும் பார்த்தால் நன்றாய்தெரி
யவரும் யென்னுடைய தாயாரை நீர் இகழ்ந்ததினாலே உம்மைநான்
கொஞ்சத்தில் விடுவதில்லை உம்முடைய காண்டீபத்தைக்கையிலெடு
த்துக்கொள்ளும் இதோ சண்டைக்குவருகிறேனையா சுவாமி.



## அர்ச்சுனனுக்கும் பப்பிரவாகனனுக்கும் சண்டை

### பப்பிரவாகனன் தரு.

வைசியனுக்குப்பிறந்த பிள்ளையென்றெனைச்சொன்னீர்
வைசியன்சண்டையைச்சற்றே பாருமையாசுவாமி
வைசியன்பாணங்கள் வாங்கியேகொடுத்துவிட்டேன்
வல்லமையுண்டானால் தடுத்துக்கொள்ளும்சுவாமி

### அர்ச்சுனன் தரு.

சின்னஞ்சிறுபயலே திரமையுனக்கேது
தெரிந்தபப்பரவாகனா ஓடிப்போயையலே
முன்னேவிடுத்தபாணம் முரியஒடித்துவிட்டேன்
என்னோடெதிர்க்கவுந்தான் நீசரியோபயலே-சின்னஞ்

### பப்பரவாகனன் தரு.

தர்ம்மபுத்திரர்யாகம் செய்வாரோயிந்த
தரணியில்யென்கீர்த்தி பரவாதோஅய்யா
கர்மகாலங்கள்வந்து நேர்ந்திட்டுதோ உமக்கு
கதிர்முடிவிஸ்வகேது மடிந்துப்போவதோசுவாமி(தர்)

அர்ச்சுனன் தரு.

கொஞ்சசேனையைக்கொன்ற கொர்வத்தினாலே
கொக்கரித்தார்ப்பரித்தா யடாபிள்ளாய்
பஞ்சையாணப்பயலே பரக்க அடிக்குரேண்
பார்த்தனென்றகீர்த்தி யரியாயோபிள்ளாய் (கொஞ்)

பப்பரவாகன் தரு.

தாசிவேசியென்றும் தாயையிகழ்ந்ததினால்
தர்மஉமதுபங்கில் நில்லாமேசுவாமி
கர்சினியில்கிரீட்டி கீர்த்திமாளச்செய்வேன்
கண்டுக்கொள்சந்திரபாணம் இதோவிடுத்தேன்சுவாமி (தா)

அர்ச்சுனன் தரு.

துஷ்டப்பயலேயிந்த சூடுக்குகள்பேசாதே
தொளைக்கும் அக்கினிபாணம் யிதோ விடுக்தேனபிள்ளாய்
அஷ்டதிக்குமடுங்கும் ஆயிரம் அன்னாறு
அஷ்த்திரந்தொடுத்தேனடா பிள்ளாய் (துஷ்ட்)

பப்பரவாகனன் தரு.

அன்னாறுஆயிரம் அஸ்த்திரத்தைத்தடுத்து
அனுமக்கொடியை பொடித்தேன் அய்யாவே
முன்னும்பின்னுந்தோணமல் மோகனஅஸ்த்திரம்
முடிக்கிறேன்மந்திரபெலம் பாராய்யாசுவாமி (அன்னா)

அர்ச்சுனன் கவி

அந்தமாய்ப்பப்பரவாகன் அர்ச்சுனன்மீதில்பாணம்
விந்தையாயெரிந்தபோது மெய்மரந்தாலோசித்து
முந்திமுக்கோடிதேவர் மும்மூர்த்தியுங்கெலித்துவந்தோம்
இந்ததோராயாசங்கள் யெப்பவுங்காணேன்சுவாமி.

வசனம்.

ஆ! ஆ!! இந்தப்பப்பாவாகனனுடைய பாணமானது யென்னசு ருக்குமுப்பத்துமுக்கோடி தேவர்களேயும் கெலித்தேன் முக்கண்ப டைத்த பரமசிவனேடும் போராடினேன் அப்போதெல்லாம்யிப்பேற் பட்ட ஆயாசங்களைக்கண்டதில்லை அரிகரியென்னசெய்வேன் கர்த்தனே

அர்ச்சுனன் கவி.

காண்டீபம்சோரவிட்டுக் கனத்ததோர்விசாரமாகி
பாண்டவரென்றகீர்த்திப் பாழாகிப்போச்சுதையோ
மாண்டிடக்காலமிப்போ வந்துதேயென்றுயெண்ணி
ஆண்டவன்றனைநினைந்து ஆயுதமெடுக்கின்றானே.

வசனம்.

ஆ! ஆ!! பப்பாரவாகனன் விட்டபாணத்திலே கைகளெல்லாம்அ சந்து காண்டீபத்தைச் சோரவிடும்படியாய் நேரிட்டுதே உலகமெல்லாம் பாண்டவாளென்றகீர்த்திப்பிரதாபமெல்லாம்பாழாகப்போச்சுதே அய்யய்யோ யிதற்குநான் யென்னசெய்வேன் அதுவுமன்றி யெனக்கு மரணகாலம்வந்து சம்பவித்ததுபோல்தோன்றுகிறது அரிகரிகர்த்தனே நல்லதாகட்டும் இந்தசிருபையலை விட்டுவிட்டால் யேளிதமாகும் யிந்தபாணத்திலே பஸ்மீகரமாகச் செய்துப் போடுகிறேன் பாரும் பிள்ளாய்ப்பப்பரவாகனு.

பப்பரவாகனன் கவி.

பார்த்திரோவைசியப்பிள்ளைப் பண்ணினசவுரியத்தை
நாற்றிசைக்கீர்த்திபோற்ற ராசர்கள்மகுடந்தன்னை
கூத்தனைப்போலுடைத்துக் கூர்மைரத்தினங்ளெல்லாம்
சேர்த்துநான்விஸ்வகேது சிரசினைவிற்கின்றேனே.

வசனம்.

அகோர்வாருமையா குந்திமைந்தனேவசியன் பிள்ளைபண்ணினசவுரியத்தைப்பார்த்திரோ ராஜவர்க்கங்களுடைய கிரீடங்களை உடைத்து அதிலிருந்த ரத்தினங்களெல்லாம் வீஸ்வகேதுவின் சிரசின்மேல்ப்போட்டுவிக்கிறயம் செய்குறேன்தேவரீர் ஒருவரும் தனித்துயிருக்குரீர் யெனது அன்னையாகிய சித்திராங்கதையம்மனை வேசியென்றும் தாசியென்றும் தூஷணித்தபடியினாலே உமக்குயிந்தஆபத்து வந்து நேரிட்டது தருமபுத்திரர்யாகம் நிறைவேரப்போகுதோ நீர் குதிரையைவிடுவித்துப் போகப்போரீரோ நல்லதாகட்டும் தந்தையே.

அர்ச்சுனன் கவி.

பப்பரவாகனுமேசொல்லப் பதைத்துமேவிசையன்தானும்
அற்பனைக்கொன்றேமென்றும் ஆணுவந்தன்னையெண்ணி

தப்பிவிப்பயலே துஷ்ட்டா தலைக்கீழாய்விழுந்துப்போருய்
இப்பொழுதென்கையம்பால் யெமபுரிக்கனுப்புவேனே

வசனம்.

ஆ ஆ அடாசிருபையலே பென்செவியால் நாராச்சங்காச்சிவிட்டதுபோலே சொல்லவந்தாயல்லவா கையாலாகாதசிலவரைக் கொன்றேமென்றசெற்வத்திஞல் தலைக்கீழாகவிழ்கூராய் சத்துரோரத்தில்யென்திவ்வியாஸ்த்திரத்திஞல் கண்டிக்குரேன்பாரும்பிள்ளாய்ப்பப்பிரவாகஞ.

அர்ச்சுனன் தரு.

அக்கினிஆஸ்த்திரந்தொடுத்தேன் அர்ச்சுனன்ஞனும்
அதிகஉக்கிரங்கள் கொடுத்தேன்
இக்குகள்யெல்லாம்நடுங்க கக்கும்வெரிப்பிஞலே
பக்கென்றெரிந்துபோகச் சக்கிரவாளங்களாக-சுரு

பன்னியதேவர்முனிவர் கண்ணிணைத்திரந்துவர
அண்ணலேஅரியென்ரவர் விண்ணுலகம்நடுங்கதேவர்-அக்கி

பபபரவாகனன் தரு.

விடுத்தபாணத்தைவெட்டினேன் பப்பிரவாகனுன்
வேலால்தட்டியே வெட்டினேன்
தடுத்தேன் அக்கினிதன்னைத் தவிடுபொடியாகவே
கெடுத்தேன்பலமில்லாமல் கேடுகெட்டேகவே-சுரு

கெட்டியாய்தப்புகளும் சட்டமாய்யமர்க்களம்
திட்டமாமும்மூர்த்திகளும் யிஷ்டமாய்மனமகிழ-விடுத்

அர்ச்சுனன் தரு.

இருண்டபாணத்தையெடுத்தேன் அர்ச்சுனனுனும்
யெதிராளிமேலே தொடுத்தேன்
உருண்டுரதம்முரிந்து உடலும்பூமியில்விழ
பிரண்டுத்தலையுருண்டு பெத்திடுந்தாயழ-சுரு

பித்தனும்நடுங்க தலை
சத்துமெண்ணமை விப்போ
எத்தினேன் பாணத்திஞலே
இத்தோடே மனமகிழ்ந்தேன்-இரு

பப்பரவாகன் தரு

இருண்டபாணத்தைதடுத்தேன் பப்பிரவாகனுன்
யெதிரிமேல்போக முரித்தேன்
திரண்டசூரியன்போலே தேசமெங்கும்விளங்க
மிரவுமதிமயங்கி மென்மேல்மனங்கலங்க-சுரு

மெச்சிடும்அரசர்களும் அச்சமற்றவீரர்களும்
உச்சிதவிண்ணவர்களும் யிச்சையாய்மனங்களிக்க-இரு

அர்ச்சுனன் விருத்தம்.

இப்படியாயிருக்கும்போதந்தவேளை
இரவிதானொளிமயங்கிரத்தமழையும்பெய்ய
அப்படியேரணகளத்தில்யெலும்பும்வீழ
அந்தகனுங்கூவசுழல்காத்தடிக்க
தப்பாமல்நஷ்ஷத்திரம்பலபலென்றுதிர
சகுனதடைஅவசகுனங்களெல்லாங்கண்டு
குப்புரவேதலைகுனிந்துதிகிலடைந்து
கோவிந்தாபரந்தாமாகுறைதீர்ப்பாயே

வசனம்.

அர்ச்சுனராஜன் பப்பரவாகனன்பேரில் அனேகமாயிரம்திவ்வியா ஸ்த்திரங்களை தொடுத்தும் பலநில்லாமல் வெட்டுண்டு போய்விட்டது அப்போமுன்பின்தோணுமல் வெரிகொண்டவன்போலே திகைத்து காண்டிபத்தை தேரின்பேரில் சோரவிட்டு நிற்கும்போது றத்தமழைபெய்ந்து ஆந்தைகள் கூகாவென்றுகூப்பிட்டது சுழல்காத்தடித்து சூரியன்பிரகாரம் மழிங்கிப்போய்விட்டது இப்படி அனேகஅவசகுணங்களைக் கண்டு நமக்குயேதோவிபரீதகாலம் நேரிட்டிருக்கின்றதே அரிகரி கிருஷ்ண நாறுயண கோவிந்தா பரந்தாமாவாசுதேவா முரகரிவைகுந்தவாசா ரக்ஷிக்கவேண்டுமையா சுவாமி.

பப்பரவாகன் கவி.

தந்தையேவுந்தன்மீதில் தயவதுவைக்கமாட்டேன்
எந்தன்தாயாரைநீர்தான் யிகழ்ந்ததினுலேயிப்போ
உந்தனைக்கொல்லப்போறேன் ஒருநொடியதனிலிப்போ
விந்தையாய்பாணந்தன்னை விடுத்துநீர்யெதிர்த்திடீரே.

வசனம்.

ஐயா தேவந்திரன்புத்திரா யேன் சும்மாயிருக்குரீர் பாணத்தை எடும் உம்முடையவல்லமை நான் அரியுமோன் என்தாயாரைத் தூஷிணித்தபடியினால் உமதுபேரில் யெனக்கு யெவ்வளவுந்தயவு உண்டாகவில்லை யிதோ யென்னுடைய பாணக்கினியினால் கண்டிக்குறேன் பாருமையா சுவாமி.

பப்பரவாகனன் தரு.

பாணமெடுத்துவிட்டேன் பலவிதக்கிரமமுடன்
நர்ணியருத்து விட்டனே
ஆணிமுறிந்துவிழ அச்சும்ஒடிந்துதாழ
தோணும்அனுமக்கொடி துளைத்துமுறிந்துசாய — சுரு

சொலலவும்யீடுண்டோ வல்லமையாகவே
யெல்லவர்நடிங்கிட வி..லின்மகிமைதன்னை — பா

தேருமழிந்துப்போச்சுதே அ..ச்சுனனென்றகீர்த்தி
திகைத்துஅழிய லாச்சுதே
பாருஞ்சாரதிசாக பரிகளொட்டுமேயேக
வீரத்தனஞ்செயன்கீர்த்தி விருதாவாய்வெளியாக — சுரு

விண்ணவர்யாவரும் யெண்ணிநடுங்கிட
அண்ணனுமையவளும் நின்றுதயங்கிட — பா

துரிதமாய்யொன்றுதொடுத்தேன் அதிகவல்லமையுடைய
சுவாலாவென்ற பாணந்தொடுத்தேன்
அரியயன்சிவன்வாட அமரர்பயந்துஓட
சரியாய்சிரசைப்பார்த்து தாக்கினத்தால்சாட — சுரு

சடசடஅக்கினி பொரிகளெரிந்திட
முடநிதிலபுகையின் வில்லம்புபுகுந்திட — பா

செகதலங்களுமதிக்க னவரத்தினமுடிபெத்த
சிரசுவெட்டுண்டு துடிக்க
பகையானகிரீடிசாக படைகளெல்லாமேக
வகையாயுலகமெல்லாம் மயங்கித்தியங்கிட — சுரு

மண்டலமதிர மேளங்கள்முழுங்கவும்
அண்டையில்அரசர்கள் கண்டுசேவிக்கவும் — பா

பொது விருத்தம்.

அர்ச்சுனன்தான் வெட்டுண்ட சிரசுதானும்
ஆகாயமெழும்பி அரி முகுந்தாவென்று
மெச்சும்புகழ்நாரணு பர்ப்பனுபா
மேகநிறமேனியனே யசோதைமைந்தா
அச்சுதனே கிருஷ்ணவு தாராயெந்தன்
அண்ணலேபரந்தாமா பரனேயென்று
உச்சிதமாய்அனேகவிதந் தோத்தரித்து
ஓடிவந்துபூமிதனில் விழுந்ததன்றே.

வசனம்.

பப்பரவாகனன் பாணங்களைப் பிரயோகம் செய்து அர்ச்சுனனு டைய சாரதிகுதிரை அனுமக்கொடிறாதம்முதலாகியதும் அழித்துதன் னுடையஅம்புராத்தூணியில் கையைவிட்டெடுக்க சுவாலையென்கிற அஸ்த்திரம் கையிலகப்பட்டு அர்ச்சுனன்பேரில்விட அதுமகா உக்கிர த்துடனே அர்ச்சுனன்சிரசைஅறுத்துபோய்விட்டது அந்தசிரசானது ஆகாயத்திலெழும்பிப்போய் அரிகரிகிருஷ்ணு துவாரகாபுரிவாசாதே வகிநந்தனு உன்பக்தனுன அர்ச்சுனைக்காப்பாத்தி ரஷ்ஷியுமென்று அனேகவிதமாய் தோத்திரம் செய்துக்கொண்டு பூமியில்வந்து வி ழுந்தது.

பொது கவி.

கெங்கைதன்சாபத்தாலே கிரீடியும்மடிந்தானென்று
திங்கள்செஞ்சடையோன்தன்னை செயம்பெற்றவீரனென்று
அங்கமும்நடுங்கியிந்திரன் அமரருமழிந்துசேனை
மங்கயர்மன்னரெல்லாம் மகாத்துயருகிறரே.

வசனம்.

தேவேந்திரன் தேவர்களெல்லாம் பூஉலகத்தாரும் சகலசேனுச யின்னியங்களும் அர்ச்சுனன் யிறந்தானென்றபோதே பாவியான கெங்காதேவியினுடைய சாபம்வந்துநேரிட்டு யெரந்துபோனனென் றும் சிவனுடன் உயித்தியம் செய்தவீராதிவீரனென்று முறையிட்டு யாவரும் துக்கசாகரத்திலழிந்திருர்கள்.

பப்பரவாகனன் கவி.

மந்திரிசுமத்திகூட மன்னவன்பப்பரவாகன்
துந்தமியார்ப்பரிக்க செயஞ்செயமென்றுசொல்லி

பந்தமாய்சேனையோடு படைமன்னர்புடையேசூழ
வந்திடமணிபுரத்தைவருகின்றார்வருணகிறனே.

வசனம்.

வாரும் மந்திரியாகிய சுமத்தியே நாம்செயமடைந்தோம் நம்முடைய சேனசமுத்திரங்களோடு பதினெட்டுவகை மேளவாத்தியத்துடன் தாம் தாம் யென்று முழங்கத்தக்கதாக பட்டணம்போவோம் வாருங்கள் மந்திரிமார்களே.

பொது வசனம்.

அகோதெப்படி என்றால் பப்பிறவாகனன் பட்டணம்வந்து சேர்ந்த உடன் அர்ச்சுனமகாராஜன்தேவியாகிய சித்திராங்கதையும் யூர்வசியும் அனேகதாதிமார்கள்புடைசூழசபைக்கிவருகிறவிதங்காண்க.



சித்திராங்கதை பத்தியம்.

சித்திரமணிபாவைபோல தேவிமார் இருவரும்
சிங்காரமாய் தாதிசூழ்ந்துவரவும்
மெத்தயாபரணங்கள் இடையிலொட்டியாணமும்
மென்மேலுமுத்துசர மாலையழகும்
ரத்தினபரணமும் மெத்தபொன்னோலையும்
நத்துமூக்குத்தியும்சுட்டியழகும்
சுத்திபொன்சரிகைசேலை தொங்கல்கங்கணவளையல்
தொலங்கவும்பாதசரம் தண்டையழகும்
அன்னம்போல்அழகினில் மிகுத்தஒளிவும்
மன்னவன்தனஞ்சயனை மருகவேநினவுகொண்டு

கன்னல்சோமதனிடபாணத்தால் உழன்றுபூண்டு
வர்ணமாய்ஊர்வசியுஞ்சித்திராங்கதையும்வருகின்றாளே

## சித்திராங்கதை வருகிற தரு.

சந்தரவதனமுள்ளசுந்திர ஊர்வசியும்
தையல்சித்திராங்கதை வந்தாள்
அதிகமோகமையல்கொண்டுமே வந்தாள்
கந்தம்கதம்பம்பூசி காமனைமிகயேசி
மந்தாரையுருவாட்சி மாலையணிந்துகொண்டு-சுரு

மாமயிலோமொழியாள்ளனக்குயிலோ
வருகிறகணவனைமருகவுமாசையாய்
அறுவரும்கூடியேகிரிடியைகாணவும். சந்

அந்தமாகவேகூடி சிந்தைமிகவேநாடி
இந்திரன்சுதனைத்தேடி இருவர்மங்களம்பாடி
இனிமதியோஒளி பணிமதியோயொளி சுரு

ஈசனைவென்றயென் நேசனென்பங்கினில்
பாசம்வத்திடவெகு ஆசையதாகவே சந்தி

சேலைப்பளபளென்ன சேர்ந்தபொன்னூலைமின்ன
மாலைகமகமென்ன வாசமாய்மகிழ்ந்துதன்ன
வஞ்சிகளே அபிரஞ்சிகளோ சுரு

மங்கயர்தாதிகள் அங்கமாய்சூழ்ந்திட
துங்கப்பிறகாசமாய் கங்கணமாடிட சந்தி

கொங்கைகுலிங்கியாட சங்கீதம்பெண்கள்பாட
தங்கசறங்களாட தாதியர்முன்னேவோட
சர்க்குனியோ இக்ழ்னர்க்கனியோ சுரு

தாவியேபுருஷனை மேவியேகாணவும்
தேவியர்யிருவரும் பாவனையாகவே சந்தி

## சித்திராங்கதைகவி.

ஆலகாலத்தையுண்டு அங்கையில்மழுமானேந்தி
காலகாலனையுதைத்து கங்கைவேணியர்புனைந்து
வேலனையளித்தசொக்க யிடத்தினில்பாகமான
மாலைமீனாக்ஷியம்மன் மலரடி துதிசெய்வோமே.

வசனம்.

ஆலகாலமான விஷத்தையுண்டு கையில் சூலகபாலம் மழுமா னேந்தி எமதர்ம்மராஜனையுதைத்தும் கெங்காபவானியைசடாபாரத்தி ல்வைத்தும் சுப்பிரமணியகடவுளை அளித்தசொக்கநாதருடைய இட பாகத்தில் அமர்ந்திரானின்ற மதுரைமீனாக்ஷிசியம்மனுடைய திவ்வி யதிருவடி கமலங்களுக்கு அநேகவந்தனம் வந்தனம்.

சித்திராங்கதை கவி.

வந்ததோர்தேவிமார்கள் மகிழ்ஷியாயிருக்கும்போது
சுந்திரதாதிமார்கள் சூழ்ந்துகைகட்டி நிற்க
இந்திரன் சுதனுங்கிரீட்டி யிப்பவேவருவாரென்று
சந்தோஷமாகப்பேசி தையலர்யிருக்கின்றாரே.

வசனம்.

வாருமம்மாள் தங்கையாகிய யூர்வசி தேவேந்திரன் சுதனாகியந ம்மிட கணவன் தனஞ்செயமகாராஜன் வந்திருக்கின்றாரும் அவரை யிட்டுவரும்படி நம்மிடகுமாரனான் பப்பரவாகனன் போயிருக்கின் றானும் யின்னம் சற்றுநேரத்தில் வருவார் அவர்வந்தவுடனே நாம் யிருவரும் சரசசல்லாபலீலா விநோதமாய்க்கூடி சந்தோஷித்திருக் கலாமம்மணி.

ஊர்வசி வசனம்

கேளுமம்மா சித்திராங்கதையம்மணி யெனக்கும் அப்படியே சம்மதந்தானம்மாள் தாயே.

ஊர்வசி தரு.

கணவனென்றபோதே காமம்பெருகுதே
காண்டிபனைக்காணாமல் விரகதாபமாகுதே
அணைவோமென்றுமனம் அலைந்தலைந்துருகுதே
அதிகமாகசலம் ஆறாய்ப்பெருகுதே கண

ஸ்தனமும்ரெண்டும்விம்மி தாவித்ததும்புதே
கடிதடத்திலமன்மதன் குடிதுடித்துளைக்குதே
மனமயங்கிமிக வாடியிளைக்குதே
வஞ்சகமேயிது அஞ்சிக்களைக்குதே கண

கூறவும்வாயால் குளிர்தென்றல்தாவுது
கோவையிதழ்மா லாகவும்மேவுது
சாரவும்மாக்குயி லனேகமாய்கூவுது
சந்திரன்காயும் வானம்போலாகுது கண

ஆசைக்கணவனும் யெப்பவருவாரோ
அதிரபானமொன்று அன்பாய்தருவாரோ
பாசமாகவிலை பரிந்துப்புரிவாரோ
பஞ்சணைமெத்தையில் கொஞ்சியிருப்பாரோ கண

ஊர்வசி வசனம்.

கேளும்யென் தங்கையாகிய சித்திராங்கதா நம்முடைய ரூபகன் வருவாரென்றபோதே யெனக்கு அதிகமான விரகதாப மிருக்கின்றது உனக்கு யென்னமாயிருக்கு தம்மணி.

சித்திராங்கதை வசனம்.

கேளும் யென் தமக்கயேயெனக்கும் அப்படிதான் யிருக்கிறது யிருந்தபோதிலும் அதை பிரரியச் சொல்லலாகுமா.

ஊர்வசி கொச்சகம்.

வாரணிசித்திராங்கதையே மாமயிலேயென்தமக்கை
காரணமோபகலில்நித்திரை கண்சொரிகிப்போகுதடி
பூரணியேபுண்ணியவதி பொருக்கமுடிபோவதில்லை
யேரணியேயெனக்குநித்திரை யிர்க்சென்னசெய்வதம்மா

வசனம்.

கேளும்யெனது தங்கயே ஒருஞானுமில்லாமல் யெனக்குபகலில் நித்திரை வருகுது யிதற்கென்ன செய்வோம்மா சித்திராங்கதா.

சித்திராங்கதை கொச்சகம்.

உத்தமியேயெனது தங்கை யூர்வசியேநாயகியே
நித்திரைகள்வந்துதானல் நீவர்ன்னமஞ்சத்தினில்
மெத்தையின்மேல்விநோதமுடன் மெல்லியரேநீபடுத்து
சத்தேயெழுந்திருப்பாய் தையல்யிளமயிலே.

வசனம்.

வாருமம்மா பெண் தங்கைபாகிப் யூர்வசியே உனக்கு நித்திரை வந்ததானால் இந்த சித்திரகூட சப்பிரமஞ்சத்தின்பேரில் சயனித்துக்கொள்ளும் தங்கயே.

யூர்வசி சொல் வசனம்.

அப்படியே சயனித்துக் கொள்ளுகிறேனம்மாள் தமக்கயே.

யூர்வசி தரு.

நித்திரைசெய்தாளேஊர்வசியும் நித்திரைசெய்தாளே
நித்திரைசெய்தனள் நேருடன்மஞ்சத்தில்
பத்தியாய்சேடியர் பக்கத்திலசூழவே நித்

சகலவைபோகமாய் கூதாமரைதாக்கவே
அகமதுமகிழ்வாக அன்புடன்மகிகூதிபாய் நித்

சொற்பனங்கண்டு துடித்துயெழுந்தவள்
கற்புள்ளமங்கைக் கலங்கித்தவித்துமே நித்

அங்கம்நடுங்கியே ஆவிப்பதரிட
மங்கில்லியசூஸ்திரம் அருந்துமடிமேல்விழ நித்

யூர்வசி கவி.

சொற்பனங்கள்கண்டவுடன் துயரமாகி
துடித்துஉடல்பதைபதைந்து யெழுந்தபோது
அப்போதுமங்கிலியச்சூஸ்த்திறந்தானும்
அருந்துவிழுமடிமீதிலதையெடுத்து
இப்போதுதமக்கயரைக்கண்ணுல்ப்பாரும்
யென்னமோஆபத்துயிருக்குதம்மா
பப்பறவாகனன்போனசேதிகாணேன்
பார்த்திபன்வல்லையென்றுபரிந்திட்டாளே.

170584 சென்னை-600 008.

வசனம்.

அகோவாருமம்மாள் சித்திராங்கதா அடியாள்நித்திரை செய்யும்போது துற்குணமுள்ளசொறபனங்கண்டு அலரியெழுந்திருந்துபார்க்கும்போது யெனது மங்கிலியசூஸ்த்திரம் அருந்து மடியில் விழுந்ததேயிதோபார்த்திபா அதுவுமன்றியில் நம்மிட குமாரனுகியப்ப

வாகனன்தகப்பனை யிட்டுக்கொண்டு வரப்போனவன் யிதுவரையில் வரக்காணேமம்மணி.

சித்திராங்கதை கவி.

எண்டிசைக்கீர்த்திபெற்ற யென்னிட தங்கைகேளாய்
ஒன்றும்நீசொல்லாமற்றான் உருகுறாய்மனதி லண்ணி
கண்டதோர்சொர்ப்பனத்தின் காரியாகாரியங்கள்
அண்டையில்வந்திருந்து அடவுடன்சொல்வாயம்மா

வசனம்.

கேளுமம்மாஊர்வசி ஒனறுஞ்சொல்லாமல் மனதுக்குள்ளேதானே விசனத்தையடைந்தாய் நீ கண்டசொற்பனத்தை விபறமாகச் சொல்லவேணுமம்மணி.

ஊர்வசி தரு.

மெத்தையில்நித்திரைசெய்திடும் வேளையில்
சொற்பனங்கண்டனம்மா யெனம்மா
சித்தம்மயங்கு தம்மாள்
உத்தமியேஎந்தன்நித்திரைதன்னிலே சித்திரங்கண்டேனம்மா
யென்னம்மாமெத்தமயங்கு தம்மா
சிங்காரமாய்வனம்யேகியேசூழவும் சூழவுங்கண்டனம்மாயெனம்மா
யெங்கேபோய் சொல்வேனம்மா
ஆசையானபுஷ்ப்பமாலைபருந்திட அவகுணம்கண்டநம்மாயெனம்மா
வேசாரிநொக்தேனம்மா நொந்தம்மா
வாசனைபூமாலைவாரியெடுத்துஞன் வந்திடக்கண்டனம்மாயெனம்மா
வேசாரிநொந்தே நம்மாயெனம்மா
மஞ்சத்தில்நித்திரையிருந்தஉடனேயென்மங்கில்லியம் அருந்துதம்மா
பஞ்சவர்க்கிடேரோ அம்மம்மா
அஞ்சலிசெய்திட்டேனச்சுநாகோவிந்தா அடியாளைக்காருமையா-எ
தஞ்சமிமன்பாரு மையா-மெத்தையின்

சித்திராங்கதை கவி.

தங்கையேசொர்ப்பனத்தால் தயங்கவும்வேண்டாமம்மாள்
மங்கில்லியக்கயரு நானும் அருந்ததுபெலநில்லாமல்
சங்கரன்சொக்கநாதர் தயவதுயிருக்கும்போது
இங்கொருகுறைவுமில்லை யெழுந்திரும்வாழிதானே.

வசனம்.

கேளுந்தங்கா ஊர்வசி நீ கண்டசொர்ப்பனத்தில் உனக்கொரு குரைவுமில்லை புஷ்ப்பமாலை அருந்து விழக்கண்டபடியினாலே புதிதா கவாசனையுள்ளபுஷ்ப்பமாலை அணிந்துக் கொள்வாய் மங்கிலியுக்கயர்அருந்து விழுந்தயடியினாலே பிலகில்லாமல் அருந்துபோய்விட்டது சொக்காநாதருடைய கிருபையிருக்கிறவரைக்கும் நமக்குயாதொரு குரைவுமில்லை சிரஞ்சீவியாக யிருப்பாய் யெழுந்திரும்மாள் ஊர்வசி.

பொது விருத்தம்.

அரிகிருந்ததாதியர்போய்ச்சேதிகேட்டு
அம்மாசித்திராங்கதையூர்வசியேயென்று
திருவயத்தில்பிரந்தபப்ரவாகன்சென்று
மீதேசமெங்குங்கீர்த்திபெற்றதகப்பனை
கிருடியென்ற அர்ச்சுனனைகொன்ருனம்மா
கேழ்விப்பட்டுயிங்குவந்தேன்கேளாயிப்போ
மருகவேஆசைகொண்டு யிருந்தஉங்கள்
வயரெரியப்பழிக்காரன் வாய்த்திட்டானே.

வசனம்.

கேளுமம்மா சித்திராங்கதையே ஊர்வசி உங்களுடைய குமாரனாகிய பப்பரவாகனன் தகப்பனை யிட்டுக்கொண்டு வரப்போனவர் யேதோகாரணத்தினாலே அகண்டித பருக்கிரம சாலியான அர்ச்சுனமகாருசனை கொன்றுப்போட்டானென்று கேழ்விபட்டேன் புருஷன் வருவானென்றும் ஆசையோடு கூடியிருந்த உங்கள் வயிரெரியும் படியாக பழிக்காரன் கொன்றுப் போட்டானம்மாள்தாயே.

சித்திராங்கதை விருத்தம்.

தனஞ்சயனும்றணக்களத்தில் மடிந்தானென்று
தாதியர்களிருவருக்கும் சொன்னபோது
மனங்கலங்கிக்குழல்சோரக் கால்கள்சோர
மண்மீதில்பிரண்டழுது மூர்ச்சையாகி
கனங்குலைந்துமாலைதனை யெரிந்துப்போட்டு
கதரினாள்சலம்பெரிகி யாருயோட

இனம்பிரிந்தமான்போலே கணவன்தன்னை
யெண்ணியெண்ணிக் கதரியவள்புலம்பினளே.

வசனம்.

புருஷன் யொரந்துபோனனென்று தாதிகள்சொன்ன மாத்திரத்தில் யிரண்டு தேவிமார்களும் கழுத்திலிருக்க மாலையைக் கழட்டியெரிந்து கூந்தலை விரித்துக்கொண்டு பூமியில்விழுந்து மூர்ச்சையாகி புருஷனை நினைத்துப் புலம்புகிற விதங்காண்க.



சித்திராங்கதை தரு புலம்பல்.

தருமர்க்கிளையவரே தனஞ்செயவீர்ரே
சுவாமியையெப்போ காண்பேன் மன்னவரே
பிர்ம்மன்லெழுதியதோ பிள்ளையாச்மடியவும்
யேழைதக்கலங்குரோமே மன்னவரே
காண்டீபவிசயனைக்கணவனைக்காணாமல்
கருத்துமழிந்தையோ மன்னவரே
பாண்டியதேசத்தைவிட்டுவர்துரியும்
படுகளத்தினில்மாண்டாய் மன்னவரே
சிவனுடன்போராடிசெயம்பெற்றவீரனென்றும்
தேசத்திலகீர்த்திபெத்தீர் மன்னவரே

கவலையுன் மனதில்வைத்துகாணவேணுமென்று
கதரிப்புலம்பலானேம் மன்னவரே
பாரதஉயித்தியம்பதிகெட்டுகளையில்
படையெல்லாம்மடித்தாயே மன்னவரே
சாரத்தியமாகிகிருஷ்ணன்சகாயமிருக்கவும்
சாகவுங்காலமாச்சே மன்னவரே
ஆரிட்டசாபமோஆதரவில்லாமல்
அமர்க்களத்தில்மடிந்தாய் மன்னவரே
சிரும்செல்வமிழந்துதிக்கில்லாப்பாவிகள்போல்
தெருவிலலயவிட்டீர் மன்னவரே
நாராயணாமோநந்தகோவிந்தஅரி
நம்பினேன்உன்பாதம் அச்சுதனே
வாராய்ஆதிமூலமேவைகுந்தம்தன்னைவிட்டு
வந்துயென்துயர்தீர்ப்பாய் அச்சுதனே

பப்பரவாகனன் கவி.

இரண்டுபேர்தேவிமார்கள் யிருவர்கண்ணீருருயோட
பிரண்டுமண்மீதில்வீழ்ந்து புலம்பினபோதுபிள்ளை
திரண்டதோள்பப்பரவாகன செயங்கொண்டுவந்திருக்க
பிரண்டுதானழுவதேது பேதையேசொல்லும்மா.

வசனம்.

வாருமம்மாள் தாயேனான் செயம்பெற்று வந்திருக்க நீங்களிரண்டுபேரும் புலம்பி அழவேண்டிய காரணம்யென்ன சொல்லுங்களம்மாதாயே.

சித்திராங்கதை தரு.

தந்தையைக்கொல்லவும் மனந்துணிந்தீ
சதிகள்செய்தாயோ கெட்டநெதியில்நில்லாயோ
விந்தையைப்பரியை விடுத்துவந்தவரை
மேவியேகொன்றுயோ மனஞ்சலியவேகொன்றுயோ
செயம்பெத்தாணென்று சேகுவன்போலவே
சேதிகள்சொன்னுயோ பஞ்சபாதகனுனுயோ
தயவாதுஷ்ட்டகாதகனே தருதலையானுயோ
கெட்டமதிமோசம்போனுயோ அன்னயைபிரியவுமானுயோ

கெட்டநடத்தையால்முட்டால் பயிலேலீகிட்டநில்லாதே
அடாயிதுமுட்ட நிற்குமோடா
துண்டனேவில்வித்தைக் சீத்துபிதாவைவீ
துணித்திவிடுவதோ ஒருக்ஷணத்தில்மடிவதோ
ராங்களிருவரும் அக்கினியில்விழுஞாயம்செய்தவன்
இப்போமாயம் வைத்தவனே
நீதிநின்றுசெய்திடும் தூர்ச்சனப்பையலே
நியைமுட்டடாயெங்கள் காயம்மறையடா

சித்திராங்கதை கவி.

என்னடாபப்பரவாகா யேதிறுபிதாவைக்கொன்றாய்
அன்னியர்மங்கிலலியத்தை யறுத்துமேவிட்டாய்ப்பாவி
மன்னனாரரசுசெய்து மதிகெட்டுமூடனானாய்
என்னமோகெடிதிகாலம் யிப்படிசெய்யலாமோ

வசனம்.

அடாவாடா பப்பரவாகா யேதுகாரணத்தினால் பெற்றதகப்ப னைக்கொன்றுப் போட்டாய் யெங்களுடைய மங்கிலியத்தை அறுக்க வந்தபாவி யிந்தபாண்டிய தேசத்துக்கு அரசனாகயிருந்தும் புத்தி கெட்டமூடனாய்யென்னமோகெடிதிகாலம்சம்பவித்து யிப்படிசெ ய்தாயப்பாபப்பரவாகனே.

பப்பரவாகனன் கவி.

அன்னையேசொல்லக்கேளாய் அர்ச்சுனர்யெந்தன்தந்தை
மன்னவன்சொன்னசொல்லே வாயினாலுறைக்கப்போமோ
என்னயேவசியனுக்கு யீன்றாளென்தாயாரென்று
பின்னையுங்கோபமாசப் பேசினார்யேசினாரே

வசனம்

கேளுமம்மாள் தாயே யென்தந்தையாகிய அர்ச்சுனமகாராசன் சொன்ன சொல்லைநாவினால் சொல்லப் போகுமோ யென்னைஉன்தா யார்வசியனுக்குப் பெற்றாளென்று நான் கொண்டுபோய் வைத்தவரி சைகளை அங்கிகரிக்காமல காலினால் உதைத்துத்தள்ளினார் அதினால் கோபமபிரந்துதகப்பனைக் கொன்றுவிட்டேனம்மாள் தாயே.

### சித்திராங்கதை கவி.

தந்தைதாய்வைதிட்டாலும் தலையறுத்திடுவதுண்டோ
குந்தங்கோடாலிக்காம்பு குலத்தையும்அழித்தாற்போலே
பந்தமாவிஸ்வகேது படைமன்னரெல்லாங்கொன்றுந்
இந்ததோர்கீர்த்திசெய்தாய் யென்முன்நிற்காதேபோடா

### வசனம்

அடாவடா பப்பரவாகனா தாய்தந்தையானவர் பிள்ளையைத்திட்டினாலும் அவர்களைக்கொன்றுவிடுகிற பிள்ளையை யெங்கேயாகிலுங்கண்டதுண்டோ கோடாலிக்காம்பு குலத்தையழித்தாற்போலே விஸ்வகேது மேகவர்ன்னன் முதலானபந்துவர்க்கங்களை யெல்லாம் கொன்றுவிட்டாய் இந்த கீர்த்திக்கோ யென்வயித்தில் பிள்ளையாய் பிரந்தாய் யிப்பேர்ப்பட்ட பாவியானபிள்ளை யென்வயித்தில் பிறக்க யென்னபாபம் செய்தேன் பிதுர்த்துரோகியைக் கண்ணினால் பார்க்கக்கூடாது யெங்கள் முன்னேநிற்கவேண்டாம் அப்புறம்போடாபப்பரவாகனா.

### பப்பரவாகனன் ; தரு.

இதற்கோகான்ஜென்ம மெடுத்தேன்
யிந்தவில்லையெடுத்து யென்தந்தையைக்கொல்வுமல இதர்
பதிக்கிஅரசனாகி பாருலகத்தையாண்டு
மதிகெட்டுப்போச்சுதே யென்மாதாபுலம்பக்கண்டு சரு

மாறாப்பெருந்துயரம் ஆறாதப்பழியென்று
வாளுமல்வந்தவினை நேருகத்தோணுதே-யிதர்

மன்னரிகசுதிசொல்லவும் யென்மனதுகலங்கியே
யெண்ணமெல்லாம் புலம்பவும்
யென்னுவிதிகள் சொல்லவும்
அண்ணியர்போலவே அடங்கலும்மடியவே
சின்னபுத்தியினாலே சிதைத்தேன்பொடிபடவே சரு

செய்யாதகுலைபாபம் அய்யய்யோவந்ததிப்போ
வையகம்நகைத்திட அய்யோபாவம்வந்துதே-யிதர்

வெட்டிமடித்துவந்தனே பாவிகாணிப்போ
சித்தங்கலங்கியே நின்றனே
மாயமாதாவுங்கூட மாளமரணகாலம்வந்துதே சுரு
மாளாதகாலமெல்லாம் மீளாப்பழியெனக்கு
கேளாச்சேமதிமந்திரி பாழாகிப்போச்சுதிப்போ பிதா
பிர்ம்மனமைத்தகெதியோ நான்பிள்ளைபிறந்த
பிதாகொள்ளையில் மடியவும்
கற்மம்விளைந்த மதியோ
தருமருசனும்வந்து பென்னைக்கொல்லாதமுன்னே
வர்ம்மம்வைத்துயிரைஞமும் மடியச்சமைய்ஞ்சொன்னேன்
மதுரைமீனுக்ஷிஉந்தன் பாதாரவிந்தமலர் சுரு
கெதியரிந்தேன்யென்னை சதிசெய்துக்கொண்ருவிடும் பிதா

பப்பரவாகன் கொச்சகம்

மாதாமனங்கலங்கவையகத்தில்நானிருக்க
போகாதயென்னுயிரை போக்கடித்துக்கொள்ளுவேன்யான்
நாதாமதுரைசொக்க நாயகியாள்மீனுக்ஷி
உன்பாதாரவிந்தமலர் பாதகான்சேருவனே.

வசனம்.

பிதாவைக்கொன்ற துரோகியாகிய நான்பூமியில் யிருக்கலாகாது யென்பிதாவுடனே மடிந்து சொக்கநாதர் மீனுக்ஷியம்மனுடைய பாதாரவிந்தம் சேருவதே உத்தமமாகயிருக்கின்றது மந்திரியாகிய சுமத்தனே.

சித்திராங்கதை கவி.

பாதகாபப்பரவாகா பலனென்னஅழுதத்தாலே
நாதனர்ச்சுனன்மடிந்த றணக்களம்யெங்கேயிங்கே
வாதுசொல்லாமல்வந்து மகிபனேகாட்டும்பிள்ளாய்
காதகாயிவ்விடம்விட்டுக் கடுகெனவருகுவாயே.

வசனம்.

அடாபாதகா பப்பரவாகா யினிமேல் அழுகுறதினுல் பலனென்ன யிருக்கின்றது யெங்களுடைய நாயகனுகிய அர்ச்சுனமகாருஜன் மடிந்த யெடத்தைக் காட்டும் பிள்ளாய் பிதாத்துரோகி.

பொது விருத்தம்.

மடிந்தயிடந்தனைப்பார்க்கப் போகும்போது
வாருதிசுழலமேற்றிசையில் வருணன்தானும்
துடர்ந்துசுதன் யிறந்ததினால்துயரமாகி
துக்கசாகரத்திலவர் லழிக்கினாப்போல்
பறந்துயிருள்மூடவும் மறைந்தபோது
பலகோடிநக்ஷத்திரம் உதையமாக
கடந்துநகர்புரத்தில் வழிகாணாமற்றான்
கலங்கினார்மூவருமே நலங்கினாரே.

வசனம்.

பப்பரவாகனன் தாய்மார்கள் யிருவரையும் றணக்களத்துக்கு அழைத்துக்கொண்டு போகும்போது குமாரனை அர்ச்சுனராஜன்யிறந்தானென்று துக்கசாகரத்தில் மூழ்கினாப்போல் சூரியனானவன்மேல் த்திசையில் மறைந்து போனான் அந்தகாரமான யிருள் மூடிக்கொண்டது ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் உதையமாச்சுது பட்டணங் கடந்து மூவரும்போகும்போது யிருட்டில் வழிதெரியாமல் நடக்கிற விதங்காண்க.

சித்திராங்கதை தரு.

| | |
|---|---|
| எங்கேயெங்கேயெங்கோநாதன் | யிறந்தயிடத்தைநீயும் |
| யிப்போதேநீகாட்டுவாடா | துஷ்டப்பயலே |
| சங்குல்வழிமறைக்குது | யெங்குந்தேடியேயிப்போ |
| கணவனுடல்காணுமலே | ஸ்தனங்கள்சோருதே |
| வல்லமையதிகமான | மாயக்கிருடியை |
| மடிந்தயிடங்காணேனையோ | மகனேசொல்லடா |
| இருட்டில்வழிதெரியாம் | றெணகளத்திலே |
| யெங்குமோடிப்பார்த்திடவும் | இங்குகாணனே |
| மெறட்டுதேபேய்க்கணங்கள் | திருட்டுத்தனமாய் |
| மேகவர்ணன்விஸ்வகேதும் | யெங்கேயெங்கடா |
| கண்டேன்கண்டேன்கணவனை | கண்ணில்க்கண்டனே |
| காட்டில்பிரண்டுருள | நீதியுமுண்டோ |
| மண்டலத்திற்கீர்த்திபெற்ற | மகிபனுச்சுதே |
| மண்ணில்படுத்திடவும் | யென்னவிதியோ-எங் |

சித்திராங்கதை கவி.

கூவியேயிருட்டுதன்னில் கோவென்று அலரிவீழ்ந்து
வாரியேஉடலந்தன்னை மார்பினில்வைத்துமுத்தம்
சேறவேமுகத்தைப்பார்த்து திரும்பவும்மூர்ச்சையாகி
சாரியயரசைப்பார்த்து சாற்றுவார்போற்றுவாரே.

வசனம்.

சித்திராங்கதையும் ஊர்வசியும் யிருட்டுவேளையில் வழிதெரியாமல் றணக்களமுழுதும்தேடி புருஷனுடைய சிரசைக்கண்டு அலரிவீழ்ந்துபூமியில் புரண்டுமூர்ச்சையாகி யெடுத்துமார்பிலணைத்து முத்தமிட்டு அழகைப்பார்த்து புலம்புகிற விதங்காண்க.

சித்திராங்கதை ஊர்வசி தரு புலம்பல்.

ஐயய்யோகணவன்முகம் மெய்யோமெய்யோநாங்கள்
கையுங்காலும்நடுங்கி கருத்துமழியுரோமே-ஐய்யோ

மெய்யெலாம்புழுதியாகி மேனியுந்தளருதையோ
மெத்தவேவாய்திறந்து பேசாயோமைத்துனரே-ஐய்யோ

பாவியானமேபிறுண நாதனேயென்னசெய்வோம்
தேவிமார்யிருவரும் தியங்கவிதியாச்சே
தேவிமார்யிருவர்களும் தியங்கியேதவிக்குறோமே
வாவென்றுகூப்பிடுவாய் மணவாளாயெங்களையும்-ஐய்யோ

வாருங்கண்ணால் பாரும்புண்ணியம்
சேரும்ஆசை தீவாரும்
பக்ஷமாய்ப்பாராய் கணவன்முகம்யிச்சையாய்கேறாய்
அச்சுதன்மைத்துனா ஆசைக்கணவனே
மஷ்தமுதுகினில் உச்சிதமிருக்குதே-ஐய்யோ

மன்னனேயிது என்னமோநான்செய்த
இடருகள்யிப்பவும் யிஷ்டடமுடனேயெங்கள்
பக்ஷக்ஷமாய்முகம்அஷ்டட லக்ஷ்க்ஷிநிவாசமிருக்குதோ-ஐய்யோ

சித்திரதிருமேனிபச்சையும் செம்பவளவாய்முகமும்
திங்களொளிமகுடமுடி சிகையினழகும்
புருவம்வில்நகையருண நக்ஷத்திரம்நாவினில்
புஜபெலமகமேரு புஜத்திநழகும்

ஊன்வளர்ந்தமுதுகினில் வல்லவரோமைமக்ஷக்ஷங்களும்
உந்தியில்மாணிக்க ஒளியினழகும்
தருவானகற்பகம்போல் இருகரங்கள்துடை
தளதளெனவாழைப்போல் பாதமழகும்
சிங்கார அழகைநான் வர்ணிக்கக்கூடுமோ
சங்கஞ்செயன்தலையில் விதித்தவிதியோ
எங்கேநான்போயழுது யேங்குவேன்மனதுநொந்து
மங்கையரிருவர்கூடி உன் பக்கத்தில்மடிகுவோமே-ஐய்யோ

சித்திராங்கதை ஊர்வசி தரு.

என்னசெய்குவோம் யெங்கள்பிராணநாதனே
யெங்கேநீபோயொளித்தாய் மங்கைபுலம்பவைத்தாய்
சின்னஞ்சிருவயதில்யென்னைச் சேர்ந்துமணம்புரிந்து
தேங்கித்தனியேவிட்டாய் யேங்கித்தவிக்கவிட்டாய்
தெய்வலோகந்தன்னிலே நிவாதகவசர்களை
செயம்பெத்தீர் அவர்களை பயமுறுத்துமெங்கேவிட்டீர்
மூவர்முதல்வர்சண்டை மூர்க்கமாய்ச்செய்துவென்று
முடித்தாய்ரணகளத்தில் மடிந்தாய்படுகளத்தில்
கர்ன்னன்சகுனிசல்லியன்கிருபன் காங்கன்தோரணர்தன்னை
கண்டித்தபாணமெங்கே யின்றுமுடிந்ததிங்கே
உன்னிடவில்வித்தையைநீர் யெங்கேமரந்துவிட்டீர்
ஒண்டியாய்ப்பாலனுடன் சண்டைமுடிந்தவுடன்
ஆசைதீர்க்காமல்யென்னை மோசங்கள்செய்துவிட்டு
அனாதையைப்போலேவிட்டீர் பனாதியாக்கிவிட்டீர்
பாசவைத்தமாதருன்னை யேசவும்மனந்துணிந்து
பலனால்மடிந்ததுவோ சிலனால்முடிந்ததுவோ

ஊர்வசி சீசபத்தியம்.

கண்டதோர்சொற்பனம்மெய்யாகத்தோணுதோ
கர்த்தனேசிவசிவா கைலாநாதா
சண்டையிலுயிர்போன விசையனைப்பார்க்கவும்
கதருதேகைகால்கள்உதருதையோ
கெண்டைவிழி துரோபதா புருஷனெங்கேயென்றால்
கேழ்விபதிலுத்தாரம் யென்னசொல்வேன்

துண்டங்கவன்செய்திடும் தூர்ச்சனப்பிள்ளையை
துண்டுதுண்டாகவேநான் வெட்டுவேனே
உங்களைபிரிந்துநான் உயிர்வைக்கலுமாமோ
சிந்தைகலங்கியே திரேகம்யெரியுதையோ
சொந்தமாகுதன்விஸவ கேதைநீகாட்டலுண்ணுதோ
இந்தவிதிக்கென்னசெய்வேன் யீசனேசெக்கனுதா

ஊர்வசி வசனம்.

கேளும்யென் தமக்கையாகிய சித்திராங்கதா நான் சொர்ப்பனங்கண்டு சொன்னது மெய்யாக நடந்து போய்விட்டது துரோபதை வந்து தன் புருஷனெங்கே யென்று கேட்டால் அதற்குப்பதிலுத்தரம் யென்ன சொல்லலாம் யிப்பேறப்பட்ட தூர்ச்சனப்பிள்ளையை வாளினுல் வெட்டிவிடுவமா நல்லதிருக்கட்டும் அடாபப்பரவாக குமாரனுகிய விஸவகேது யிரந்த யிடம் யீட்டுக்கொண்டு போய்க்காட்டும் பிள்ளாய் பிதுற்துரோகி.

பப்பரவாகன் வசனம்

வாருமம்மாள் தாயே யென்தமையனான விஸவகேது மேதவன்னன் மடிந்தயிடம் யிதோயிருக்குது பாருமம்மாள் தாயே.

ஊர்வசி கவி.

அப்பனேவிஸ்வகேதா அழகுகண்மணியேகேளாய்
இப்புவிமடியவிட்டு யெங்குநான்போவேனேயோ
குப்புறக்குமாரன்மேலே கோவெனருமேல்விழுந்து
எப்படியிருப்போமென்று யேங்கியேபுலம்புவாரே.

வசனம்.

அப்பாகுமாரகனை விஸ்வகேதா உன்னை யிப்பூமியில் மடியக்கொடுத்து நான்யிருக்கவோயெங்களை அலயவிட்டாயோகுமாரகா.

ஊர்வசி தரு புலம்பல்.

என்னசெய்வேன்விஸ்வகேதா யெங்களைபரிந்துநீயும்
மன்னவனேயுத்தம்செய்து மடிந்தாய்ரணகளத்தில்
சின்னஞ்சிருவயிதில் செல்வனேகண்மணியே
வர்ன்னமுகம்பால்வடிய மாண்டாயோமகனேயும்நீ

அன்னைநாங்கள் தவிக்குரோமே அலையவிட்டாய் அடாமகனே
கண்திறந்துயென்னைப்பாரும் கண்மணியேயென் மகனே
உன்னிதமஞ்சத்தின்பேரில் உஞ்சலாடுமுன்னமேதான்
சொர்ன்னமானதேகமெல்லாம் சோர்ந்ததேயென்மகனே

ஊர்வசி தாழிசை.

சூரன்விஸ்வகேதுவைக்கண்டு துயரமாகினாடினாள்
பேரனவன்மேகவர்னன்மேல் பிரண்டெழுந்தோடினாள்
மாரனும்சுதன்பிரத்தி மன்னனைக்கண்டோடினாள்
தீரன்மன்னன்மேல்விழுந்து திரண்டுவயிர்காடினாள்.

வசனம்.

விஸ்வகேதுவைக்கண்டு அழுதுபிரண்டு மேகவர்ன்னனையும் பிரத்திமன்னனையும் கண்டுபுலம்புகிற விதங்காண்க.



சித்திராங்கதை யூர்வசி தரு.

அப்பனேமேகவர்ன்னாயெப்படியுனைமறுப்பேன் பாலகனே
கற்பனையே அயன்விதித்தகளத்தில்மடிந்திடவும்பாலர்களே-சுரு
கக்குதேயென்மனம் பத்துதேயென்வயர்
சித்தம்கலங்குதே உத்தமபாலர்களே-அப்ப

வர்ன்னமுகத்தில்பால்வடியுதே உந்தன்
வாயைத்திறந்துநீபேசடா பாலா
அன்னைநாங்கள்கதரி யழுகுரோம்
ஆதாரம்பினியார்சொல்லடா பாலா-சுரு

அய்யன்கர்ப்பனை யிப்படிசெய்ய
மெய்யதுபூமியில் வீழ்ந்திடக்கண்டேன்-அப்ப

மாமிதுந்திக்குயென்றுசொல்லுவேன் மரண
மாகமுடிந்தாய்க் கொள்ளையோ
சுவாமிசொக்கநாதர் தயங்கிவிட்டாராய்யோ-சுரு

சாகுதேமனம் நோகுதேகுலே
வேகுதேஆசை யாகுதேபாலா-அப்ப

தநமர்வீமர்யிருவர் வந்துயெங்களை
இருவரேஉங்களைக் கேழ்க்குமளவினில்
வர்ம்மமாகவே யிந்ததோர்தொல்லையை-சுரு

மனதுநோகாரன் யென்னசொல்லுவேன்
வாச்சுதேபழியாச்சுதே உயிர்
போச்சுதேமூர்ச்சை யாச்சுதேபாலா-அப்ப

சித்திராங்கதை கவி

காண்டீபன்விஸ்வகேதை கண்டுமேஅழுதுசோர்ந்து
பாண்டவர்குலத்துதித்த பப்பரவாகனனேகேளாய்
வேண்டியேஅழுதாலென்ன விசையனார்வரப்போறரோ
மாண்டிடவேணுமிப்போ அக்கினிவளர்த்தும்பிள்ளாய்.

வசனம்.

அடாபிதுர்த்துரோகி அடாபப்பரவாகா பமிகளத்தில் யிரந்து போனவர்களைப்பார்த்து துக்கப் படுவதில் பலனென்னயிருக்கின்றது நாங்களிருவரும் அக்கினியில்வீழ்ந்து யெரந்து விடவேண்டும் சீக்கிரமாய் அக்கினியைவளர்த்தும் பிள்ளாய் பப்பரவாகா.

பப்பரவாகனன் வசனம்.

கேளுங்கள் யெனது அன்னமார்களே அப்படியே உங்கள்சொர் கடவாமல் அக்கினியை வளர்த்துகுரேன் யென்றுசொல்லிபப்பரவாகனன் மந்திரியாகிய சுமத்தியைப்பார்த்து அக்கினியை வளர்த்தும் படி ஆக்கியாபிக்கவும் அப்போது மந்திரியானவன் அக்கினியைவளத்துகிற விதங்காண்க.

மந்திரி விருத்தம்.

அக்கினியைத்தான்வளர்த்து மென்றுசொல்லி
அரசனார்குரிப்பிடவும் சுமத்திமந்திரி

மிக்கதோர்விசாலமதாய்க் குழிகள்வெட்டி
　　வேண்டியதோர் அகலிகெந்தம்கட்டைக்கூட்டி
உக்கிரமுள்ளசாம்பிராணி கற்பூரம்சேர்த்து
　　ஒருனூறுகொடம்நெய்யை அதிலேவிட்டு
சொக்கர்வனம்போல்தீயை மூட்டிவிட்டு
　　திரும்பிவந்துராசனுக்குச் சொல்லுவானே.

வசனம்.

கேளும்மகாருஜனே உம்மிடஉத்தாரப்படிக்கு விசாலமாகிய குழியை வெட்டி அகலிக்கட்டை கெந்தம் சந்தணக்கட்டைகளை அடுக்கி சாம்பிறுணிகர்ப்பூரம் கொட்டினூறுகொடம்நெய்யை அதிலேவிட்டு அக்கினியைமூட்டினேன் தீயானது ஆகாயபரியந்தம் யெரியுதையாசுவாமி.

பப்பரவாகனன் கவி

அன்னைதந்தைதமையாகளையானுங்கொன்று
　　ஆகாதப்பாவிநானிருந்தாலென்ன
முன்னமேதான் அக்கினியில்வீழ்வேனென்று
　　முனைந்தெழுந்துபப்பரவாகன் ஓடிவந்து
உன்னிதமாய்வேஷ்ட்டிகளையிருக்கிக்கட்டி
　　ஒயர்ந்ததொரு அக்கினியைவலமூன்றாக
மன்னவனும்சுத்திவந்து அரியேயென்று
　　அக்கினியில்தான் குதிக்கத்துணிந்திட்டானே.

வசனம்.

தமையன் தந்தையை நான் கொன்றுவிட்டு மருபடியும் தாய்மாரையும் யிழந்துபோகலாச்சுதே அப்பேர்ப்பட்டதுரோகி யிப்பூமியில் யிருக்கலாகாது நாம் மூன்னதாகவே அக்கினியில்வீழ்குரேனென்று வேஷ்ட்டிகளையிருக்கி அரையில்க் கட்டிக்கொண்டு அக்கினியைவலமாகவந்து அரிகரிகோவிந்தாவென்று தியானம்செய்கிற விதங்காண்க.

பப்பிரவாகனன் தரு.

| | |
|---|---|
| இந்தவேளைதன்னில்வாரும் | யெந்தனைஉந்தன் |
| திருவடிதன்னில் | சேரும்-சுரு |

சுந்திரமாகிய திருமலைநாதனே
தந்தைதாயெனவும் மைந்தனைக்காத்திடும்-யிந்த
பாவியாயிருந்தாலும்வெகு கோபியாயிருந்தாலும்-சுரு
தாபமாகியென்னைப் பூபனே ஆளவும்
நாபனேபரந்தாமனே துதிசெய்கேன்-யிந்த
மக்ஷசகூர்மவுதாருயென்னேநீயும்பட்சம்வத்தெனேக்காராய்-சுரு
யிச்சைகொண்டபடி அச்சுதனேகாரும்
பச்சைநிறமுடைய நிச்சயனே அரி-யிந்த
உந்தனைமறந்திருந்தாலும்நான் தந்தையைக்கொன்றிருந்தாலும்-சு
வெய்யவன்போலவே மெய்யனாகிய
துய்யனே அரி கையனேகாத்திட-இந்த

பப்பரவாகனன் கொச்சகம்.

சுந்திரனேமாதவனே சிதரனேராகவனே
விந்தை திருமலையதனில மேவும் அரிகோவிந்தனே
இந்தவன்னிதியதனில் யிப்போதோநான்குதிப்பேன்
தந்திடும்உன்பாதமலர் தர்ப்பரனேநாரணனே.

வசனம்.

அரிஓம் நமோநாராயணா அச்சுதானந்தாமுகுந்தாபரந்தாமாபத் மநாபாதாமோதரா வைகுந்தவாசா யிதோநான் அக்கினியில்குதிக்கு ரேன் அடியேனை உம்முடையதிருவடிக்கி சேர்த்துக்கொள்ளுமை யாசுவாமி.

ஊர்வசி கவி.

பதரியே அக்கினிதன்னில் பதைத்துமேவிழுகவேண்டாம்
சிதரியேபோகொண்ணாது செல்வனேபப்பரவாகா
அதிசயமாகச்சேனை அடங்கலுமெழுப்பவென்று
விதிவழியிருக்குதப்பா விளம்புவேனகேட்டிடாயே.

வசனம்.

அப்பாகுமாரகா நீபதட்டமாகத்தீயில் விழவேண்டாம் ரெணக ளத்தில் யிறந்துபோன உன்தகப்பனையும் தமைபனையும் சேனைசயின் னியங்களையும் யெழுப்பும்படி ஒருயோசனையிருக்கின்றது பதறாதேநி ல்லுமப்பாபப்பரவாகா.

பப்பரவாகன கவி.

சொல்லாமல்போன தாயே சுருக்காக வக்கினிதன்னில்.
நில்லாமல்விழுவேனென்று நின்றவன்பணிந்துக்கொண்டு
பிள்ளைகளிருந்தாலென்ன யிந்தபூமியில்மடிந்தாலென்ன
அல்லலும்நீங்குமிபயோ அன்னையேதடுத்திடாதே.

வசனம்.

வாருமம்மாள் தாயே யென் தங்கையை யெழுப்புகிறதற்கு வகைசொல்லாமல்ப் போனால் நான் அக்கினியில் விழுகிறது நிச்சயந் தான் யிந்த மகாபாதகன் பூமியில் யிருக்கத்தகாது நீ யெனக்குத் தடைசொல்லாமல் அக்கினியில் யிழுகிறதற்கு விடைதாருமம்மாள் தாயே.

ஊர்வசி கவி.

அருமையென்தமக்கையாளே அழுதள்ளமாத்தேகேளாய்
புருஷனையிழந்தாமும பிள்ளையையிழக்கலாச்சு
கறமுடன்களத்தில்மாண்டக் கணவனையெழுப்பிப்போம்னும்
திருமொழிக்குகந்தவார்த்தை சேதியைச்சொல்லுவாயே.

வசனம்.

கேளும்யென்தமைக்கயே நாம் புருஷனை யெழந்தும் பிள்ளையும் யெழக்கலாச்சுது யெரந்துபோன கணவனையெழுப்புகிறதற்கு நமது தகப்பனாரகிய ஆதிசேஷநீடத்தில் யிருக்கப்பட்ட அமுர்தசஞ்சீவி ரத்தினத்தையும் அழைப்பித்து யெழுப்பலாம் அம்மணி.

சித்திராங்கதை கவி.

அப்படித்தானேசெய்வோம் அரிவைமயென்தங்காநீயும்
தப்பிதமில்லாமர்த்தான் தனஞ்செயன்பிழைக்கவேண்டி
சொர்ப்படியாகயிந்த சுதன்தனையடுத்துநீயும்
உத்பனப்படியேநீதான் உத்தமிநடத்திடாயே.

வசனம்.

கேளுந்தங்கை யூர்வசி அக்கினியில் விழுகிற குமாரனைத் தடுத்து நமது புருஷன் பிழைக்கும்படியாய் உன்மனதின்படி நடத்திக்கொள்ளும் தாயே.

ஊர்வசி கவி.

சேடிகாளோடிநீங்கள் சீக்கிரம்அரண்மனைக்கி
நாடியேபுண்டரீகன் நம்பிடசேருவன்தான்
தேடியேஅழைத்துவாடி சீக்கிரமாய்ஒருஞொடிக்குள்
வாடியேசொன்னபோது மங்கயர்ஓடினரே.

வசனம்.

அடிவாடி தாதிமார்களே நமது அரண்மனைக்குப் போய் நம்பிட சேருவனான புண்டரீகனை அதிக சீக்கிரமாய் அழைத்து வாருங்கள் தாதிமார்களே.

பொது வசனம்.

அப்போது புண்டரீகன் கொலுவாக வருகிற விதங்காண்க.



புண்டரீகன் கவி.

ஆதாரமானமாது அர்ச்சுனன்தேவியான
கோதையாள்ஊர்வசிக்கு குணமுள்ளசேருவன்தான்
தாதியாள்சேதிசொல்ல தாஷ்ட்டீகப்புண்டரீகன்
பாதாளலோகம்போகப் பக்ஷமாய்வருகின்றனே.

புண்டரீகன் தரு.

புண்டரீகன்ஞனேவீரசூர புண்டரீகன்ஞனே
மண்டலத்தரசர்கள் கண்டுபுகழ்ந்திட
தெண்டமென்றுசொல்லி சேருவன்வந்திட
கொண்டஅநுமான்போலே அண்டயில்நின்றிட -புண்

அதலாலவிதலால சுதலாலநிதலால
தருதலபாதாளமகாதள நிகமுடன்காடியே
இகமெனசெதியை சதமெனக்கொண்டிடும்
மதமுள்ளசூரனைப் பதமுள்ளவீரனை-புண்

சுந்தரியூர்வசிக்கி முந்திசேவுகனக.
வந்தஊழியத்தை யிந்தநொடிக்குள்செய்வேன்
மந்திவளாகிரி விந்தைபர்வதங்கள்
எந்ததேசமெங்கும் சொந்தமாஓடியே-புண்

ஆதிசேஷனுக்கும் மாதூஊர்வசிக்கும்
தூதுநான்சென்றமிக்க சேதிசொல்பவன்றனும்
பாதளங்களிலும் பூதளங்களிலும்
சாதனங்களிலும் நீதமாகச்சுதனும்-புண

புண்டரீகன் கவி.

ஊர்வசித்தாயேபோற்றி உத்தமியென்னைநாடி
சாதகமாயென்னையழைத்த சங்கதிசொல்லுவாயே.

ஊர்வசி கவி.

பலமுள்ளபுண்டரீகா பாதாளலோகம்போக
நலமுடகழைத்தேனுன்னை நன்மையாயுரைசெய்தேனே

புண்டரீகன் வசனம்.

சருணம் சருணமம்மாள் தாயே அடியேனை அழைப்பித்தவிப ரங்களை இன்னதென்று யெனக்குதெரியச் சொல்லுமம்மாள் தாயே

ஊர்வசி வசனம்.

வாருமப்பாபுண்டரீகா பாதாளலோகம்போக அழைப்பித்தே னப்பாபுண்டரீகனே.

ஊர்வசி தரு.

ஆதிசேஷன்யென்தகப்பன் அவர்க்குனன்சேதிசொல்ல-நீ
அமுர்தகலசந்தன்னை வரவழைத்து
சோதிசஞ்சீவிரத்தினத்தால் கணவனும்
துலங்கும்முழுதும்சேனை யெழுந்திருக்க
புண்டரீகசேகுவனே பாதாளலோகம்போய்
பூலோகத்தில்நடந்த சேதிநீசொல்லி

கண்டு அடையாளமாக காதுப்பொன்னோலையுங்கூட
கழுத்துமங்கிலியமும் கையில்கொடுத்தேன்
தனஞ்செயன்சண்டையில் தானும்மடிந்தாரொன்று
சஞ்சீவினியில்யெழுப்ப வேணுமென்று
எனம்பிரீதமான்போலே யேங்கியேஉன்மகனும
யிருக்குறாளென்றுசொல்லும் புண்டரீகா
மாண்டவரையெழுப்பி மன்னனைக்காணவேணும்
வாராயொருநொடிக்குள் புண்டரீகா
ஆண்டவனைக்கண்டு அன்பு ஆசையைத்தீர்ப்பேன்
ஆதிசேஷனேயென்மேல் அருள்புரிகுவாய்-ஆதி

ஊர்வசி கவி.

நாதனேபுண்டரீகா சொற்படிஅடையாளத்தை
பாதாளஆதிசேஷன் பாதத்தில்விழுந்துபோற்றி
நீதறக்கணவன்மாண்ட சேதியைச்சொல்லிரத்தின
வாதாடிஅமுர்தம்போன்ற கலசத்தைவாங்கிவாரும்

வசனம்.

வாருமப்பாபுண்டரீகா பாதாளலோகம்போயி ஞான்அடையாளமாகக்கொடுத்தகாதோலை மங்கில்லியமும்யென்தகப்பன்ஆதிசேஷநிடத்தில்காண்பித்து யிவ்விடத்தில்நடந்தசேதிகளைச்சொல்லிமடிந்தகணவனையெழுப்பும்படியாக அமுர்தகலசத்தையும் மிருதசஞ்சீவிரத்தினத்தையும் வாங்கிவாருமப்பாபுண்டரீகனே.

வசனம்.

அப்படியே வாங்கிவருகிறேனம்மாள்தாயே ஊர்வசியம்மணி.

பொது வசனம்.

அகோஇதப்படி யென்றால் புண்டரீகன்பாதாளலோகம் போவதாக சம்மதித்திருக்க அந்தச்சமையத்தில் பாதாளலோகத்தில் ஆதிசேஷன் கொலுவாக வருகிற விதங்காண்க.

ஆதிசேஷன் விருத்தம்.

தாரணியில்வாய்வுக்கிறமேருதன்னை
தான்சுத்திக்கொடிமுடியை யிருத்திக்கொண்ட

வாருதிபுகழ்பூமிதன்னை தாங்கும்உக்கிற
ஆயிரம்பணாமுடியை யுடைததோனை
ஸ்ரீஆதிசேஷனுமே மந்திரிகூட
திசையெட்டுமொககமது புடையேசூழ
பேர்பெற்றியநவமணி சிம்மாதனத்தில்
பொருந்திகொலுஅரசாட்சி செய்கின்றானே.



ஆதிசேஷன் தரு.

ஆயிரம்முடிபெற்றஆதிசேஷராசன் அரசன்கொலுவில்வாறான்
மந்திரியுங்கூட அரசன்கொலுவில்வாறான்
சேயிழைமாதனூட சாயும்சாமரைபோட
தூயவெண்குடை கவிக்க நேயர்களுஞ்சூழ-ஆயிர
அஷ்டட னாகங்கள்சூழ வெட்டுதிசையுந்தாழ
மட்டிலாமந்திரிகூட கட்டியங்கூறிபாட
பட்டவர்தனர்களும் யிஷ்ட்டமாகசேவலர்ந
சட்டமாய் முடிவணங்க
நத்தினமிட்டு மாதரின்னம்-தரு
கட்டியதோரணமெங்குமிலங்க கனககவமணிகள்முத்திலுந்துலங்க
வட்டமாகப்படை தஷ்டநாகமுடன்

யிட்டுவருவார் குடைவட்டமேபோட
மங்கையராட கொங்கைகளாட - ஆயிர

பூதலத்தைத்தாங்கும் பாதாளத்திலோங்கும்
வேதன்முதலாக ஆதரவுமாக
சீதரன்பள்ளிகொள்ளும் பாதந்திருமுடியில்
மீதுவிளங்கிய விண்டுமுடியின்மீதில்
சோதிரத்தினஞ் செரலிக்க சுரு

காரலாகமுத்து மாலைகள்தொகுக்க
கன்னியர்முறைமுறை ஆலங்களெடுக்க
நீதியாகஒரு ஆதிமூலமென
கோதிலாமல்பேச நாதன்வெகுவிலாச ஆயி

மந்திரிதிருதருட்டிரன் தந்திரமிகுந்தசீலன்
வந்து அண்டையில்நிற்க முந்திசேனையைசேர்க்க
கந்தமல்லிகைவாசன் விந்தைமலர்தூவ
பந்தியாகவேநெரிங்கி நாகசேனைகள்
சிந்தைமகிழ்ந்து ஆலங்க சுரு

கந்தவிஷங்களும் சீரியமேவ
சகலபூண்டுகள் பஸ்மீகரமாக
இந்தஞானே யெந்தலோகத்திலும்
சொந்தமாகவாழ்த்தி யிந்திரனைப்போற்றி ஆயி

ஆதிசேஷன் கவி.

கொலுவினில்ஆதிசேஷன் கூடியேநாகசேனை
வலுவுள்ள அஷ்டநாகம் வந்துகைகட்டிநிற்க
நிலமையாயரசுசெய்து நெடியமாதவனைப்போற்றி
பலமுள்ளபுண்டரீகன் பணிந்துரைசெய்கின்றனே.

வசனம்.

ஆதிசேஷனானவர் மந்திரிப் பிரதானிகளுடனே அஷ்டநாகங்களும் புடைசூழக் கொலுவிலிருக்கும்போது புண்டரீகன் ஆதிசேஷனைக்கண்டு சொல்லுகிறவிதங்காண்க.

புண்டரீகன் கவி.

காதோலைமங்கில்லியத்தை கறத்தினில்வாங்கிக்கொண்டு.
பாதாளலோகமேகிப் பங்கிளி அடையாளத்தை
ஆதாரமான ஆதி சேஷன்முன்வந்துபோற்றி
பாதாரவிந்தந்தன்னைப் பாங்குடன் துதிக்கின்றானே.

வசனம்.

சுருணம் சுருணமையா சுவாமி ஆதிசேஷமகாராஜனே பூலோகத்திலே உம்முடைய குமாரத்தியாகிய ஊர்வசியம்மன் தங்களுக்கு அடையாளமாகக் கொடுத்தனுப்பிய காதோலைமங்கில்லிய சூஸ்த்திரம் யிந்தாருமையா சுவாமி.

ஆதிசேஷன் கவி.

என்னடா புண்டரீகா யென்மகள் மங்கில்லியத்தை
கன்னியாள் கொடுத்ததேது கணவனுக்கிடர்களுண்டோ
சொன்னசொற்படியேநீதான் அதனைசொல்லக்கேளாய்
மன்னியேமனதுவாடி மகிபதியுரைசெய்வானே.

வசனம்.

வாருமப்பா புண்டரீகா பூலோகத்திலிருக்கப்பட்ட யென்குமாரத்தியாகிய ஊர்வசியம்மனுடைய கழுத்து மங்கில்லியமும் காதிலணியப்பட்ட பொன்னோலையும் உன்னிடத்திற் கொடுத்ததேது நீ யென்ன காரணமாய்க் கொண்டுவந்தாய் ஆ! ஆ!! யிதுயெனக்கு ஆச்சரியமாகயிருக்கின்றது அதுவுமல்லாமல் மனவருத்த முண்டாகுது அல்லது அவள் புருஷனுக்கு யேதாவது இடர்களுண்டோ சொல்லுமப்பா புண்டரீகா.

புண்டரீகன் தரு.

அய்யனேஉள்ளசேதி ஆதியோடந்தமாக
அருளுவேன் கேளுமையா — ஆதிசேஷா
மெய்யாகவேபூமி அர்ச்சுனபுரந்தன்னிலே
வீரன் தருமராசன் — ஆதிசேஷா
பாங்காய்மகுடத்தலைவர் படிகளத்தில்மடிந்து
பாபம்விட்டோடிப்போக — ஆதிசேஷா

தருமராசர்யாகம் செய்யவென்றுகுதிரையை
தனஞ்செயன்விட்டுவந்தார் ஆதிசேஷா
தக்கபன்குதிரையென்று தானறியாமலே
சமுத்தன்பப்பரவாகன் ஆதிசேஷா
பக்குவமாய்ப்பிடித்து பப்பரவாகன்தானும்
பார்த்திபனென்றுசொல்லி ஆதிசேஷா
தந்தைக்குதிரையென்று கட்டில்வெகுமதிகள்
தந்தாசனும்செய்தான் ஆதிசேஷா
மைந்தன்வெகுமதியை மகிஷியாய்க்கொள்ளாமல்
பார்த்தன் வாரியடித்தான் ஆதிசேஷா
க்ஷத்திரியக்குலத்திற்பிறந்தவரீயானல்
சண்டைசெய்யடாவென்றான் ஆதிசேஷா
உத்தமிஉந்தனைப்பெற்றாள்வசினுக்கு
உருதியுரைத்ததினால் ஆதிசேஷா
சொன்னஉடன்பப்பரவாகன்கோபங்கொண்டு
துரகபதாதியுடன் ஆதிசேஷா
மன்னன்விசையனுடன்மாள உயித்தியம்செய்து
மடித்தான்ரணகளத்தில் ஆதிசேஷா
மேகவர்ன்னன் அனுசாலுவன்விஸ்வகேதுங்கூட
வீரரெல்லாமடித்தானே ஆதிசேஷா
சாகஅடித்துவிட்டதாலேயூர்வசியும்
தந்தாள்மங்கில்லியஒலை ஆதிசேஷா
அடையாளத்தைக்கொடுத்து அமுர்தசஞ்சீவிரத்தினம்
ஆவள்வாங்கிவரச்சொன்னாள் ஆதிசேஷா
மடிந்தபேரையெழுப்பவாங்கிப்போகவந்தேன்
அய்யனேதந்தருளும் ஆதிசேஷா

ஆதிசேஷன் விருத்தம்.

புண்ணீகன்யிவ்வாறுசொல்லக்கேட்டு
புதுமையிது அர்ச்சுனன்தான்சாவதேது
மைந்தனவன்பப்பரவாகன்கொல்வதேது
மகத்தானமகாவிஷ்ணுபக்தனனை
அண்டர்தொழும்சிவனேடுஉயித்தியம்செய்து ௧
அஸ்த்திரமும்அதிகவரம்பெற்றேன்தன்னை

கொன்றுவிட்டானென்றுசொன்னால்நிசமாயில்லை
கூடாசேருவனேகூரிடியே

வசனம்.

வாரும்பாபுண்ரீகா நீ சொன்னவார்த்தை நன்றாயிருந்தது கைலாசபதியானசிவனோடு உயித்தியம்செய்து அனேகவரம் பெத்தவன் நிவாதகாலகேயர் முதலான அனேகம் விராதி விரரையெல்லாம் செயம் பெற்றவன் அப்படிப்பட்ட அகண்டிதவீரபராக்கிர்ம்மனான அர்ச்சுனமகாராசன் சாவதேது அந்தசிறுபயலானபப்பிரவாகன் கொல்வதேது அவன்விஷ்ணுபக்தியுள்ளவன் நீ சொல்லப்பட்டவார்த்தை யெனக்குயெவ்வளவும் நிசமாகத்தோன்ற வில்லையடா புண்டரீகனே.

புண்டரீகன் கவி.

துங்கமாம்ஆதிசேஷர் சொன்னது மெய்தானந்த
கங்கையின்சாபத்தாலே களத்தினில்மடிந்தானிப்போ
இங்கவன்சொன்னபோது யிதுவுமேமெய்தானென்று
அங்கவனமுர்தரத்தினம் அனுப்பவுமெண்ணினானே

வசனம்.

கேளுமையாசுவாமி ஆதிசேஷமகாராசனே அர்ச்சுனமகாராசன் அதிக வல்லமையுள்ளவன்தான் சண்டையில யிறந்துபோகமாட்டா னென்று சொல்வதும் மெய்தான் கங்கையினுடைசாபத்தினால் யிப்படிப்பட்ட ஆபத்துவந்து சம்பவித்ததையா சுவாமி.

ஆதிசேஷன் வசனம்.

கேளும் புண்டரீகா நீ சொன்னவார்த்தை சரியாகயிருக்கும் அமுர்தகலசமும் மிருதசஞ்சீவிரத்தினமும் கொடுக்கிறேனப்பா புண்டரீகா.

மந்திரிதிருதராட்டிரன் கவி.

மெண்ணின்போதுமந்திரி யெழுந்திருந்தோடிவந்து
அண்ணலேஅமுர்தரத்தினம் அவனியில்அனுப்பலாமோ
கண்ணனுமிருக்கும்போதுக் காரிமழக்குறைவுமுண்டோ
மண்ணினில்போனால்ரத்தினம் மறுபடிவாராதையா.

வசனம்.

கேளுமையா ஆதிசேஷமகாராசனே அமுர்தகலசத்தையும் மிருத சஞ்சீவி ரத்தினத்தையும் பூலோகத்துக்கனுப்பினால் மறுபடியும் நமது லோகம் வருமோ ஸ்ரீகிருஷ்ணதேவரிருக்கும்போது நம்மிட ஊர்வசியம்மனுக்கு யாதொருகுறைவும் வாறதையா சுவாமி.

மந்திரிதிருதருட்டிரன் தரு.

யென்னயோசனையெண்ணினீர் ஆதிசேஷா
யேதுயோசனை யெண்ணினீர்
அன்னவர்க்கென்றிந்த அமுர்தசஞ்சீவிரத்தினம்
பின்னையும்பூலோகத்துக்கு போகஅனுப்பலாமோ-யென்
கெருடன்வராமலே கொடுத்துசஞ்சீவிதந்தால்
மறுபடியும்நமக்கு வருமோபிறகுரத்தினம்-யென்
கொடுத்தோமென்றசேதி கெருடன்செவியில்கேட்டால்
மடித்துநம்மையெல்லாம் மாளப்பொலிகொடுப்பரின்
அர்ச்சுனன்பிழைத்திட அமுர்தம்போகவேண்டுமோ
மைத்துனன்கிருஷ்ணனார் மாயவரிருக்கவே-யெ

மந்திரி திருதருட்டிரன் கவி

அரசனே ஆதிசேஷா அமுர்தரத்தினங்கள்தன்னை
விரைவுடனனுப்பாதையா மேதினியில்விசையன்தன்னை
பரிவுடன்யெழுப்பமாயன் பக்கத்திலிருக்கும்போது
சரிவுடன்யெழுப்பலாகும் சந்நிதியில்திலிப்பிடிரே.

வசனம்.

கேளும்மகாராஜனே அமுர்தகலசத்தயும் மிருதசஞ்சீவி ரத்தினத்தையும் பூலோகத்துக்கு அனுப்பக்கூடாது நமக்குகெருடனால் பயமிருக்கிறது மடிந்துபோன அர்ச்சுனனை யெழுப்பவேண்டுமானால் கிருஷ்ணதேவரிருக்குரார் அவருக்கு சஞ்சீவி போகவேண்டுமோ அந்தசேதுவனை சும்மா அனிப்பி விடுமையா சுவாமி.

ஆதிசேஷன் கவி.

நம்மிடமந்திரிவார்த்தை ஞாயமாயிருக்குதிப்போ
இம்மையில்புண்டரீகா யெழுந்திருந்தோடிசென்று

பொம்மெனஊர்வசிக்கி போனகாரியங்கள்தன்னை
செம்மையாய்மகள்தனக்குச் சேதியைச்சொல்லுவாயே.

வசனம்.

வாரும் புண்டரீகா ஈம்மிட மந்திரியாகிய திருக்கருட்டிான் சொல்லுகிற வார்த்தை ஞாயமாக யிருக்கின்றது நீ சீக்கிரமாக பூலோகத்துக்குப் போய்ஈம்மிட குமாரத்தி ஊர்வசியம்மனுக்குசேதியைசொல்லும் பிள்ளாய் புண்டரீகா.

புண்டரீகன் கவி.

தானவன்புண்டரீகன் சடுதியில்பூமிவந்து
ஆனதோர்ப்பப்பரவாகன் அன்னையாளிருவருக்கும்
போனதும்வந்துநல்ல புறந்தவிஸ்த்தாரமெல்லாம்
கோனவன்திருச்செவிக்கிக் கொடுமையாய்சொல்லினனே

வசனம்.

கேளுமம்மாள் ஊர்வசி பாதாளலோகத்துக்குப்போய் ஆதிசேஷனைக் கண்டு உம்முடைய அடையாளத்தையுங் கொடுத்து அமுர்தசஞ்சீவி கேழ்க்கதிருதராட்டிர மந்திரியென்பவன் கொடுக்கவொட்டாமல் தடுத்துவிட்டானென்று அங்கே நடந்த சேவிஸ்த்தாரங்களெல்லாம் சொல்ல அதைபப்பரவாகன் கேட்டு கோபிக்கிற விதங்காண்க

பப்பரவாகனன் விருத்தம்.

தூதனவன்சொல்லிடவும் பப்பரவாகன்
துடித்தவனும்யெழுந்திருந்து கோபங்கொண்டு
நீதமுடன்பூமிதன்னைச் சுமந்ததாலே
நிஷ்க்கரித்துகெற்வித்தா னாதிசேஷன்
காதலாய்துஷ்ட்டமந்திரி வார்த்தைக்கேட்டு
கருத்தழிந்துஅமுர்தத்தினைக் கொடாமற்போனான்
பாதகனைக்கொன்றிடுவே னென்றுசொல்லி
படைகளுடன்பயணமதாய் புறப்பட்டானே.

வசனம்.

சேவகன்வந்து சேதிசொன்னமாத்திரத்தில் பப்பரவாகன்கோபங்கொண்டு அந்த ஆதிசேஷனானவன் பூமியைச் சுமந்தோமென்

நகற்வத்தினாலல்லவா யிப்படி சொல்லிவிட்டான் அவன்யிந்த பூமி யைச்சுமக்காமல் போனாலும் போகுறான் அவனுடைய கெற்வத்தை சற்றுநேரத்தில் அடக்குறேன் வாருமப்பா சுமத்திமிந்திரி பாதாள லோகத்துக்கு போகவேண்டும் நம்மிட சேனைசயினியங்கள் யெல்லாம் பயணப்படுத்தும் பிள்ளாய் மந்திரி வாரும் பிள்ளாய் புண்டரீகா. பாதாள லோகத்துக்கு வழிகாட்டும் பிள்ளாய் புண்டரீகா.

பப்பரவாகன் தரு.

பாளலோகமே யேகுவோம்-அந்த
பாதகன்சேஷனைக் காதகமழிப்போம்-சரு

ஆதாரமான சஞ்சீவிரத்தினம்
அமுர்தகலசத்தை அரைஞாடிதன்னிலே
வாதாடிக்கொண்டு வருவோம்
கணத்தில்மடிந்த தப்பனைக்கண்டுயெழுப்ப-பாதா

அத்தனார்யீஸ்வரனார் வந்து-தன்
ஆபரணங்களை அழிக்குறேனென்று
கர்த்தனும் யென்னுடனெதுத்தால்
அவரைகணையினால் பூசித்துகண்டித்துசெயிப்போம்-பாதா

நன்மார்க்க மில்லாதமந்திரி-தருத்த
நாகத்தையுங்கண்ட மாசேவன்தன்னை
துன்மார்க்க சேஷனுமிந்தபூமி
சுமக்காமல்ப்போனாலும் நமக்கென்னசேதம்

புண்டரீகன் வழிகாட்ட-அதில்
புரப்பட்டு ரதகசதுரகபதாதி
கொண்டேனக லோகமேகி-அங்கே
கூரியேசண்டைக்கி ஆர்ப்பரித்தானே-பாதா

பப்பரவாகன் கவி.

சதுரங்கசேனையோடு கண்டுவிட்டிறங்கி அங்கே
அதிவிதயெக்காளைபேரி ஆர்ப்பரித்திடிமுழக்க
பதியெழுநாகசேனைப் படைகளும்நடுநடுங்கி
சதிசெய்யப்பப்பரவாகன் சண்டைக்கிப்புரப்பட்டானே

வசனம்.

பாதாளலோகத்திற்குப்போய் சதுரங்கச்சேனையோடு தண்டுவிட்டிறங்கி ரெணபேரிகையலரந்து சண்டைக்கிஆரம்பிக்கும்போது நாகசேனைகள்யெல்லாம நடுக்கமுற்று சொல்லுகிற விதங்காண்க.

ஆதிசேஷன் கவி.

புறப்பட்டசென்றபோது பெலமதுஒடிங்கிச்சேனை
சரிப்படாமந்திரியாலே சகலருப்மடியலாச்சு
திரப்படாநாகமந்திரி சேனைகளெல்லாஞ்சென்று
மறிப்படாவிஷத்தாலசேனை மாளவேசெய்தீடீரே.

வசனம்.

பப்பரவாகனெனவன் பேரிகையரைலித் தமாத்திரல்ஆதிசேஷன்நொடிங்கிதுஷ்ட்டமந்திரிவார்த்தையைக்கேட்டுநாகசேனையெல்லாம்மடியக்காலமாச்சுது வாருங்கள்மந்திரிகளே நம்முடைய சேனைசையின்னியத்துடன் கூட்டிப்போய் பப்பரவாகனன் சேனைகளை யெல்லாம் விஷாக்கினியினலே பஸ்மீகறப்படுத்திப்போடுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி திருதராட்டிரன் கவி.

இப்படிஆதிசேஷன் யிடிபிடித்ததுபோல்சொல்ல
கொப்பனநாகமந்திரி கொடும்விஷமுள்ளசேனை
தப்பிதமில்லாமற்றன் தளங்களைக்கூட்டிக்கொண்டு
பப்பரவாகன்முன்னின்று பரிவுடன்யெதிர்த்துச்சொல்வான்,

வசனம்

ஆதிசேஷன் உயித்தியத்துக்குப் போவென்று சொன்னமாத்திரத்தில்மந்திரியாயதிருதராட்டிரன் நாகசேனைகள் யாவற்றயுங் கூட்டிக்கொண்டுபோய் பப்பிரவாகனன் முன்னே நின்றுயெதுத்து யேதென்றுச் சொலலுகிறவிதங்காண்க.

திருதறாட்டிரமந்திரி கந்தார்த்தம்.

ஆடாபாதாளத்தில் ஆண்மையாய்க்கூட்டங்கூட்டி
பேராடசெய்பவந்தாய் புசபலமதனைவிப்போ

பாரடாயெங்கள்நெஞ்சில் பலமுள்ளவிஷாக்கினியாலே
நீரடாசெய்து நாங்கள்

தரு.

நிமிஷத்தில்கோபமுடிப்பேன் உங்களுடைய
வமுஷத்தைசாக அடிப்பேன்
தூமஷப்படுத்திஉன்னை ஊாத்தியெலவம்பஞசாய்
கவசந்தேர்கள்முதலாயக் காலாக்கினிபோல்செய்வோம்- நிமி

பப்பரவாதனன் கந்தார்த்தம்

நிமிஷத்திற்கொல்வோமென்று நெரியுள்ளநாகமந்திரி
யிமைசைகளாகயிப்போ யெமபுரிக்கேகநீங்கள்
தூமுஷமேபடுத்திநாங்கள் தூளொத்திடுமனேகபாணம்
சமுத்துடன் ஞாணிபூட்டி

தரு.

சரமாரியெய்தேன் நாகசேனைகள்
அதமதாய்க் கொய்தேன்
வரும்நாகமந்திரியுன் வலுவானசேனையை
சரகுபரந்தாப்போலே அரைநொடிதன்னிலே-சர

நிருதரூட்டிரமந்திரி கந்தார்த்தம்.

சாமரியெய்தேனென்று சமர்த்தனேபப்பரவாக
விருதாவுமாகவேதான் வீரியவார்த்தைசொன்னாய்
காமுடன்வுந்தன்தேரும் கலாள்கள்சேனைதன்னை
உருளவே நஞ்சுதன்னால்.

தரு.

ஒருநொடியில்தலையருப்பேன் விஷாக்கினியாலே
சிதரப்போர்கள் முடிப்போம்
கதரிகதரிச்சேனை பதரிப்பூமியில்விழ
செருமென்றிராணியால் சிந்துசிந்தாய்விழ ஒரு

பப்பரவாகனன் கந்தார்த்தம்

அதிகமாய்நாகசேனை ஆக்கிறமித்தெழுந்துசீறி
ஸிதிபெரும்பப்பரவாகன் நேருடன்கோபங்கொண்டு

கதிபெருமஸ்த்திரங்கள் களமதுசோனுமற்றுன்
சதிசெய்து நாகசேனே.

தரு.

சாகவும்அடித்தான் நாகசேனையை
போராகக் குவித்தான்
வேகமாகபாணம் அனேகமாகவிட்டு
நோகநோகவிழ மாளக்கணையைவிட்டு சாக

திருகருட்டிர மந்திரி விருத்தம்.

தாஷ்ட்டிகபிரியமு முள்ளமைந்தா
தந்தையரைக்கொன்றுவிட்டு வெழுப்பமெண்ணி
நாட்டமுடன் அக்கினிபோல் வெகுண்டுவந்தாய்
நன்மையல்லசம்மதமும் மில்லைகண்டாய்
கூட்டமுள்ள குருகுலத்து நடத்தைமாத்திரம்
கொத்தவனே நீயுமப்படியேசெய்தாய்
தேட்டமுடன்மணிகரம் சென்றுசெங்கோல்
செலித்திட்டாலதுவுனக்கு ஞாயந்தானே.

வசனம்.

வாருமையா ருசகுமாரகா நீர் தகப்பனைக் கொன்றுவிட்டு மறுபடி பிழைக்கச் செய்யவேண்டு மென்று நினைத்து வந்தாய் அதுவெனக்கு சம்மதமில்லை உன் தகப்பனைக் கொன்று விட்டது யெனக்குச் சந்தோஷமாகயிருக்கின்றது அதுயெப்படியென்றால் உங்கள் குருகுலத்தில் நடந்த வழக்கப்படியே செய்தாய் நீர் னூதனமாக ஒன்றும் செய்யவில்லை, உன் தகப்பனுை அர்ச்சுனமகாருஜன் பாரத உத்தத்திலே பிதாவுக்குச்சரியான கர்னன் வீஷ்மர் துரோணர் முதலான பெரியோரைக் கொன்றுவிட்டான் அவ்விதம்போல் நீயும் செய்தாய் சண்டையை விட்டு விடு பட்டணம்போய் அரசாக்ஷி செய்யுமப்பா ராசகுமாரகா.

பப்பரவாகனன் விருத்தம்.

நன்மார்க்கத்தத்துவத்தைசொல்லவந்த
நல்லவனேமந்திரிஞனென்றுசொல்வேன்
உண்மையாயெங்களிடதாயாதிதானும்
ஒருமைப்பாதினுகொடாதத்தாலே

வல்லமையாய்யென் தகப்பன்காண்டீபத்தால்
வந்து அஸ்தினாபுரியைக்கொள்ளைகொண்டார்
இம்மையிலுமுன்குலத்தைவேருத்து
மிருதசஞ்சீவிரத்தினமிட்டுப்போரேன்

வசனம்.

வாரும் நாகமந்திரியே ஆ! ஆ!! நீர் சொன்னவார்த்தைமெய்தான் தகப்பன் செய்தபடி பிள்ளை செய்யவேண்டுமென்று சொன்னது உண்மைவசனந்தான் அதுயெப்படியென்றால் யெங்கள்தாயாதியாகியதுரியோதனனானவன் யெங்களுக்குரியபாதிநாட்டைக்கொடாமல் அப்படிசெய்தபடியால் யென்தகப்பனாகிய அர்ச்சுனமகாராசன்தன்னுடையபாணாக்கினியினாலே அவனுடைய வம்மிஷத்தையெல்லாம் வேறறுத்து அஸ்தினாபுரியைக் கொள்ளையிட்டார் அந்தமுறைமைப்படி உம்முடைய வம்மிஷத்தையெல்லாம் வேருத்துமிருத சஞ்சீவிரத்தினத்தையும் அமுர்தகலசத்தையும் ஆதிசேஷனிடத்தில் வாங்கிக்கொண்டுப்போகுரேனெ யின்னஞ்சற்றுநேரத்திற்பாரும் மந்திரியே.

பப்பிரவாகனன் தரு.

நாகமந்திரியேயீதத்த வார்த்தைசொன்னாய்
யேகமாயிதோபாணம் விடுகுரேன்பாராய்

நாகசேனைதிருசனுடைதமந்திரி தரு.

விடுத்தபாணமெல்லாம் விஷத்தாலெரித்தேன்
அடுத்தசேனையெல்லாம் அடங்கலும்மடித்தேன்

பப்பிரவாகனன் தரு.

மடித்தபோதுநாகாஸ்திரம் விடுத்திட்டேன்
கடுத்துமாகக்கணைக் கவ்வியேகொல்லுதே

நாகசேனைதிருதராட்டிரமந்திரி தரு.

கொல்லும்போதுநாகம் கூடி ஆகாயத்தில்
மல்லாகுதென் றுயிசால்லி வாடிபரக்க

பப்பிரவாகன் தரு.

பாக்கும்போதுசிருது அஸ்திரங்தொடுத்திட்டேன்
பருந்துக்கூளிட்டைகை பழம்போல்முழுங்க

நாகசேனை திருதராட்டிரமந்திரி தரு.

மூழ்கும்போதுநாகம் பொந்துப்புதாருக்குள்
நுழைந்திப்பதுங்கிட னொடியினில்மன்னன்

பப்பரவான் தரு.

மண்ணினில்க்கண்டுநான் அஸ்திரந்தொடுத்திட்டேன்
வண்ணமயிலப்பரித்து வதைத்திடத்தானே

நாகசேனை திருதமந்திரி தரு.

வளைத்திடும்போதந்த மாருதவேளையில்
யதைத்துப்புருந்திடப் பார்த்தந்த அரசன்

பப்பரவாகனன் தரு.

அரசன் அம்மோவிஷா அஸத்திரம்தொடுத்திட்டேன்
படர்ந்துமேகமதில் பாணங்கள்பொழிய

நாகசேனை திருதமந்திரி தரு.

பொழியவும்பிலிகா அஸ்த்திரம்தொடுக்கவும்
புரந்தர்நூயெரும்புகள் தருநர்பாயெரிக்க

நாகசேனை கவி.

எரித்திடும்போதுவேளை யிருந்ததோர்நாகமெல்லாம்
யரிந்திட ஆதிசேஷன் பாதத்தில்பணிந்துபோற்றி
ஞரித்திடும்பப்பரவாகன் கொடுமைகள்பொருக்கமாட்டோம்
திறத்துடன்அமுர்தகத்தினம் தீரனேகொடுத்துகாப்பீர்

வசனம்.

சருணம் சருணமையா ஆதிசேஷமகாராஜனே யப்பரவாகனனுடைய பாணமானது நாங்கள் பெங்கேபோய் ஒளிந்தபோதிலும் தெரித்திக்கொண்டு வருகுதானுங்கள் யெங்கேபோயிருப்போம்துன்மார்க்கமான மந்திரி வார்த்தையைக் கேட்டபடியினாலே இப்படிப்பட்ட ஆபத்துவந்து சேனைகளெல்லாம் மடிந்துவிட்டது யினிமேலாகிலும் தயவுசெய்து அமுர்தகலசமும் மிருதசஞ்சீவி ரத்தினமும் பப்பரவாகனனுக்கு கொடுத்து யெங்களை ரக்ஷிபுணமையா சுவாமி.

ஆதிசேஷன் விருத்தம.

சற்பமெல்லாம் அபையமென்றுகூறும்போது
தன்மனதில்திகிலடைந்து சேஷன்தானும்

துர்ச்சுனமந்திரிவார்த்தனைக் கேட்டோனும்
  சொல்பிசகிஅவமானம் நேர்ந்ததென்றும்
உற்பதமாய்அமுர்தமொடு மிருகசஞ்சீவி
  உயர்ந்தர்த்தின மாணிக்ககிரீடங்கொண்டு
ஒப்பனையாய்க்காணிக்கை மன்னன்முன்னேவைத்து
  உகந்தவனைமார்போடு தழுவினனே.

வசனம்.

துர்ச்செனமான மந்திரி வார்த்தையைக் கேட்டு நாகசேனைக ளெல்லாம் மடிந்ததுமல்லாமல் அவமானம் நேரிட்டது அடாமந்திரி யாகிய திருதராட்டிரா அப்போதே வந்தசேருவன் கையில் சஞ்சீவி கொடுத்தனுப்பி விட்டால் இப்பேர்ப்பட்ட விபரீதம் நேரிடமாட் டதே மந்திரியாகிய திருதராட்டிரனே.

பொது வசன்ம்.

இந்தப்பிரகாரம் ஆதிசேஷமகாருசனும் அனேக மந்திரிமார் களும் அமுர்தகலசமும் மிருகசஞ்சீவி ரத்தினமும் மாணிக்ககிரீடா த்திணபரணங்களும் வெகுமதியாக யெடுப்பித்துக் கொண்டுபோய்ப ப்பரவாகனனைக் கண்டு அப்பா பப்பரவாகா உம்மிட பறுக்கிறமத் தை யரியாமல் யிப்படி செய்தோம் நாங்கள் செய்த அபசாரத்தைம ன்னித்து றக்ஷக்ஷிக்கவேண்டு மென்று ஆதிசேஷ மகாருஜன் சொல் ல பப்பரவாகன் சொல்லுகிரவி தங்காண்க.

பப்பரவாகனன் கவி.

அடியின்மேல்அடியடித்தால் அம்மியுநகருங்கண்டாய்
படிமிசைக்கேட்டதண்டு பக்கத்திலிருக்குதையா
குடுமென்றபோதுரத்தினம கொடுத்திட்டால்கொடுமையுண்டோ
இடிவந்தபோதுநீங்கள் யிப்படி தருவதுண்டோ.

வசனம்.

ஆ! ஆ!! நன்றாயிருக்கின்றது அடியின்மேல் அடியடித்தால்அம் மியும் நகருமென்று உலகத்தார் சொல்வார்கள் அதுபோலே நமது பாட்டனிடத்தில்தான் யிருக்கின்றது முன்னேதானே கேட்டபோ தே கொடுத்துவிட்டால் யிப்பேர்ப்பட்ட கெடிதிவரமாட்டாது த லேமேலே இடிவந்தபோது கொடுக்கவந்தீர் இதுவே சரி சரி ஆ! ஆ!! பாட்டனாறே.

பப்பரவாகனன் விருத்தம்.

பரியாசமாகஒரு வார்த்தைசொன்னேன்
பாட்டனேவுன் தாளிணைக்கிச்சருணமையா
விரிவானசேனையோடுசேஷன்கூட
வெளிபட்டுமணிபுரத்தை வருகும்போது
சரியிலாதிருதருட்டிர மந்திரியோடி
தன்மகனும்துர்ப்புத்தி துர்ப்பாலன்தன்னை
குருரமாய்த்தனஞ்செயனை யெழுப்பாமல்தான்
கொடியசிலயோசனைகள் சொல்லுவானே.

வசனம்.

அகோவாருமையாபட்டனாரே அடியேன்பரிகாசமாகச்சொன்னேன் உம்முடையபாதத்திற்குச்சருணம் நம்முடையசேனசமூகத்தோடமேணிபுரத்துக்குப் போவோம் வாருமென்று பிரயாணமாய்ப் போகும்போது திருதருட்டிர மந்திரியானவன்தன்குமாரனை துர்ப்புத்திதுர்ப்பாலனை கூப்பிட்டுச்சொல்லுகிறவிதங்காண்க.

நாகமந்திரி விருத்தம்

திருவுடையதுர்ப்புத்திதுர்ப்பாலனேகேள்
திரமானவிசயனுடசிரசையும்
ஒருவருக்குந்தெரியாமல் யெடுத்துவந்து
உயிர்கெருடன்காணாமல்ஒளித்துவைத்து
இருவருமேகாவலதாயிருங்களப்பா
யெனதெஜமான்ஆதிசேஷன்கூடயேகி
மருபடியுந்தந்திரத்தால்சூதுசெய்து
மாண்டவரையெழுப்பாமலவருகுவேனே

வசனம்

வாருங்களப்பாயென துகுமாரர்களே சஞ்சீவிலயக் கொடாமல் எந்தவிசஞ்செய்தும் நடக்காமல்போய்விட்டது இப்பவும் அர்ச்சுனன் யெழுந்திருக்காதவிதமாய் அவனுடையசிரசை நீங்கள் ஒருவருக்கும் தெரியாமல் யெடுத்துவந்து கெருடன்பாராதயிடம்பார்த்து ஒளித்துவைத்து காவலாகயிருங்கள் நான் ஆதிசேஷனுடனே கூடப்போய் பூலோகத்தில் அர்ச்சுனன்பிழைக்காதவழியாய் யென்னாலானதந்திரம் செய்குரேன்மைந்தர்களே.

பொது கவி.

மன்னனும்அமுர்தங்கொண்டு மணிநகர்வருகும்போது
பொன்னகர் அர்ச்சுன புரத்தினில்கிருஷ்ணதேவர்
மின்னிடைதேவிமார்கள் வேடிக்கையுடனேயங்கே
கன்னியர்ஆலயேத்தக் கர்த்தனும்வருகின்றாரே.

வசனம்.

ஆதிசேஷன் முதலான நாகசேனைகளுடனே பப்பரவாகனன் நாகலோகத்தைவிட்டு பூலோகத்திற்கு வரும்போது அர்ச்சுனபுரத்தில் ஸ்ரீ கிருஷ்ணதேவர் அனேகந் தேவிமாருடனே கொலுவாகவந்திர விதங்காண்க.



கிருஷ்ணமூர்த்தி கவி.

சக்கரம்சங்குமேந்தும் தயாபரர்கிருஷ்ணதேவர்
ருக்மணிசத்தியபாமா ருடனவர்கோபிகாஸ்த்திரி
பக்கத்தில்விளங்கதேவர் பாரிஜாதங்கள்தூவ
தக்கவாத்திய முழங்க சபைதனில்வருகின்றாரே.

கிருஷ்ணமூர்த்தி தரு.

அரிகிருஷ்ணதேவர்வந்தார் ஸ்ரீரிங்காரமாக ௦
அரிகிருஷ்ணதேவர் வந்தார்

அரிகிஷ்ணதேவர்வந்தார் அடியார்களைரக்ஷிக்க - சரு
அந்திரதார் நமி வந்தாழுழுங்கிட
இந்திரவர்னவர் பந்திநெரிங்கிட - அரி

கன்னியர்மங்களம்பாடவே சிலம்பதர்கள்
உன்னிதசுதரமனை போடவே
கன்னயத்துடன்வெகு கவின்சிங்காரமாக
வர்ணகலமணிகள் மார்பிற்பளபளென்ன - சரு
வச்சிரமுடியுடன் உச்சிதமாகவே
மெச்சிடும்மேனியும் பச்சையதாகவே - அரி

உத்தமர்கள் துதித்துபோற்றவே
திருவடிக்கி நித்தியமலர்கள்சாத்தவே
சத்தியபாமாருக்மணி சரசலீலைகள்பேச
நித்தியம்பிர்ம்மாச்சாரி நிமலநாரணநான - சரு
நேரூடனேபரி பூரணமாகவே
தாரணியோர்சரு ஞானதெய்வமாகவே - அரி

தஞ்சமென்றவரைக்காக்கவும் அர்ச்சுனபுரம்
பஞ்சவர்யாகம் முடிக்கவும்
மிஞ்சியரசர்களை வீரசொற்க்கத்திலேந்தி
அஞ்சிடசெய்திடும் அனந்தசெயனரான் சரு
அச்சுதனார்வெகு உச்சிதமாகவே
மெச்சிடும்ருக்மணி மைத்துனரானவர் அரி

ருக்மணி கவி

நாராயணனெங்களன்பு நாயகாருத்திரிவேளோ
பூரணமஞ்சந்தன்னில் புதுமைலீலைகளைச்செய்து
வாரணிஸ்த்தனத்தைபத்தி மருவியேயிருக்கவேணும்
ஆரணித்திரைசெய்வோம் அன்புடனெழுந்திடீரே.

வசனம்.

அகேள்கேளுமையா சுவாமி யெங்களன்புக்குகந்த பிராணநாயகா யிந்த ராத்திரிகாலத்தில் சப்பிரகூட மஞ்சத்தின்பேரில் லீலாவினோதமாய்க் கூடியணைந்து மருபடி நித்திரைசெய்வோமையா யெனது கர்த்தனே.

ருக்மணி தரு.

என்பிராணநாதா நாதா — யென்பிராணநாதா
அன்பும்ஆசையுங்கந்து — அணைந்துமுத்தந்தருவாய்
இன்பமீட்டனேலில்லை — இந்திரபோகம்பெருவாய் யெ

சின்னகொங்கைவிடிக்க — சிவந்துயிதழ்கடிக்க
என்னையணைந்துலீலை — யிசைந்துகாமந்துடிக்க யெ

எட்டுவிதபோகமும்யிஷட்டம் — மூடனேதாரும்
அஷட்டலக்ஷிமிபாகா — அனந்தசயனுவாரும் யெ

என்பிராணதேவிதேவி — யென்பிராணதேவிதேவி
உன்மீதில்மோகமாகி — உருகுதேயெனதுள்ளம்
அன்பும்ஆசையுடனே — அணைகுவோம்வாரும்மெள்ள யெ

சத்தியபாமாருக்மணி — சரசலீலைகள்செய்ய
மெத்தமஞ்சத்தின்மீதில் — உச்சிதகாரங்கள்பெய்ய யெ

ஆசையானஉங்களை — அரிகிளிமேலெயண்ணே
பாசம்வைத்திருப்போம்நாம் — பாருயெனதுகண்ணே யெ

ருக்மணி கவி.

அச்சுதமாலேயுந்தன் அன்புடனணைந்துலீலை
மெச்சிநோங்கிருபைதர்து விநோதமஞ்சத்தின்மீதில்
கச்சணிமார்நெருங்க கலந்துடன்மூவராகி
உச்சிதமாகிநித்திரை உகந்துநாம்செய்வோம்சுவாமி

வசனம்.

அகோகேளும் சுவாமி யென்பிராணநாயகா யிந்த பொர்க்கூட மஞ்சத்தில் சயனித்துக் கொள்ளுவோ ஐமயா சுவாமி.

பொது கவி.

வந்தசீதார்கிருஷ்ணதேவர் அர்ச்சுனபுரத்திலப்போ
சுந்திரதேவியோடும் தூயமஞ்சத்தின்மீதில்
விந்தையாய்நித்திரைசெய்து வீற்றுமங்கிருக்கும்போது
குந்தியான்கனவுகண்டு கூரவும்வருகின்றாளே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் ஸ்ரீ கிருஷ்ணதேவர் சத்தியபாமை ருக்மணியுடனே சப்பிரமஞ்சத்தின்பேரில் நித்திரைசெய்யும்போது

குந்திதேவியானவள் கினவுகண்டு ஸ்ரீ கிருஷ்ணதேவருடனே சொல்லவருகிரவிதங்காண்க.

குந்தியம்மன் கவி.

ஐவர்க்கும் அன்னையான அருவையாள் குந்திதேவி
மெய்மாந்துஞ்சும்போது மெவிவானகினவுகண்டு
கைமரந்தவர்கள்போலே கலங்கியேகமேடிங்கி
வையமுண்டவனேயென்று வருகுவாள்வருகுவாளே.

குந்தியம்மன் தரு.

ஐவரைப்பெத்தமாது அம்மன்குந்திதேவியும்
அச்சுதனைக்காண வந்தனளே
மெய்யாய்க்கினவுகண்டு கையுங்காலும்நடுங்கி
விசையனுக்கென்னமோவென்று வந்தனளே
பையரவனைத்துயின்ற பகவான்தன்னையேகாண
பக்ஷமுடன்பக்கம் வந்தனளே
வையமுண்டவனைக்கண்டு மனதின்கவலைசொல்ல
வருந்தியேகுந்தி யம்மன்வந்தனளே-ஐவரை

குந்தியம்மன் கவி.

அய்யனேகிருஷ்ணமூர்த்தி அடியனென்கித்திரைதன்னில்
மெய்யதுதளர்ந்துசோர விநோதமாய்க்கினவுகண்டேன்
துய்யஉனமைத்துனற்குத் துன்பங்கள்சேர்ந்ததென்று
நய்யவேசொர்ப்பனத்தின நடத்தயைநவிலுவேனே.

வசனம்.

அகோ வாருமையா கிருஷ்ணதேவரே நான் நித்திரைசெய்யும்போது அவசகுணமான சொர்ப்பனங்கண்டேன் அதை விபரமாகச் சொல்லுகுரேன் கேளுமையா கிருஷ்ணதேவரே.

குந்தியம்மன் தரு.

என்னசெய்வேன்கிருஷ்ணதேவா யென்மனம்பதருதையோ
மன்னவனுன்மைத்துனந்தான் எண்ணையிட்டுக்கொள்ளகண்டேன்
வர்ன்னமானசரீரமெல்லாம் மரையசாணம்பூசக்கண்டேன்
கன்னனேசிகப்புவஸ்த்திரம் காதலுடன்பூணக்கண்டேன்

காரணமே மோகிகப்புகெக்கம் மார்பிணிலணியக்கண்டேன்
மாரணமே மாகமுதைமேலே வாகனமாயோக்கண்டேன்
காரணனேபார்த்தீபர்க்கு ஆபஸ்த்தைகள் ஞானியேன்
ஆரணனே ஆதிமூலம் அய்யோ ஞானியிலேனே-யென்

குந்தியம்மன் கவி.

அரிகரி முகுந்தா போற்றி ஆலின்மேல் துயின்றாய் போற்றி
முராரிமாயா போற்றி முகிலைவிழிக்காய் போற்றி
மாகுவடிவேயுந்தன் மைத்துனன் பார்த்தீபர்க்கு
துறைவனுமென்னமோதான் கொடுமையயறிகிலேனே.

வசனம்.

கேளும் கிஷ்ணதேவா உன் மைத்துனராகிய அர்ச்சுன மகாராசனுக்கு யென்னமோ ஆபத்து நேரிட்டிருக்கின்றதப்பா கிருஷ்ணதேவரே.

கிருஷ்ணமூர்த்தி கவி,

அத்தையாள் குந்திதேவி அழுகிறசத்தங்கேட்டு
கர்த்தனும் ஞானதிருஷ்டி கியானத்தாலறிந்துக்கொண்டு
மைத்துனனர்ச்சுனர்க்கும் மகிமோசம் வந்ததென்று
வித்தகன் கேசவனேயேக்கும் வீமனையழைத்துவாருய்

வசனம்.

அத்தையாகிய குந்திதேவியானது அழுகுறதைப்பார்த்து ஞானதிருஷ்ட்டியினால் பார்க்கும்போது மைத்துனனான அர்ச்சுனராசனுக்கு ஆபத்து நேரிட்டிருக்கின்றபடியினால் அவ்விடம் போகவேண்டும் வீமசேனனை அழைத்துவாருங்களப்பா பணிவிடைக்காரர்களே.

வீமன் கவி.

உம்பர்கள் விளங்கிபோற்றும் உத்தமன் கிருஷ்ணமூர்த்தி
தென்புடனழைத்தாரென்ற சேதியைத்தெரிந்துக்கொண்டு
அம்புயக்கண்ணனையாளும் அர்ச்சுனபுரத்தில் தர்ம்மர்
தம்பியாம் வீமசேனன் சபைதனில் வருகின்றானே

வ-ம். அகோ தெப்படியென்றால் அர்ச்சுனபுரத்திற்கு அதிபதியாகிய தருமபுத்திறருக்கு நேரிளையோனான வீமசேனமகாராசன் சபைக்கு வருகிற விதங்காண்க.



## வீமன் தரு.

| | |
|---|---|
| விஜையனுக்குமூத்த | வீரசூரப்பிரதாபன் |
| வீமசேனனும்நானே | வெகுபுஜபலசவுரியவீமசேனனும்நானே |
| திசையெட்டும்என்பேர்சொன்னால் | சேஷன்தேவர்நடுங்க |
| திறத்தில்மிகுசுகர்த்தன்புஜபல | ஞானத்தில்வெகுபக்தன் சுரு |
| தேவானுக்கிரக | செயமதுபடைத்திடும் |
| சிந்தையிளைத்திடாமல் | சிவனருள்புரிந்தவன்-விஜ |
| உலகத்தில்கீர்த்திபெற்ற | உக்கிறவில்வித்தைகற்ற |
| உயர்ந்தாசானைக் | கெலுத்தோன் |
| உதித்தபிர்ம்மகுலத்தில் | துரோணர்ரதநிரத்தைவாரி |
| உயரயெரிந்து | கெலித்தோன்-சுரு |
| பலகலைகள்தெரிந்து | அஸ்பத்தாமன்சகுனி |
| படைகளெல்லாங்கெலித்தேன் | அதிகவீரப்பலம்படைத்தோன் |
| பதினெட்டுநாளுயித்தியம் | துரியோதினனாருபேர் |
| படையும்மடித்துப் | பரித்தேன் |
| பெலமுள்ளராக்கன்பக்கா | சூரன்தன்னையெனும் |
| பெரட்டிக்கிழித்து | அடித்தேன்--சுரு |

பேர்பெற்றகீசகன் மாளஉயிர்மடித்தேன்
நலமுள்ளதெண்டிஞல் யிடும்பனையுமடித்தேன்
ராசர்குல மழித்தேன்-விஜ
துலைதூரம்பாதாளம் யேகிவிஷங்குடித்தேன்
தேர்ரூதவாய்வுமைந்தன் யென்றுறன்பேரும்பெற்றேன்
கொண்டனும்கானேகிருஷ்ணதேவர் கொண்டல்வண்ணனும்முனே
தோருதக்கீர்த்திபெலத்தை காடேன்
பாருமல்மன்னரென்னைத் தேடேன்
சீருமல்யெதிரியைக்கண்டா லோடேன்
காருனவண்ணனரிகில் கூடேன்-சரு
துஷ்ட்டரைவதைசெய்யும் கெட்டிதெண்டுடன்
அஷ்ட்டகாசம்செய்து முட்ட ஆரப்பரித்து-விஜ

-வீமன் கவி.

திருவளர்மார்பாபோற்றி தேவகிந்தாய்போற்றி
அருமையாய்ஐவர்தன்னை ஆண்டிடுமரசேபோற்றி
இருளினில்யென்னைனுடி யிக்ஷ்கெஷண மழைந்தசேதி
ஒருமையாயெந்தனுக்கு உண்மாய்யருள்செய்வீரே.

வசனம்.

எங்களைக்துயேரையும் ஊர்த்துாக்ஷிக்காநின்ற ஸ்ரீ கிருஷ்ணநாருயண சுவாமியே சஞணம் சருணம் அர்த்தருத்திரிவேளையில் யென்னை அழைபபித்த க ரணம் யின்னவிதமென்று திருவுளம் பத்தவேண்டுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

நல்லதுவீமசேனு நம்மிடவிசையனுக்கு
பொல்லாங்குவந்ததாக யென்புத்தியில்தோனுதிப்போ
சொல்லியேமணிநர்க்கு துரிதமாய்ப்போகவேண்டும்
வல்லமைக்கெருடன்தன்னை வாவென்றுநினைத்திட்டாரே.

வசனம்.

அஹோவாரும் வீமசேனு யென்மைத்துனனுகிய அர்ச்சுனனுக்குயேதோ பொல்லாத காலத்திலுல் பொல்லாங்கு நேர்ந்திருக்கின்றது ஆகையால் நாமெல்லோரும் பாண்டியனுடாகிய மணிபுரத்துக்குப்போகவேண்டும் பிள்ளாய் வீமசேனு.

வீமன் வசனம்.

ஆனால் அப்படியே தங்கள் மனதின்படிபோய்வருவோமையா சுவாமி.

பொது வசனம்.

இவ்விதமாக பகவானனவர் மணிபுரம் போகவேண்டியதற்காக கெருடதேவனைநினைக்க அப்போது கெருடன் வருகிறவிதங்காண்க

கெருடன் கவி.

கேவலமாகிமுன்னாள் கஜேந்திரன்வருந்தும்போது
பாவம்விட்டகன்றுபோக பாவித்தமூலமான
தேவனுநினைந்தபோது திடுக்கிட்டெழுந்திருந்து
ஆவலாய்க்கெருடன்தானும் அன்புடன்வருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் கிருஷ்ணதேவர் பாண்டியதேசத்திற்குபோகும்படியாய் கெருடனை நினைத்தமாத்திரத்தில் கெருடன் பகவான் வருகிற விதங்காண்க.

கெருடன் தரு

கெருடபகவான்வந்தானே அதிவேகமதாக
கெருடபகவான்வந்தானே
கெருடபகவான்வந்தான் கிருஷ்ணதேவரைக்கண்டு
திருவடிதொழுதுமே தேவாதிதேவாவென்று-கெரு

அஷ்டநாகங்கள்போற்றவும் வானவர்கள்
யிஷ்டமுடனேவாழ்த்தவும்
விட்டசிறகினாலே தட்டிதட்டிக்கொள்ள
வெட்டியெறிந்தாற்போலே முட்டமரங்கள்சாய-கெரு

மலைகள்குன்றுகளதிர வரும்விசையில்
கலைமான்பக்ஷிகள்சிதற
தலைதூரமெங்கும்போய் க்ஷணத்தில்வருபவன்
தலைவனும்பட்சிகட்கு சமர்த்தனானவீரன்-கெரு

ஆரணகாரணனை வைகுந்த
பூரணமானவனை

சாரணமாகக்கிருஷ்ண தேவன்தேவனுகவந்த
வாரணீமாதுவளர் காரணமென்னவென்று-கெரு

கெருடன் கவி.

தேவனேகிருஷ்ணமூர்த்தி திருவடிசருணமையா
ஆவலாய்நினைத்தசேதி அருளுவீரென்றுமேகழ்க்க.

கிருஷ்ணமூர்த்தி கவி.

தாவியேபாண்டியதேசம் சடுதியில்ப்போகவேண்டும்
தீவரமாகனுமும் க்ஷணத்தினில்நடப்போம்வாருய்

வசனம்.

அகோகேளும் கருடபகவானே அதிவசீக்கிரமாக நாமும் வீம சேனனும் குந்தியம்மனும் நம்மிடதேவிமார்களும் தேவகிமுதலான வர்களையும் யெடுத்துக்கொண்டு பாண்டியதேசத்திற்கு அதிகசீக்கிர மாகநடவும் கருடபகவானே.

கிருஷ்ணமூர்த்தி தரு,

கெருடன்மீதினிலேறியே பாண்டியதேசம்
கிருஷ்ணதேவரும் நடந்தார்-கெரு

திருவிளங்கியமார்பன் தேவகியசோதைகூட
குருகுலவீமசேனன் குந்தியம்மனுங்கூட-கெரு

ருக்மணிசத்தியபாமாவுடன் இருவருமாக
மிக்கவேயிருளிறல் வேகமதிவேகமாய்-கெரு

குன்றுங்குகைகளெல்லாம் கொடியவேகத்திலோட
சண்டப்பரசண்டமாக சடுதியிலேறுட-கெரு

பாண்டியதேசமிது பரியைப்பிடித்து
காண்டீபன்சேனையுடன் களத்தில்மடிந்தனு-கெரு

கிருஷ்ணமூர்த்தி விருத்தம்.

நினைத்திடவேகெருடனவன்வந்திப்போது
நீங்காமல்தேவகியும்யசோதைகூட
மனத்துடனேகுந்தியம்மன்வீமசேனன்
வாகனத்திலேறிஒருநொடியிர்க்கென்று

கனத்தமணிபுரத்தாணகளத்தைநாடி
    கெருடனைவிட்டிழிந்துமவர்முழுதும்பார்க்க
சினத்துடனேமதிமயங்கிவீமசேனன்
    தேவனேயெனக்கொன்றுந்தெரிகிலேனே.

வசனம்.

கிருஷ்ணதேவர் முதலானபேரும் கெருடனைவிட்டிழிந்து ரணகளத்தைமுழுதும் சுத்திப்பார்க்கையில் வீமசேனனுக்கு ஒன்றுந்தோணாமலிருக்க மறுபடியும் கிருஷ்ணசுவாமி சொல்லுகிறவிதங் காண்க.

கிருஷ்ணமூர்த்தி விருத்தம்.

மயங்கிநின்றவிபலமுள்ளவீமசேனா
    மணிபுரத்தையரசாளும்பப்பறவாகன்
செயங்கொண்டகுதிரைதன்னைப்பிடித்துக்கட்டி
    திரமுடனேரணகளத்திலவிசையன்தன்னை
பயமில்லாவிஸ்வகேதுமிருவர்கூட
    படைகளெல்லாம்மடித்துவிட்டுபிரத்திமன்னன்
தியங்கியனுசாளுவனுமூர்ச்சையானான்
    சேதிபிதாஅர்ச்சுனனைப்பார்த்திடாயே.

வசனம்.

கேளும் வீமசேனா இந்தலோவந்து மணிபுரம் இதில் அரசுசெய்யப்பட்ட பப்பிரவாகனன் அர்ச்சுனன்விடுத்துவந்த குதிரையைப்பிடித்துக்கொண்டு அர்ச்சுனன் விஸ்வகேது இவர்கள் தலையையறுத்து வந்தசேனைகளையுங் கொன்றுப்போட்டான் யிதோ மடிந்துகிடக்கும் அர்ச்சுனனைப்பார்த்தியோவீமசேனா

வீமன்-கவி.

மடிந்தஅர்ச்சுனனைக்கண்டு மண்மீதில்விழுந்துவீமன்
அடிஅடித்தவரியேங்கி சோகமுமூர்ச்சையாகி
வடிவதூகலங்கிவாடி மாயவன்குந்திதேவி
இடியிடித்ததுபோல்வீழ்ந்த யேங்கியேபுலம்பினாரே.

வீமன் தரு.

பெத்தமாதாவும் அழ    யென்சித்தங்கலங்குதடா-தம்பி அடா தம்பி
மதிக்காமதுனைக்கொன்ற    மாறுட்டமரிகிலேன்-தம்பி அடா தம்பி

காண்டீபவிசையனே களத்தினில்மடிந்தாயோ-தம்பி அடா தம்பி
பாண்டவரிரணபதும் பாழாகப்போச்சுதே-தம்பி அடா தம்பி
உன்னுடன்கூடநான் உயிரைவிடுவேனடா-தம்பி அடா தம்பி
தன்னுடன்கூடத்தம்பி தமையன்மடிவாரோ-தம்பி அடா தம்பி

குந்தியம்மன் கவி.

மாயவன்வீமசேனன் வாடியேபுலம்பும்போது
தாயவள்குந்திதேவி தரைதனில்விழுந்தமோதி
வாயைவிட்டலரிக்கையால் வயித்தினிலலரந்துக்கொண்டு
தூயவென்மகனேயென்றுசேர்ந்துடன்மூர்ச்சையானள்.

வசனம்.

குந்தியம்மனவள் மகன்மேலவிழுந்து புரண்டு வயித்திலடை ந்துக்கொண்டு மூர்ச்சையாக விழுந்துபுலம்புகிற விதங்காண்க

குந்தியம்மன் தரு.

அப்பாமகனேவிதியோ வுனைப்பிரிய
யிப்படியானசதியோ
இப்பரியுடன்வர தேசமெல்லாஞ்சென்று
செப்பியஅரசரை வென்றுசெயங்கொண்ட- அப்பா

மைந்தாபுலம்புரண்டா தனஞ்செயனே
சிந்தைகலங்குரண்டா
சுந்திரனேவயிர் யெரியுதேயென்மனம்
வெந்துநீராகியே மெசியுதுஉன்செனம்-அப்பா

பிள்ளைஉந்தனைக்கொல்லவோ பிர்ம்மன்செயல்
கள்ளமெப்படிசெல்லவோ
கொள்ளைக்கொடுத்துவிட கொதிக்குதென்திரேகமும்
துள்ளித்துடிதுடிக்க துரைராஜசிங்கமே-அப்பா

வளர்த்த அரிமையென்னமோ ஐயோமகனே
களத்தில்மடியாமுன்னமே
அடுத்துஒருவர்களும் சொல்லாமல்போச்சுதே
யிளைத்துப்பூமியில்விழ யிந்தவிதியாச்சுதே- அப்பா

## கிருஷ்ணமூர்த்தி கவி.

மைத்துனுவிசையாவென்று மாயவன் துடிதுடித்து
குத்தமாரணகளத்தில் கொடுமையாய்மடிந்தாயிப்போ
சித்தமுங்கலங்கிவாடி திகைக்குரேன்ஒருவனுக
கர்த்தனே அய்யோவென்று கலங்கினாபுலம்பினுரே.

## கிருஷ்ணமூர்த்தி தரு.

நாரணனே — சமதுப்பிரதாமும்
போச்சே — விதியாச்சே
இந்தநாற்றிசைதன்னிலே — கீர்த்தியழிந்திடவும்
போச்சே — வசையாச்சே
ஆனவானவர்களும் — மெச்சிடஜெயங்கொண்ட
மகனு — விதியின்ளுள்
யெங்களாச்சுனனேயிந்த — சமர்த்தினிலேமுன்னுள்
அனேவரை — ராஜர்தலேவரை
அமர்ருக்காகவே — அரக்கர்குலமழித்தாய்
அன்னுள் — யிதுமுன்னுள்
யித்தஅமர்க்களம்தன்னிலே — சுவர்க்கம்போகவேயெண்ணி
பாஷமோ — யீசன்தோஷமோ
விமலன்வேடனாக — சண்டைசெய்தவரை
வென்ருய் — அவரைகொன்ருய்
வீரசூரனுன — தமையன்கர்ண்ணனையும்
வென்ருய் — முதன்மையாகநின்ருய்
மைத்துனனேயுந்தன் — கற்றவித்தைகள்
யெங்கே — அதுயெங்கே
மங்கைசுவாலாதேவி — கெங்கைசாபத்தாலே
மாண்டாய் — சுதனால்மாண்டாய்
நான்சித்தம்கலங்கியே — திகைத்துமேவாடவும்
ஆச்சே — வகையாச்சே
தேவிமார்களெல்லாம் — சிந்தைக்கலங்கிடவும்
செய்தானே — மைந்தன்செய்தானே-நாரு

---

பொது வசனம்.

அகோ இதெப்படியென்றால் கிருஷ்ணதேவர் புலம்புகிறபோது சித்திராங்கதைவந்து சுவாமியினுடைய பாதத்தில்விழுந்து பிரலாபிக்கிறவிதம்காண்க.

சித்திராங்கதை கவி

கிருஷ்ணனார்புலம்பும்போது கிளிமொழிசித்திராங்கதையுமாது
இஷ்டமாயூர்வசியாள்கூட இருவருமடியில்வீழ்ந்து
கஷ்டமாய்ப்போனோமுங்கள் நானுமுகுந்தாமாயா
துஷ்டபிள்ளையினால்வந்ததோஷத்தையென்னசொல்வேன்.

வசனம்.

அகோசேருநம் அண்ணாவே துஷ்டபிள்ளையினால்புருஷனைப்பலிகொடுத்து விட்டோம் இந்தவிதிக்கி நாங்கள் என்னசெய்வோம் அண்ணாவே.

சித்திராங்கதை தரு.

மாதவகிருஷ்ணதேவா யென்னுசெய்வேன் - சுரு
பணம்புரிந்தவர் துணையிழந்திட
கணையால்மாண்டவர் பிணமதாகவும்
ஐயோவயிர்பத்தியே யெரியுதே - என் - சுரு
ஆசைக்கணவனும் யோசஞ்செய்திட
பூசைசெய்திப்போ மோசமாச்சுதே
புருஷனில்லாத பாவியிருந்தென்ன - சுரு
புத்திரன்லேயே மித்திரபேதகம்
கர்த்தனுஞ்செய்த மெத்தபேதகம்
விஜையனைக்கண்ணில் யெப்போதுன்காணுவேன் - சுரு
வீரருனை மாரனென்வர
வாராழிதனில் தேடிப்பார்க்கவும்
அத்தைமாமியேயென் சித்தங்கலங்குதே - சுரு
அலைதுரும்புபோல் நிலையிலாமலே
கலையிழந்தமான் இலையதாகவும்
கதுணையென்முத்தாரே யென்னுசெய்வேன் - சுரு
வரிந்திக்கணவனை யிருந்துதேடவும்
பரந்திகோமிழை யலைந்துபோனதும்

துரோபதைமானங் காத்திட்டமாயனே! – சரு

துய்யனே அரி அய்யனே ஸ்ரீ
மெய்யனே ஆழிகையனே

கோவிந்தா அரி கோபாலனந்தனா – சரு

கொடியபாதகி அடிமையாகவும்
கொடியினில்யிப்போ உடனேகாக்கவும் – கோ

சித்திராங்கதை கவி.

பார்த்திபன்தேவிசித்திராங் கதையுமூர்வசியும்வந்து
கூத்தனைப்போலேபப்பிர வாகனன்பிதாவைக்கொன்றான்
மாத்தவுமுன்னுரைகும் மாயவாகிருஷ்ணதேவா
காத்திடும்ஆதிமூலம் கடவுளேயென்செய்வோமே.

வசனம்.

அகோகேளும் யெங்கள் அண்ணாவே பிதா பாவியாகிய பப்பிரவாகன் காலனைப்போலே பிதாவைக் கொன்றுப்போட்டான் யெவ்விதமாகிலும் யெங்களைக் காப்பாத்தி ரக்ஷிக்கவேண்டுமையா சுவாமிபகவானே.

கிருஷ்ணமூர்த்தி கவி.

என்செய்வோமென்றீரம்மா யெந்தனாலாவதேது
கர்ம்மபோகெங்கைசாபம் காரணம்முடிந்துதிப்போ
மன்மதன்தனையெரித்த மகாதேவர்செயலோபார்த்தன்
துன்மையாய்மடிந்தானென்று துயரமுமாகினாரே.

வசனம்.

கேளுங்களம்மா யெனது தங்கைமார்களே பாவியான கெங்கா தேவிசாபம் நேரிட்டது சிவன்செயல் அப்படியாச்சுது யென்றால் ஆவதேது நான்யென்னசெய்வேனம்மா தங்கைமார்களே.

வீமன் கவி.

வள்ளலேஉலகனைத்தும் அளந்துநெற்பத்தில்வைத்து
யெள்ளினில்யெண்ணைபோலே யெங்கிலும்நிறைந்தசோதி
கள்ளமாங்கெங்கைசாபம் காணவுமுடிந்தவாரும்
விள்ளவேயெந்தனுக்கு விபரமாய்ச்சொல்லுவீரே

வசனம்.

இக்கபூலோகத்தில் யெண்பத்துனான்கு சீவராசிகளையும் படைத்து உம்முடையகெற்பத்திலவைத்து யெள்ளுக்குள் யெண்ணையைப்போலே யெங்கும் நிறைந்துரக்ஷிக்கா நின்ற ஆதிமூலக்கடவுளே எனது தம்பியாகிய அர்ச்சுனனுக்கு கெங்கையினுடையசாபம் என்ன காரணத்தினால் வந்துநேரிட்டது அதையெனக்கு விபரமாகத்தெரியச்சொல்லவேண்டுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி அகவல்.

மைத்துனவீமா அர்ச்சுனன்தனக்கு
உத்தமிகெங்கை யுரைத்ததோர்சாபம்
துலக்கமாய்ச்சொல்வேன் கலக்கமில்லாமல்
கலக்கமில்லாமல் கனமுள்ளகிருஷ்ணன்
பதிநகர்தன்னைப் பரிபாலனஞ்செய்யும்
அதிபதியாகிய அரசனாரென்றால்
நீலத்துவசனும் யெனுமொருஅரசன்
பாலனும்பிரவீரனுமிருக்க
பட்டணந்தன்னிலே பார்த்திபனஸ்வம்
திட்டமாய்ச்சொல்ல சேதியைத்தெரிந்து
பிரவீரன்குதிரையைப் பிடித்துமேகட்ட.
கறமுடன்விசையன் கடுஞ்சினமாகி
பாணசரங்களால் பலமுடன்சேனையை
அனுஅமர்தன்னைப் புடைக்கினப்போது
சேர்ந்துமேநீலத் துவசனும்வெகுண்டு
நேர்ந்துமேசண்டை நிகழ்த்திடவிசையன்
காண்டீபந்தன்னால் களைத்திடச்செய்து
தாண்டியேமருமகன் துடுக்குள்ளவீரன்
அக்கினிதேவனும் அதேசண்டைகளாய்
திக்கெனயெரிந்து செயிக்காமலோடி
குதிரையுங்கைபாணம் கொண்டுமேவிடுக்க
யெதிர்க்காமலிருவரும் யிஷ்டமதாகி
வருகுறேமென்று மனுநீலத்துவசன்
பரிவுடன்நடக்கப் பயணமதாக
சொல்லவேநாயகி சுவாலாதேவியும்

அல்லலாய்க்குருக்கிட அவரையுந்தடுத்து
சரியொத்தராசன்மேல் சண்டைசெய்யாமல்
ஒருமிக்கக்கூடுமோ உலகமும்பழிக்க
என்றுமேயுரைக்க யேகியேமறுபடி
சண்டைகள்செய்து சகலரும்மடிய
ராசனும்தனித்து நம்மிடதேவியால்
நாசமாய்ப்போனது ஞாயமோவென்று
தேவியாள்தன்னைத் தெருவிலேதள்ளி
போவதுமெங்கையோ போவென்றுரைக்க
தைத்திடுங்காசியில் தாய்வீடுசேர்ந்து
கொழுந்தைதன்தமையன் கோவென்றுகூறி
பகையாளியான பார்த்தனும்யேகி
வகையுடனெதுத்து மாளவேசெய்து
வருகுவாயென்று மங்கையர்க்கூறி
சரியாவராவிடில் சாவென்றுரைக்க
உலுகராசன் யோசனைச்செய்து
நல்வழியில்லா நம்மிடதங்கையும்
புருஷனுக்குரைத்துபுத்திரவேரும்
வெரியதுபிடித்து வெகுமானியென்று
இவ்வார்த்தைக்கேட்டால் யெல்லோரும்மாண்டு
அல்லோரும்போலே ஆகுமென்றெண்ணி
புரந்தவிடமும் புழுவாகத்தோன்றி
துடர்ந்ததுதனிவழி துலக்கிடேவந்தால்
இங்கேயிருக்கவும யிசையாதென்றுறைற்றது
எங்கையாகிலும் யேகுவோமென்று
சங்கையில்லாமற் தமையனும்சொல்ல
மங்கையாள்கவலையாய் அவளுமேயோடி
கெங்கையின்ஓரமாய்க் கடினமாய்நடக்க
சங்கரன்சடையில் தாவியேகிற்க
அலைவந்தொதிங்கி அவள்காலைத்தீண்ட
துலையாதபாவி தீண்டவும்தகுமோ
இப்பாபம்தீர யெழுந்திடும்போவேன்
அப்படியுரைக்க அந்ததோர்கெங்கையும்
யேதிருலெங்ஙனை யிகழ்ந்திடும்வார்த்தையை

பேதையைக்கெழ்க்கப் பெண்ணுருவாகி-
முன்னாகவந்து மொழியுமென்றுரைக்க
உன்னுடன்மைந்தனும் உத்தமனான
பிலமுள்ளவீஷ்மரை பெருகளந்தன்னிலே
கலமுள்ளசிகிண்டியும் நர்ச்சமர்செய்து
கொன்றுவிட்டீரென்று சூரியேவிசையன்
வென்றிடச்செய்வித்து மிருக்கயுயித்தியம்
பார்த்திருக்கவும் விதியோ உனக்குனின்
பாவியாள்சொல்ல மெய்யென்றுகெங்கை
அல்லலாய்விசையனை ஆறுமாதத்தில்
பிள்ளையின்கையினால் பெருகளந்தன்னிலே
கொள்ளையாய்மடியக் கொடுத்தனள்சாபம்
அந்தநேர்சேதி அரிந்தனள்சுவாலா
சிந்தையில்பகையைத் தீர்க்கமாய்முடிக்க
அக்கினிவளர்த்தி அதிலேவிழுந்து
மிக்கதோர்அஸ்திரம் உருவதுவாகி
பாண்டியதேசமாளு பப்பரவாகனனிடம்
தூண்டியேஅம்புராத் தூணியில்புகுந்து
தனஞ்சயன்வந்திடா சாபமும்நேர்ந்து
மனதுடன்விசையன் மகனைதூஷணிக்க
சண்டைகளாகி சகலரும்மடிந்தார்
அண்டரும்நடுக்க அர்ச்சுனன்சிரசை
கண்டித்துவிட்டான் கர்த்தனார்செயலோ
துண்டனால்வந்த தோஷமேவீமா
சுருக்கமாய்ச்சொன்னேன் சொக்கனாருளால்
உருகுதென்னெஞ்சம் உத்தமன்மீதில்
இணைபிரியாமல் யிருந்தயெங்களுக்கு
துணையிழந்தேனேயோ துடிக்குதேசிவனே.

கிருஷ்ணமூர்த்தி வசனம்.

அகோகேளும் வீமசேனா யிவ்விதமாக கங்கையினுடைய சாபம் வந்து நேரிட்டு யிருக்க நானென்ன செய்வே னப்பா வீமசேனா.

கிருஷ்ணமூர்த்தி கொச்சகம்.

அருணனில்லாப்பகல்போலும் அரசனில்லாநகர்போலும்
கருணைமதியில்லாக் காரிருள்தாமரைப்போலும்

வதனமதிபோலிருக்க வாழ்திசையும்பாழடைந்து
தருணமிங்கேமைத்துனரே தயங்கிமனம்வாடீரோ.

வசனம்.

ஆ! ஆ!! கேளும் மைத்துனா சூரியனில்லாத பகலைப்போலும் சந்திரனில்லாத ராத்திரியைப்போலும் அரசனில்லாத பட்டணம்போலவும் தாமரையில்லாத தடாகம் போலவும் பாழடைந்திருக்குதே நீ வீரலக்ஷமியுடனே யோசித்துக் கொண்டிருக்குராயோ யென்னுடன் யெழுந்து பேசக்கூடாதோ மைத்துனா.

கிருஷ்ணமூர்த்தி கொச்சகம்.

அன்னையரும்தேவியரும் அரிவையர்த்தான்புலம்ப
என்னவென்றுநீயெழுந்து யென்னுடன்பேசாயோ
உன்னைவிட்டொனிருக்க ஒலகமதுதான்பழிக்கும்
மன்னவனே அர்ச்சுனனே மைத்துனனேநான்வருவேன்.

வசனம்,

ஆ! ஆ!! மைத்துனா உன்தாயாரும் தேவிமாரும் உன்னைக் காணாமல் யென்னேரமும் துதிக்கின்றார்களே யெழுந்திருந்து அவர்களுடைய துக்கத்தை நிவர்த்தி செய்யக்கூடாதோ உன்னைவிட்டுநான் யிருந்தால் ஒலகம்பழிக்காதோ நானும் உன்கூடவருகுரேன் மைத்துனா.

வீமன் கவி.

வெண்ணையைத்திருடுங்கிருஷ்ணா வெகுஜெனம்பார்த்திருக்க
கண்ணணேவிடுவதேது கபடநாடகனேயிப்போ
யென்னமாவிசையன்தன்னை யெழுப்பவும்வேணுமானால்
ஆரணமேலவிசையாவென்று அழைத்திட்டால்வருகுவானே.

வசனம்

அஹோ வாருமையா கபடநாடக சூஸ்த்திரா அவதாரியே ஆயர்பாடியில் வெண்ணை திருடி உண்ணும் திருட்டு கிருஷ்ணா நீர் கண்ணில் சலம் விடுகுறதைப் பார்த்தால யெனக்கு ஆச்சரியமாக யிருக்கின்றது அர்ச்சுனன் பிழைக்க வேண்டுமென்று யெண்ணமிருக்குமானால் அர்ச்சுனா வென்று ஒருதரம் அழைப்பீரானால் நித்திரை செய்தவன் போலே யெழுந்து வரமாட்டானா சுவாமி பகவானே.

### வீமன் கவி.

பிழைத்திடவேணு மானால் பிடித்ததுமுடிக்கலாகும்
யெரர்த்தயென்தம்பிதன்னை யெழுப்பவும்மில்லையோதான்
அழைத்திடும்மதி மைதன்னை யாவராலரியப்போமோ
திழைத்தபூர்ணளபமார்பா சுவாமிகாணரியப்போமோ

வசனம்.

அர்ச்சுனன் பிழைக்கவேண்டுமானால் நீர் பிடித்தகாரியம் முடி யாமல் போகுமா யல்லதரும்பாகவும் தரும்புமல்லயாகவும் செய்விக்க உம்மாலாகும் முன்னே சாந்திப னென்னும் ஒரு பிராமணப் பிள்ளை யை யெழுப்பிக் கொடுத்த வுமக்குயிது ஒரு பெரிதா உம்முடையம கிமை தேவர்கள் யாவற்றாளும் அரியக்கூடாதென்றும் தெரிந்திருக் க யென்றால் அரியக்கூடுமோ சுவாமிபகவானே.

### வீமன் விருத்தம.

ஆதியாதிமூலமென்றும் ஓடிவந்தீர்
கர்த்தனேகேசவனே கரியமாலே
சரியானமுறாரிவைகுந்தனதா
சச்சுதாநந்த பரவாசுதேவா
அரியாதான் அடிபணிந்தேன் அபயமென்றேன்
ஆனந்தக்கடல்வாழ்வே அண்ணலானே
பிரிவாகஅண்டபிண்ட மனைத்துமுண்ட
விமலனேவிசையனைநீர் யெழுப்பிடீரே.

வசனம்.

முன்காலத்தில் திருக்கூட பர்வதசார்பில் கசேந்திரனுடைய கா லைமுதலையானது பிடித்துக்கொண்டு ஆயிரம் வருஷம் போராடிதனை க்கு நிருவாகிக்கமுடியாமல் கசேந்திரன் ஆதிமூலமே யென்றமுறை யிட்டமாத்திரத்தில் நீர் ஓடிவந்து ஆனையை ரக்ஷிக்கவில்லயோ அண்டபிண்ட சருசரங்கள் அனைத்தையும் கெற்பத்தில்வைத்து ரக்ஷி க்கப்பட்டகர்த்தனே கேசவா வைகுந்தவாசா முராரிமுகுந்தா அச்சு தாநந்தா ஒன்றுந்தெரியாத நான் உம்முடைய திருவடிக்கபயமெ ன்றேன் அர்ச்சுனனை யெழுப்பித்தாருமையா சுவாமி பகவானே.

கிருஷ்ணமூர்த்தி கவி.

சொந்தமைத்துனனேவீமா சொற்படிவிசையன்தன்னை
பந்தமாயெழுப்பச்சொன்னாப் பரமனார்செயலினாலே
இந்திரன்சுதனும்மாண்டால் பெந்தனுலாவதென்ன
நிந்தனையெந்தன்மீதில் நேரிடச்சொல்லலாமே.

வசனம்

வாருமப்பா வீமசேனா சிவன்செயலினாலே அர்ச்சுனன்மடிந்து போயிருக்க யென்னாலாகவேண்டியதென்ன யிருக்கின்றது யென் பேரில் நிந்தனைசொல்ல வேண்டாமென்றுசொல்லி புன்சிரிப்பாக அப்படியே ஆகட்டுமென்றுசொல்ல அந்தச்சமையத்தில் அர்ச்சுனன் சிரசைக்காணாமல் திருடிக்கொண்டு போகும்படி துற்புத்திதுற்பால னைவன் வருகிற விதங்காண்க.

துர்ப்புத்தி தரு.

துர்ப்புத்தி துர்ப்பாலர்தாங்களே பாதாளலோக
துர்ப்புத்திதுர்ப்பாலர்தாங்களே
சொற்படிநடக்கிடா தூர்ச்சனர்தங்களையிப்போ
கைப்பிடியாகப்பிடித்து காலனுக்கிரைசேர்ப்போம்- துர்ப்

யெண்ணும்பொருளைநாடியே தருமஞ்செய்யாமல்
மண்ணில்புதைத்துவாடியே
உண்ணாதபடுபாவி உதவாதென்னவே
விண்ணுலகந்தாவி விஷத்தால்மடிக்கும்பாவி- துர்ப்

அர்ச்சுனன்சிரசைத்தேடியே யெடுத்துக்கொண்டு
அப்புறம்காட்டாமலோடியே
சொற்படிநடந்துக்கொண்டு தூரதேசத்தைக்கண்டு
கைப்பிடியுடனேவிண்டு கெருடன்வராமல்தொண்டு- துர்ப்

ரணகளந்தன்னிலே யொருவர்காணமல்
கணப்பொழுதிலேயிருவர்
வணக்கத்துடநடந்து வாருதியேழைக்கடந்து
யிணக்கமாகத்துடர்ந்து யெல்லோர்க்கும்காணமல்வந்து- துர்ப்

பொது விருத்தம்.

திருதராட்டிரனவனும்சொற்படிக்கி
துற்புத்திதுற்பாலனுலகில்வந்து

மரைவாகவிசையநிட சிரசெடுத்து
  வாருதியேழ்தன்னையுமேதாண்டியப்பால்
பிரியமாய்க்காளமுனியிட ஆசிர்மம்
  பிரகவனும்ஒளித்துவைத்துயிருக்கும்போது
பிரபலமாய்சேனையுடன்பப்பிரவாகன்
  புறப்பட்டுமணிபுரத்தைவருகின்றானே.

வசனம்.

நாகமந்திரியாகிய திருதருட்டிரன் சொற்படிக்கி துற்புத்திநற் பாலகன் பூலோகம்வந்து ஒருவருக்குக்தெரியாமல் அர்ச்சுனனுடைய சிரசையெடுத்துக் கொண்டுபோய் சூத்தசமுத்திரத்தையுந் தாண்டி காளமாமுனியினிட ஆசிர்மத்தில்வைத்து காவலாக யிருக்கும் போது பாதாளலோகம்விட்டு பப்பிரவாகன் ஆதிசேஷனுடனே வருகிற விதங்காண்க.

பப்பரவாகன் கவி.

காரிருள் யிருளும்வேளை கடினமாய்க்கிழக்குதிக்கில்
சூரியனுதையமாக சுகன்பப்பரவாகன்சேஷன்
காரியமாகச்சேனைக் கலந்துடன்சின்னமூத
பேரிகைமுழங்கராஜன் புரப்பட்டுவருகின்றானே.

வசனம்.

இரணகளத்தில் யிப்படியிருக்கும்போது சூரியபகவான்கிழக்கு திசையில் உதையமானார் அப்போது பாதாள லோகம் போன பப்பரவாகன ராஜனும் ஆதிசேஷன் முதலான நாகசேனைகளுடனே வருகிர விதங்காண்க.

பப்பரவாகனன் தரு.

வாறான்வாறான்பப்பரவாகன் — வாறான்வாறான்
நேராய்ப்பாதாளம்சென்று — தோறாசேஷனைக்கண்டு
கூறால்மனதுவிண்டு — போறாடிசெயங்கொண்டு — வா
பேரிகைமேளம்யிடிபோலோசைகள் — தாரையெக்காளம்
சாரியாகமன்னன் — வாறவேடிக்கையென்ன
சூரியசவுரியம் — நேராய்க்கொடியன்முன்னே — வா
மிருகசஞ்சீவிரத்தினம — மணியமூர்தம்வருகுதே
மேகாதிருள்பெத்து — கிரிவதுதனைப்பத்தி
மருமலர்முடிசுத்தி — அரன்பப்பாதாசன்வெத்தி — வா

ஆதிசேஷனுங்கூடபிர்ம்ம வேதமோதினும்
நீதியாகப்பேச மாதருகில்வாசா
கோதிலாதவர்நேச மாதுஉமையாள்வாச வா

பப்பரவாகன் கவி.

தேவியேகிருஷ்ணதேவர் விமலனுங்குந்திபாதம்
தாவியேபப்பரவாகன் சாஷ்டாங்கதெண்டஞ்செய்து
பாவிநான்வந்தேன்வந்தேன் பலர்கள்தூஷணித்ததுரோகி
கோவிந்தாசக்கரத்தால் கொல்லுவீர்யென்னைத்தானே.

வசனம்.

ஸ்ரீ கிருஷ்ணநாராயணா கோவிந்தா உமது திருவடிக்கி அடியேன் சருணம் சருணம் யிந்தப் பாவியான பிதுர்த்துரோகி உம்பிடசக்கிறத்திநால் யென்னுடைய சிரசைக்கண்டியுமையா சுவாமி.

பப்பரவாகன் தரு.

ஆதிநாராயணாகோவிந்தம் அரி அச்சுதானந்தனேகோவிந்தம்
பாதிமதியணிந்தசோதிப்பிரகாசனே வேதமுடியில்நின்ற ஆதிமூலமே

பெத்ததகப்பன்தன்னை அத்துவிழக்கொய்துபாவி
புத்தியில்லாமுடனாக மெத்தப்பயித்தியங்கொண்டேன் ஆ

சக்கரத்தியினால்யென்னை மிக்கஒருநொடிக்குள்
அக்கிஷமாய்சிரசை தக்கவேயறுக்கவேணும் ஆ

கோறநரசிங்கமாகி வீரன்யெரண்ணியனை
சூரனைப்பிளந்துறத்தம் மாரவேகுடித்தவனே ஆ

பூதலம்ஓரடிக்காக காதகமாநீயளந்து
சூதனாலேமாபலியை வாதையாய்சிரசில்வைத்தாய் ஆ

சீதையைச்சிறையில்வைத்த பாதகராவணன்தலை
மேதினியில்உருளவே நீதியாய்வதைத்தவன் ஆ

கரியாதிமூலமென்று துரிதமாகஓடிவந்து
முரியமுதலைதன்னை செரியாய்சக்கரத்தால்கொய்த ஆ

இன்னஞ்சத்துருக்களை முன்னமேவதைத்துவிட்டீர்
சின்னவன்ஒருபொருளாய் உன்னிடசக்கரங்கொய்ய ஆ

பப்பரவாகன் சொச்சகம்.

சருணமூர்த்தன் தாளிணைக்கு சன்னதிக்குமுன்னேவந்தேன்
மரணஞ்செய்யசக்கரத்தை வறவிடுப்பாய்க்கேசவனே
தருணமிதுகோவிந்தனே தற்பரனேகற்பகமே
கருணைசெய்வாய்மாதவனே கண்ணனரிஅச்சுதனே.

வசனம்.

உம்முடைய சன்னதிக்குமுன்னே பாவியாகிய துரோகியானவ ன்வந்து நிற்குரேன் உம்முடைய சக்கரத்தினாலே யென்னுடையசிர சைக் கண்டித்துப்போடுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

இறக்கமாயிருக்கும்பப்பர வாகனையெடுத்துமார்பில்
சிறக்கவேயணைத்துமாயன் உன்செய்கையால்வந்ததல்ல
தருக்குள்ள கங்கைசாபம் சம்பவித்ததினாலேதான்
செருக்களந்தன்னில்மாண்டான் செல்வனேதுயரம்வேண்டாம்

வசனம்.

பலவிதமாகத் தோத்தரித்துபுலம்புகிறபப்பரவாகனை மாரோ டே தழுவிக்கொண்டு உன்னுடைய செயலினால் வந்தகாரியமல்ல கெ ங்காதேவியினுடைய சாபத்தினாலே உன் தகப்பன் ரெணகளத்தில் மடிந்துபோனான் நீ புலம்பவேண்டாமப்பா பப்பரவாகா.

பப்பரவாகன் கவி.

ஐயனேபெரியதாதை அடியனாம்பிதாத்துரோகி
துய்யவுன்கெதையினாலே துஷ்ட்டனென்சிரசுதன்னை
பையவேஉடையுமென்று பரிவுடன்சொல்லும்போது
மெய்யதுதளர்ந்துவீமன் விருடன்சொல்லுவானே.

வசனம்.

கேளும் பெரியதகப்பனாகியசுவாமி அடியேன் பிதாத்துரோகி வந்தேன் உம்முடைய தெண்டாயுதத்தினாலே யென்சிரசை உடைத் து அடித்துப்போடுமையாசுவாமி பெரியதந்தையே.

வீமன் கவி.

பாதத்தில்வந்துவீழ்ந்த பாங்குள்ளமைந்தன்தன்னை
ஆதரித்தெடுத்தணைத்து அன்புகள்மிகவேகூறி

சோதிபோல்வதனமுள்ள சுந்திரமுகந்துடைத்து
பாதியாமழியணிந்த பகவந்தன்செயல்தானப்பா.

வசனம்.

அப்பா புத்திரசிகாமணியே நீயேன்விசாரபடுகிராய் ஒன்றாலே ஒருகாரியமும் நடக்கவில்லை பெல்லாம் யீசனுடைய செயிலினாலே யிப்பேர்ப்பட்டகாரியம் நடந்துவிட்டது நீ விசனப்படவேண்டாமப்பா குமாறகா.

ஆதிசேஷன் கவி.

பூமியைச்சுமக்கும்சேஷன் பொட்டெனஓடிவந்து
சுவாமியேகிருஷ்ணதேவா சருணமென்றடிபணிந்தேன்
கேமமாய்யமுர்தரத்தினம் நீருமேபெற்றுக்கொள்ளும்
தாமிஷமில்லாமர்த்தான் தனஞ்செயன்பிழைக்கச்செய்வாய்.

வசனம்.

ஸ்ரீ கிருஷ்தேவரே அடியேன் சருணம் சருணம் அமுற்தகலசமும் மிருதசஞ்சீவிரத்தினமும் கொண்டுவந்தேன் அதைவாங்கிக்கொண்டு அர்ச்சுனன்விஸ்வகேதுமுதலானசேனைகளை யெழுப்பவேண்டுமையசுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

சஞ்சீவியமுர்தரத்தினம் கையில்வாங்கி
சடுதியிலேறணகளத்தில் தேடிப்பார்க்க
மிஞ்சியதோர்விசையநிட சிரசைக்காணேம்
மேதினியில்யெவரெடுத்துப் போனாரய்யோ
கொஞ்சுமொழிதுரோபதைக்கி யென்னசொல்வேன்
குறையாச்சேயிந்தயிடர்வந்ததின்று
அஞ்சாத அர்ச்சுனனைக் காணவென்று
ஆதரவுகாணேனேயோ அண்ணலானே.

வசனம்.

இரணக்கள முழுதும் தேடிப்பார்த்தும் அர்ச்சுனனுடைய சிரசைக் காணேன் யெவர்கள் யெடுத்துக் கொண்டுபோனார்களோ சிரசு யில்லாமல் யெவ்விதமாய் யென்னமாயெழுப்பலாகும் தபக்குறையினாலே யிந்த யிடர்வந்து நேரிட்டதோ அக்கினியில் பிரந்தத்துரோபதை யானவள் புருஷனெங்கே யென்று கேட்டால் அதற்கு யென்ன சொல்லுவேன் கர்த்தனே.

கிருஷ்ணமூர்த்தி தரு.

அர்ச்சுனன் சிரசுதான்
ஆரெடுத்தார்களோ ஐயையோ
விர்ச்சனமாகவே விசையனெழுந்திட
விக்கினம்வந்ததே தையையோ
சிரசில்லாமல் பெழுப்பவுங்காரணம்
தேடும்வகையேதோ அய்யைய்யோ
முரசுக்கொடிபடைத்த தருமராசர்யாகம்
முடியாமல்வாச்சுதே அய்யைய்யோ
கொடிய அரக்கர்கள் முடியையெடுத்தார்களோ
கொடுமைக்கியென்னசெய்வேன் அய்யைய்யோ
மடிவேனுன்னுடன்கூட மடியாமற்போனாலும்
மனதுகலங்கிடுவேன் அய்யைய்யோ
உடலிருந்துமென்ன விடமுண்டகண்டர்வந்து
உகந்துசிரெடுத்தாரோ அய்யைய்யோ
கடலுலகில்விசையன் கீர்த்திவாரனென்றுசொல்லி
கெந்தர்வர்கெடுத்தாரோ அய்யைய்யோ

ஆதிசேஷன் கவி.

காமனையீன்றதேவா கல்மழைத்தடுத்தமாயா
மாமனைவதைத்தகிருஷ்ண உன்மகிமையினாலேயிப்போ
பூமியில்உயிரிழந்த புனிதனாம்விசையன்தன்னை
நேமமாயெழுப்புமென்று நிகழ்த்தினான்சேஷன்தானே.

வசனம்.

மன்மதனுக்குத் தந்தையாகிய கிருஷ்ணதேவா ஆயர்பாடியில் யிருக்கும்போது தேவேந்திரன் கல்மழைப் பொழியும்படிச்செய்ய நீர் கோவர்த்தினகிரியை குடையாகப் பிடித்து பசுக்களை காத்து ரக்ஷித்தாய் மாமனை சஞ்சனைவதைத்தாய் தங்களுடைய மகிமையா வராலும் அறியக்கூடுமோ மடிந்துபோன அர்ச்சுனனை உம்முடைய மகிமையினாலே யெழுப்பவேணுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

கர்த்தனார்கிருஷ்ணதேவர் கருணையால்மனமகிழ்ந்து
நித்தியபிர்ம்மாச்சாரி யென்றதும்மெய்யேயானால்

பக்தனார்சிரசுதானும் பரந்துமேலாகவென்று
சத்தியஞ்சொன்னேனிப்போ சபைதனிலறிந்திடுமே.

### வசனம்,

சகலரும் அரியத்தக்கதாக சந்தோஷகரமாய் ஸ்ரீநுவார்த்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் நான் நித்தியப் பிர்ம்மாச்சாரியாக யிருப்பது உண்மையானால் அர்ச்சுனனுடைய சிரசுயெங்கேயிருந்தபோதிலும் யிங்கே வரக்கடவது சத்தியமாகச் சொன்னேன் சபையோர்களே.

### பொது விருத்தம்.

நாரணனும்சத்தியமா யுரைத்தபோது
நன்மையுடன்விஜயனிட சிரசுதானும்
வாருதிக்கப்புறமிருந்து வாகாயத்தில்
வருகுதுகேசவனே பார்ப்பாயென்று
பூரணனேவைகுந்த வாசுதேவா
புண்ணியனேபரந்தாமா அபிப்பிறமேயா
காரணனே அரிகிருஷ்ணா அபையமென்று
கூடவுள் திருவடிதனிலே விழுந்ததன்றே.

### வசனம்

ஸ்ரீ கிருஷ்ணதேவர் சத்தியமாகச்சொன்ன மாத்திரத்தில்சந்தி சமுத்திரக்கு அப்புறமிருந்து அர்ச்சுனன் சிரசானது கிருகிரு வென்று ஆகாயத்தில்கிளம்பி அரிகிருஷ்ணா வாசுதேவா பரந்தாமா அபிப்பிரமேயா அரிமுகுந்தா அடைக்கலம் அடைக்கலமென்று முறையிட்டுக்கொண்டு ஸ்ரீபகவானுடைய திருவடியில்வந்து விழுந்தது.

### பொது கவி.

தேவனார்திருவடிக்கிச் சிரசுதான்வந்தபோது
பாவிதுர்ப்புத்திதுர்ம்பாகன் பலமெல்லாமொடிங்கிநின்று
ஆவிபோய்சிரசுதானும் ஆயிரஞ்சுக்கலாக
கேவலமாகஅங்கே கெடிதிகள்நேர்ந்ததன்றே.

### வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவன் திருவடியில் அர்ச்சுனன் சிரசுவந்து விழுந்தமாத்திரத்தில் சிரசைஒளித்து வைத்திருந்த துர்ப்புத்தி துற்பாக

னயிரண்டுபேருடைய சிரசு ஆயிரஞ்சுக்கலாய் வெடித்து விட்டது அப்போது கிருஷ்ணதேவர்சொல்லுகிற விருத்தாந்தங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி தரு.

தேவன்சிரசையுமெடுத்தார் கையில்
சிதைந்தைத்திருத்தியே முடித்தார்
ஆவலாகமுகந்துடைத்தார் அந்த
அர்ச்சுனன் அழகையும் பார்த்தார்
மீசைமுறுக்கியேசிரித்தார் அந்த
விசையன்சிரசையுடலில் பொருத்தார்
ஆசைஅமுர்தத் தெளித்தனர் அதில்
அடுத்தசஞ்சீவினை மூடினர்
நித்திரைசெய்தவன்போலுமே விசையன்
நிலைக்கவெழுந்திடுஞ் சாயமே
உத்தவில்வகைதேடியே சிரசை
உடலிற்பதிந்திட காடியே
மாணிக்கஅமுர்தத்தைக்காட்டினர் அந்த
மைந்தன்யெழுந்திடக் கூட்டினர்
ஆணிஅமுர்தத்தைத்தாவினர் கரத்தில்
அந்தசேனையெழுப்பக் கூவினர்-தேவ

பொது விருத்தம்.

வேகமுள்ள சஞ்சீவியமுர்தந்தன்னை
மிக்கவுமேசாத்தட்வாய்க்காட்டும்போது
பாகமுள்ளயானைபரிசேனையெல்லாம்
படுத்தவர்கள்யெழுந்தவர்போல்யெழுந்துமேவ
போகமுள்ளவானவர்கள்மலர்கள்தூவ
பொன்மாரிபெய்யகுளிர்க்காத்தடிக்க
காகுத்தன்மனங்களிக்கநர்ச்சுனமாக
கடலொலிபோல்வாத்தியங்கள் முழங்கிற்றன்றே

வசனம்.

அகோதெப்படி யென்றால் அமுர்தகலசமும்மிருதசஞ்சீவிரத்தினமும் காத்துமுகாந்திரமாகக்காட்டுகிறபோதுமடிந்தசேனைப்பரிவாரங்கள்எல்லாம் நித்திரைசெய்து யெழுந்தாப்போல் யெழுந்தார்கள்

அப்போது தேவர்கள்யெல்லாம்புஷ்ப்பமாரிதூவபொன்மாரி பொழியவிற்காத்கடிக்கநல்லசகுனங்களாகதேவதுந்துமி ஆர்ப்பரிக்கும்போதுவிஸ்வகேது சொல்லுகிற விதங்காண்க.

விஸ்வகேது கவி.

திடமுடன்விஸ்வகேது திடங்கொண்டெழுந்துசீறி
படபடவெனக்கடித்து பப்பிரவாகனனேயிப்போ
உடல்விழச்செய்வேனிப்போ ஒருக்கணைவில்லைத்தாக்கி
அடவுடன்மந்திரஞ்சொல்லி ஆரம்பம்செய்கின்றனே.

வசனம்

விஸ்வகேது யெழுந்திருந்து கோபங்கொண்டுபடபடவென்றுவில்லைக்கடித்து அடாபப்பரவாகா உன்னைச்க்ஷணப்பொழுதில் கொல்லுகிறேனென்று பாணப்பிரயோகம்செய்கிறபோது கிருஷ்ணதேவர் சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி கவி.

துரிதமாயெழுந்தவிஸ்வ கேதையும்கையமர்த்தி
சிறியவன்தம்பிமீதில் சினங்கொண்டுபோகலாமோ
பெரியவர்வந்துநிற்கப் பின்சண்டைசெய்யவேண்டாம்
சரிசமாதானமாகத் தயவுடன்நடந்திடீரே.

வசனம்.

ஸ்ரீகிஷ்ணதேவர் விஸ்வகேதைப்பார்த்து அடாதம்பிபோதும் போதும் சண்டையைநிருத்தும் அந்தபப்பரவாகன் அன்னியனே அவனும் உன்னைப்போலே அர்ச்சுனனுடைய பிள்ளையல்லவோ பெரியவரானவீமசேனன்வந்திருக்க அவர் உத்திரவுக்குமிஞ்சி நடக்கப்போகுமா யினிமேல் சமாதானமாகயிருங்களப்பா விஸ்வகேதா.

அர்ச்சுனன் கவி.

ஐயைப்பட்டெழுந்துபார்த்தன் அச்சுதன்திருவடிக்கி
கையையும்சென்னிமீதில் கருத்துடன்கூப்பிக்கொண்டு
பையரவணையின்மீது பள்ளிகொண்டெழுந்தமாலே
மெய்யனேயெந்தன்முன்பு யெழுந்திடுங்கடவுளானே,

வசனம்.

அர்ச்சுனமகாருஜன் பிறகு அஞ்சலித்து அஸ்த்தத்தினால் சிரசின் பேரில் கையைக் கூப்பிக்கொண்டு நாகத்தின்மேல் பள்ளிக்கொண்ட பராபரவஸ்த்துவே அடியேனுக்காக யெழுந்தருளிவந்த உடனே நான் தங்கள் திருவடிக்கிச் சருணம் சருணமையா சுவாமி.



அர்ச்சுனன் தரு.

தாளினைக்கேசருணம்யென்னையாளும் அய்யனேசருணம்
தாளிணைப்போத்தினேன் சுவாமிகிருஷ்ணதேவா
காளிங்கநடன ஒய்யாரமுகுந்தனே தா

எரணியனைவதைத்தாய் பிரகலாதனைக்கார்த்தாய்
முரகரிதேவனே மூவரிலொருவனே
கரிதனைரக்ஷித்த கண்ணாகோவிந்தனே தா

வேதமுதலோனேயெனக்கு ஆகாரமானவனே
சிதரனே அரி தேவகிந்[illegible]னா
பாதாரவிந்தத்தைப் பத்தினேன் அரிகரி தா

பூதகிப்பாலையுண்ணாய் அவள் வாதைப்படவேகொண்ணாய்
மாதவாயாதவா மண்ணினையுண்டவா
போதமென்ஞானம் புகக்ஷிப்பெறரக்ஷியும் தா

பப்பரவாகன் கவி.

பார்த்திபன்யெழுந்தபின்பு படைமன்னர்ப்படைகள்சேனை
கார்த்திடுங்கிருஷ்ணதேவர் களிப்புடன்சகலபேரும்
போற்றிடுங்களத்தைவிட்டு புகழ்மணிபுரத்தைநாடி
வாத்தியமுழங்கப்பப்பர வாகனனும்நடக்கின்றானே.

வசனம்,

அர்ச்சுன மகாராஜன் எழுந்திருந்த போது சகலராஜாக்களும் சேனைப் பரிவாரத்துடன் ஸ்ரீ கிருஷ்ணதேவரும் சந்தோஷமாக பப்பரவாகன் முதலானபேரும் ரணக்களத்தைவிட்டு மணிபுரத்திற்கு நடக்கிற விதங்காண்க.

பப்பரவாகன் தரு.

பயணம்நடப்போமே மணிபுர பட்டணம்நடப்போமே
பட்டணம்நடப்போமே பரிகரிரதத்துடன்
திட்டமாயரசர்கள் சேனைத்தலைவர்சூழ-பட்

சின்னங்களூதவிருதணர்கள் பன்னிமேயாட
ஆசீர்வாதம் முன்னமேஓத
பப்பிரவாகன் மன்னனுமிதோ
மந்திரிமாருடனந்த தேசத்துராசரும்
துந்துமியோசைகள் அதிர்ந்துமுழங்கிட-பட்

அனுருத்திரன்பிரத்திமன்னன் அனுசாளுவன்நீலத்துவசன்
மனுரதகெசமுள்ள கிருஷ்ணதேவர்காண்டீபன்
கனமுள்ளவிஸ்வகேது மேகவர்ணனுங்கூட
மனம்சரியாகவே மன்னர்கள்புடைசூழ-பட்

மங்களம்பாடரம்பையூர்வசி பெண்களுமாட
மாதர்கவுரீ தங்கமாய்ப்போட
மாயவன்கீர்த்தி யெங்குங்கொண்டாட
யெண்டிசைமன்னர்கள் தக்கன்கார்க்கோடகன்
நேசமாய்சேஷனும் தாசதாசனுமாக-பட்

நேசமாய்சேனைசூழத் தாசன்பப்பரவாகன்
வாசாகோசரமாக வருணகச்சேனையுடன்
வையசமதிக்க பப்பிரவாகனன்
மெய்யெல்லாங் களிக்க

தேசத்தரசர்களும் அபையமென்றேசொலிக்க
கிருஷ்ணதேவரைக் கைகூப்பியேதுதிக்க
கங்கைமதியணிந்த சங்கரனருளினால்
மங்களமாகவே யிங்கிதமுடன்வர-பட்

சோதிகளோடிஉன்னிதமான கீதங்கள்பாடி
விசையுடனே நகரதைத்தேடி
விந்தையுடனேவெகு சந்தோஷமாகவே
கந்தம்புஷ்ப்பமலர்கள் அந்திரத்தில்தூவவே-பட்

ஆதிசேஷன் கவி.

மணிபுரம்நகரைச்சேர்ந்து மகாகொலுமண்டபத்தில்
அணியணியாகச்சேனை அரசர்கள்வீத்திருக்க
களையினால்மாண்டெழுந்த காண்டீபன்தலையிரங்கி
உணர்விலாதிருக்கஆதி சேஷனுமுறைக்கின்றனே.

வசனம்.

சகல ராசாக்களும் மணிபுரத்திற்குவந்து சிங்காரக்கொலு மண்டபத்தில் ருசாக்களெல்லாம் வீத்திருக்க அர்ச்சுனமகாருசன் தலையெறக்கமாக முன்பின்தோணுமல் வெட்க்கப்பட்டிக் கொண்டிருக்கும்போது ஆதிசேஷன் சொல்லுகிறவிதங்காண்க.

ஆதிசேஷன் கவி.

காண்டீபாசொல்லக்கேளாய் கனத்ததோர்விசாரமாஞய்
வேண்டியகுமாரன்தானும் வில்வினால்உயித்தியம்செய்தான்
ஆண்டிடும்அன்னியநல்ல அவனபேரில்கோபம்வேண்டாம்
தூண்டுகைவிரல்கள்பட்டால் துணித்திடலாமோசொல்வாய்

வசனம்.

அர்ச்சுனமகாருசனே யேன்விசாரப்படுகிராய் உன்னுடைய குமாரன் தானே உன்னோடெதிர்த்து உயித்தியம் செய்தான் அன்னிய நல்லவே கைவிரலகள் கண்ணிற்பட்டால் அந்தவிரலைத் தரித்துப் போடுவார்களோ அர்ச்சுன யிபபடி சொல்லியும்பேசாமல் மவுனமாக யிருக்கும்போது மருபடியும் ஆதிசேஷன் சொல்லுகிற விதங் காண்க.

ஆதிசேஷன் கவி.

அசைவிலாச்சித்திரம்போல் அர்ச்சுனனயிருக்கக்கண்டு
நிசமதாய்ப்பப்பரவாகன் இமோர்ப்பர்வதைத்தைச்சார்ந்து
விசையுடனுயிரைமாய்க்க வேண்டியேபோருனிப்போ
வசமுடன்பிள்ளைதன்னை வளைத்துநீபேசுவாயே.

வசனம்.

கேளும் அர்ச்சுனமகாருஜனே நீர் செவுத்திலே யெழுதின சித்திரம்போலே பேசாமல் யிருப்பதைக்கண்டு உன்குமாரன் பப்பரவாகன் இமோர்ப்பர்வதத்திற்குப்போய்பிராணத்தியாகம் செய்துக்கொள்ளுகுறேனென்று ஆலோசனையாக யிருக்குறான் உன்னுடையகோபத்தை யடக்கி உன்குமாரனை அழைத்து ஆதரணைசெய்யுமையா அர்ச்சுனமகாராசனே யென்று சொல்லியும் பேசாமல்யிருக்க அமுசத்துவராசன் சொல்லுகிற விதங்காண்க.

அமுசத்துவசன் கவி.

பிள்ளைதான்குத்தம்செய்தால் பிதாவுமேபொருக்கவேண்டும்
கன்னிதான்குத்தம்செய்தால் கணவனும்பொருக்கவேண்டும்
துன்னியஅரசர்குத்தம் சுவாமிதான்பொருக்கவேண்டும்
எள்ளும்தண்ணீர்தானுனை யெரைப்பவருர்தான்மன்னு.

வசனம்.

அகோ கேளும் அர்ச்சுனமகாருஜனே பிள்ளையானவன் குத்தம் செய்தால் தகப்பன் பொருக்கவேண்டும் கலிஞ்சினமுள்ள ஸ்ரீசாதிகள்குற்றம்செய்தால் புருஷனானவன் பொருக்கவேண்டும் அரசனானவன் குத்தம்செய்தால் தெய்வம் பொருக்கவேண்டும் யிப்படி சாஸ்த்திரம் சொல்லியிருக்க குற்றம்செய்தபிள்ளையைக் கொன்றுவிடலாமோ நாளை யெள்ளுந்தண்ணீர் யெரைப்பவர் யார் சொல்லும் மகாருஜனே.

யெவர்ஜுசுவன் கவி.

ஆபத்தால்வந்தகுத்தம் அரசர்கள்பொருக்கவேண்டும்
சாபத்தால்வந்தகுத்தம் சுவாமியும்பொருக்கவேண்டும்
கோபமேபிள்ளைமீதில் கொடும்பகையகத்தவேண்டும்
சோபமாயிருக்கொண்ணாது சுதன்தனையழைத்திடாயே.

வசனம்

கேளுமையா அர்ச்சுனமகாருஜனே குடியானவர்கள் குத்தம் செய்தால் ருசாக்கள்பொருக்கவேண்டும் பெரியோர் சாபத்தினால்வந்த குத்தம் தெய்வம் பொருக்கவேண்டும் உன்கோபத்தைத்தணித்து குமாரனை அழைத்து ரக்ஷியும் மகாருஜனே.

ஆதிசேஷன் கவி.

உலகத்தையளந்தமாயா உத்தமா ஒருவிண்ணப்பம்
பலபலவிதத்தினாலும் பார்த்திபர்தனக்குமன்னர்கு
நயம்பெறயெவர்சொன்னாலும் நயமதுஉரைக்கவில்லை
பலந்தரும்விசையனுக்குப் பலித்திடஉறைத்திடடோ.

வசனம்.

பூமியை ஓரடியாக அளந்த அச்சுதானந்தா புண்ணியபுருஷோத்தமா அடியேன் ஒருவிண்ணப்பம் செய்குரேன் நம்மிடபிள்ளையினாலே யிப்பேர்ப்பட்ட அவமானம்வந்ததென்று அர்ச்சுனருஜன் தலையிறக்கமாக வெழ்க்கத்துடனே கடுஞ்சினமடைந்து யிருக்கிறான்தேவரீர் யிப்படி பார்த்துக் கொண்டிருப்பது ஞாயமல்ல ரக்ஷியுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

அவனியைத்தாங்கும்ஆதி சேஷனேசொல்லக்கேளாய்
கவனமாயிருவருக்கும் கருத்துரைத்தாலுங்கேளார்
உகமையில்பெரியோராக உத்தமன்வீமசேனன்
இவரிங்கேயிருக்கும்போது யெனக்கொன்றுந்தெரியாதப்பா

வசனம்.

கேளும்ஆதிசேஷமகாருசனே நீர் நல்லவார்த்தையைச்சொல்லவந்தாய் யிவர்கள் யிருவருக்கும் நாம் யெவ்வளவு பிரியவார்த்தைகளைச் சொன்னபோதிலும் கேழ்க்கமாட்டார்கள் யிதோ யெல்லோருக்கும் பெரியோரான வீமசேனமகாருசன் யிருக்குறார் சகலத்துக்கும் அவரேயல்லாமல் நமக்கொன்றும்தெரியாதப்பா ஆதிசேஷனே.

வீமன் கவி.

மன்னியஉலகோர்காண மாபெலியைசிறையில்வைத்தாய்
வெண்ணெயைத்திருடினார்ப்போல் வேடிக்கையாகச்சொன்னீர்
அண்ணலேஉந்தனாலே ஆகாதகாரியமுண்டோ
குண்ணியேசுதனும்பார்த்தன் குறைகளைத்தீர்த்திடாயே.

வசனம்.

பூமியையளந்த மாபலியை சிறையில்வைத்தபோனாடி ஆயர்பாடியில் வெண்ணையைத்திருடி உண்டதுபோலே யென்னுடனே பரிகாசமாகவேவிதமான வார்த்தைகளைச்சொல்லுகிறீர் உம்மாலாகாதகாரியமுண்டோ பிராணத்தியாகம் செய்துக்கொள்ளுகிறே னென்று சொல்லுகிற பப்பரவாகனையும் அர்ச்சுனன் யிருவருடைய வியாகூலத்தைத்தீர்த்து ரக்ஷிக்கவேண்டுமையா சுவாமி.



பப்பரவாகனன் கவி.

இப்படிவீமன்சொல்ல யெழுந்தவன்பப்பரவாகன்
அப்பனைக்கொன்றதுரோகி அவனியில்யிருக்கலாமோ
தெற்பையாசனத்தின்மீதில் க்ஷணத்தினிலுயிரைப்போக்க
துப்பறவாளெடுத்து தலைக்கருன் தலைக்கின்றேனே

வசனம்.

பப்பரவாகன் பிராணத்தியாகம் செய்துக்கொள்ளும் சமையத்தில் கிருஷ்ணதேவர் ஆதிசேஷனும் இருவரும் ஓடிவந்து பப்பரவாகனுடைய கையைப் பிடித்துக்கொண்டு அர்ச்சுனனுடைய பாதத்தில்போட அர்ச்சுனன் கோபத்தைவிட்டு பிள்ளையையெடுத்து தன் மார்போடணைத்து முத்தமிட்டு சொல்லுகிற விதங்காண்க.

அர்ச்சுனன் கவி.

என்னிடமகனேபப்பிர வாகனுசொல்லக்கேளாய்
கன்னியாள்கெங்கைசாபம் கருத்துடன்முடிந்ததப்பா
பின்னையும்யெனக்குக்கீர்த்தி பேர்பெறவுலகமெல்லாம்
சின்னமும்யில்லையப்பா சிருவனேயெழுந்திடாயே.

வசனம்.

யென்யன்புள்ள குமாரனுன பப்பரவாகனேகேளும் உன்னாலேயாதொருகாரியமும் நடக்கவில்லை யெனக்கு கெங்காதேவியினுடையசாபம்வந்து சம்பவித்துபின்னையும் யென்கீர்த்தியெல்லாம் உனக்கேயன்றிவேரில்லை உனக்கு ஒரு சின்னமும் வறமாட்டாது யெழுந்திருமப்பா குமாரகா.

பப்பரவாகனன் கவி.

யெழுந்துமேபப்பரவாகன் யெழிலுள்ளவிசையராசன்
செழுங்கடல்கடந்தமாயன் திருவடிவிழுந்துபாபம்
அழிந்திமேயெங்கள்தன்னை ஆதரியென்றுசொல்லி
குழந்தயென்றதாவென்று கூவியேதுதிக்கின்றானே.

வசனம்.

அர்ச்சுனனும் பப்பரவாகனனும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய திருவடியில் வீழ்ந்து சருணம் செய்து தோத்திரம் செய்கிறவிதங்காண்க.

அர்ச்சுனன் தரு.

வேணுகோபாலாவேணுகோபாலா விசித்திரலீலைசெய்தீர்
வேணுகோ பாலா சரு
காணவேதிருவடிக் கருதினேன்மூலா
கஞ்சனைவதைசெய்த மிஞ்சியகோலா

தாணுக்குள் நரசிம்ப மாகியகோலா
துவாரகாபுரியினில் வளர்ந்திடும்பாலா-வே
தேவகிவயித்தினில் பிறந்திடுங்குழந்தாய் சுரு
செல்வயசோதையின் மடியில்வளர்ந்தாய்
மூவடிவாங்கிவிண் மண்ணையுமளந்தாய்
முழுதும்மாபெலியைச் சிறைவைக்கத்துணிந்தாய் வே
மலைதனைக்குடையாய் மழைதனைதடுத்தாய் சுரு
மகாதேவநிட வர்மமத்தைத்தீர்த்தாய்
கலைதனைப்போக்கிய் மூலைதனைப்பிடித்தாய்
கட்டியணைந்துமே யுதிரத்தைக்குடித்தாய் வே
கொண்டவவிருக்கவும் அண்டையில்படுத்தாய் சுரு
கொக்கோகலிலைதன்னை முக்கியமாய்விடுத்தாய்
துண்டமாய்ப்பேசியே ஸ்ரீகளைக்கெடுத்தாய்
சோறகிருஷ்ணனென்று பேரும்படைத்தாய் வே
உரியினைத்தாவியே தயிர்களையுண்டாய் சுரு
உரலுடன்கட்டியுன்னை அடிக்கவுங்கண்டாய்
சரியென்றுசொல்லிய தாயுடன்நின்றாய்
சண்டைகள்முடித்திடும் சரசமானதுண்டாய் வே
மத்தாலடிபட்டு மன்மதுமகிழ்ந்தாய் சுரு
மாதருடன்கூடி யானந்தம்புணர்ந்தாய்
நித்தியபிர்ம்மாச்சாரி யென்றுமேபுகழ்ந்தாய்
நேராய்ப்பசுக்களை மேய்த்திடும்மைந்தா வே
ஆதிமூலங்கோவிந்தனே ஆதரிஅய்யா
அனேகந்திருவினே யாடியேனய்யா
அன்னைகோவிந்தனுக்கு அருள்தரும்நேயா
அதிராமாபனுக்கிர்ம்ம உய்யா னே

அர்ச்சுனன் கொச்சகம்.

அச்சுதனேகேசவனே ஆதிபுருஷோத்தமனே
மெச்சும்புவிதானளந்து விளங்குந்திருமாதவனே

இச்சைசெலவத்தேன்யெனதுபக்கில் வீருக்துவிளையாடியருள்
பச்சைநிறமேனியனே பருபதனேயென்கோவே.

வசனம்,

ஸ்ரீமன்னாராயணா அச்சுதா முகுந்தாப்ரூபத வஸ்த்துவே அடி-
யேனை ரக்ஷிக்கவேணுமையா சுவாமி.

கிருஷ்ணன் தரு.

தந்தேன் தந்தேனே வேண்டியவரம்
தந்தேன் தந்தேனே
தந்தேன்வேண்டியவரம் சிந்தைகளித்தேனே
வந்துன்னைக்காக்குறேன் மனதுமிகக்களிக்க-தந்

சிந்தையில்நினைப்போர்க்கு யெந்தனுளும்முத்தி
வந்துன்னைக்காக்குறேன் மகிபனேவோருய்-தந்

அஞ்சாத அய்வரை அரிகினில்காத்துமே
அனுதினம்நினைப்போர்க்கு வருந்துன்பந்தனைதீர்த்து
கொஞ்சும்முன்தேவியை பிரியாமல்ப்பார்த்து
கூட அஸ்த்தினபுரம் போகவேசேர்த்து-தந்

இனிமேல்வுனக்கொருவர் யெதிரிகளில்லை
யெதுத்தபேருக்கெல்லாம் அனேகமானதொல்லை
பனிநீங்கும்பரிதிபோல் பார்த்தநின்சொல்லை
பாருலகமெல்லாம் கீர்த்திபகல்ல-தந்

தர்மர் அஸ்வயாகம் முடித்திடவேணும்
சகலராசாக்களும் வந்திடக்காணும்
வர்ம்மம்வைக்காமலே மனதினில்தோணும்
வந்துமேனாளிருந்து பூர்த்திசெய்யவேணும்-தந்

கிருஷ்ணமூர்த்தி கவி.

பாண்டவர்குலத்துதித்த பார்த்தனேஐவருக்கும்
ஆண்டிடும்அரசுசெங்கோல் அழிவில்லாதருமமுந்தன்
வேண்டியபோதுமுடம் விரைவுடனரிகில்காப்போம்
தூண்டியயாகத்துக்குத் துணையதாயிருப்போம்நமே

வசனம்.

வாரும் அர்ச்சுனா உங்கள்யாவருக்கும் யாதொரு குறைவுமில்லாமல் யென்றென்றைக்கும் அரசும் செங்கோலுந்தந்தோம் யென்னை நினைத்தபோதே நான்வந்து உங்கள் பக்கில்யிருந்து ரக்ஷிப்போம் தருமராசன் செய்கிற அஸ்வமேதயாகத்துக்கு ஒருகுறைவும்வராமல் நடப்பித்து நம்மை நம்பின அடியார்களுக்கு யாதொரு தீங்கில்லாமல் ரக்ஷித்தோமப்பா அர்ச்சுனா.

அர்ச்சுனன் கவி.

பூதலத்தையளந்தநெடுமாலவர்க்கும்
புகழ்மதுரைமீனாக்ஷியம்மனுக்கும்
கோதிலாதர்ம்மர்ஐவர்பாஞ்சாலிக்கும்
கொமரிசித்திராங்கதையுலூர்வசிக்கும்
வேதமுடிமால்தங்கைசுபத்திரைக்கும்
வீரரணசூரன்பப்பரவாகனர்க்கும்
பேதமிகப்படிப்போற்கும்கேழ்ப்போர்க்கெல்லாம்
புகழ்பெறவேதிருமங்களங்கள்சொல்லுவேனே.

வாழி விருத்தம்.

வேதமென்றாரும்வாழி மேன்மையெந்தணரும்வாழி
சீதாமுகுந்தன்வாழி திருக்கதிர்மதியும்வாழி
நீதிபஞ்சவர்கள்வாழி நெரிப்பப்ப்ரவாகன்வாழி
மாதமும்மாரிபெய்ந்து வையகம்வாழிதானே.

இதுவுமது

இந்தகோர்சரித்திரத்தை யிசையுடன்விசாலமாக
அந்தமாய்ப்பாடினோரும் அவனியில்படிப்போர்கேழ்ப்போர்
சுந்திரமாலும்மாது துணையருள்பெத்துசெல்வம்
வந்திடுங்குறைவில்லாமல் மதிகுலம்வாழிதானே.



## மங்களம்.

மங்களம் திவ்வியசெய மங்களம்
அரிகிருஷ்ண தேவருக்கும் செயமங்களம்-நல்ல
புகழ்பெற்ற அர்ச்சுனர்க்கும் செயமங்களம்
ஸ்ரீகிருஷ்ண தேவருக்கும் தேவிசத்தியபாமைக்கும்
அரிகரிருக்மணிக்கும் அபிராமிவல்லியருக்கும் மங்

# பப்பிரவாகன் சண்டை நாடகம்.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# நூதன புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| காக்கேயர்நாடி | 0 | 12 | 0 |
| கந்தர்நாடி | 0 | 8 | 0 |
| வைதிய திரவுகோல் | 0 | 8 | 0 |
| புஜண்டர்நாடி | 0 | 5 | 0 |
| சோதிட அரிச்சுவடி 1-பாகம் | 0 | 3 | 0 |
| ஷை 2-ம பாகம் | 0 | 3 | 0 |
| வைத்திய அரிச்சுவடி 1-ம் பாகம் | 0 | 3 | 0 |
| ஷை 2-ம் பாகம் | 0 | 3 | 0 |
| வினாயர்கலியாண நாடகம் | 0 | 5 | 0 |
| புலந்திரன்தூது நாடகம் | 0 | 5 | 0 |
| வெங்கடேசப்பெருமாள் நாடகம் | 0 | 5 | 0 |
| காத்தமுத்து நாடகம் | 0 | 5 | 0 |
| இராமரிஷி நாடகம் | 0 | 5 | 0 |
| கிருஷ்ணன்தூது நாடகம் | 0 | 5 | 0 |
| நலாயினி நாடம் | 0 | 5 | 0 |
| குறவஞ்சி நாடகம் | 0 | 5 | 0 |
| மாடுபிடிசண்டை நாடகம் | 0 | 5 | 0 |
| அரவான் கடபலி நாடகம் | 0 | 5 | 0 |
| அல்லி நாடகம் | 0 | 5 | 0 |
| திருநீலகண்டர் நாடகம் | 0 | 5 | 0 |
| வாலிமோக்ஷ நாடகம் | 0 | 5 | 0 |
| அபிமன்னன் சண்டை நாடகம் | 0 | 8 | 0 |
| அபிமன்னன் கலியாணநாடகம் | 0 | 5 | 0 |
| மின்னொளி குறவஞ்சிநாடகம் | 0 | 5 | 0 |
| கயநாடகம் | 0 | 5 | 0 |
| கர்ணமோக்ஷ நாடகம | 0 | 5 | 0 |
| மாணிக்கவாசகர் நாடகம | 0 | 5 | 0 |
| சுந்தரிமாலையீடு நாடகம | 0 | 8 | 0 |
| பவளக்கொடி நாடகம | 0 | 5 | 0 |
| அரக்குமாளிகை நாடகம | 0 | 5 | 0 |
| ஏணியேற்ற நாடகம | 0 | 5 | 0 |
| துளசிதாசர் நாடகம | 0 | 5 | 0 |
| முருகத்தியானம்சக்கரத்துடன் | 0 | 5 | 0 |
| தாடகைசம்மார நாடகம | 0 | 5 | 0 |
| பாரதப்போரில் முதல்நாள்சண்டை நாடகம | 0 | 5 | 0 |
| பதினாலாம்நாள் சயிந்தவன்சண்டை நாடகம | 0 | 5 | 0 |

எமது விலாசம்

சூளை-முனிசாமி முதலியார்

கறையசங்குட்டைவீதி நெ. 54-சூளைபோஸ்டுமதராஸ்